தமிழீழ ஆவணக் காப்பகம்


# எரிமலை

ஏப்ரல் 1998



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




# அக்கறைப் பூக்கள்

அன்புடன் எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,

சுயநலமெனும் சூனி இருள் சூழ்ந்த நாட்டிலிருந்து எழுதுகிறேன். என்ன நிகழ்ந்தாலும் பரவாயில்லை எனது உறக்கத்தை மட்டும் கெடுக்காதே என்று உறங்கும் நாட்டில் இருந்து எழுதுகின்றேன். பதவிக்காக, பணத்திற்காக, நாற்காலிக்காக அலையும் நாட்டில் இருந்து எழுதுகின்றேன். இப்படியான தொரு சூழ்நிலையில் உங்களுக்கு பெரிதாக உதவிட முடியாத இழிநிலை உள்ள நாட்டில் இருந்து எழுதுகின்றேன். ஆனாலும் ஒரு சிறிய மெழுகுவர்த்தியைக் கொண்டாவது ஒரு வெளிச்சத்தைக் கொடுக்க முடியும் என்ற நம்பிக்கையால் இங்குள்ள எனது நண்பர்களுக்கு, உங்களது வீரம்செறிந்த போராட்டங்களைப் பற்றியும் மகத்தான தியாகங்களைப் பற்றியும், அப்பாவித் தமிழ் மக்கள் படும் சொல்ல முடியாத துயரங்களைப் பற்றியும் கூறிவருகிறேன். இதுவரை இதற்கு உதவியாக இருந்த எரிமலை திடீரென வரவில்லை என்று வாசிக்க இதழ்தரும் தோழர் மூலமாக அறிந்தேன். எனவே களத்தில் நடக்கும் செய்திகளை கண்ணுற எரிமலையை எனக்கு அனுப்புமாறு கேட்டுக்கொண்டு நன்மை பயக்கும் தமிழீழம் நாளை மலரும் இந்நேரம் என்று வாழ்த்தி இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

இப்படிக்கு
தங்கள் அன்புள்ள
கோ. தமிழ்ச்செல்வன்
சேலம்
தமிழ்நாடு

**

எரிமலை ஆசிரியருக்கு,

எங்கள் எரிமலை இதழை தவறாமல் பெற்று படிப்பவன் நான். தாயகத்து நிகழ்வுகளை தாங்கி வரும் இதழ்களில் தனித்தன்மை வாய்ந்தது எரிமலை. போர் பரப்புரை செய்திகள் தொடக்கம் கவிதை– கதை என அனைத்து விடயங்களையும் கருத்தாழத்துடனும், கடமையுணர்வுடனும் தாவி வருகின்றது எரிமலை.

விடுதலைப் பயணம் வேகம் பெற, எரிமலையின் பணி மேலும் வளர வாழ்த்துகிறேன்.

இங்கணம்
நல்லூர் சதீஸ்
ஜேர்மனி

**

மதிப்பிற்குரிய எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்

“இனிய தமிழ்ப் புத்தாண்டு நல் வாழ்த்துக்கள்”

நீங்கள் அனுப்பி வைத்த ஜனவரி–பெப்ரவரி மாத எரிமலை மற்றும் பாலம் இதழ்கள் *10.04.98* அன்று கிடைக்கப்பெற்றேன். மிக்க நன்றி. எனக்கு சென்ற வருடம் ஜூன் மாத எரிமலை கிடைத்தது பிறகு ஜூலை, ஆகஸ்ட், செப்டம்பர் மாத இதழ்கள் கிடைக்கவில்லை. ஒக்டோபர் மாத இதல்கள் கிடைக்கவில்லை. *1998*–ல் மார்ச்ச, ஏப்பிரல் மாத இதழ்கள் கிடைக்கவில்லை.

தமிழ் ஈழத்தில் நடக்கும் உண்மை சம்பவங்களை நாங்கள் எரிமலை இதழ் மூலம் தான் துல்லியமாக அறிந்து கொள்ள வாய்ப்பு உள்ளது. ஆகையால் தயவுசெய்து இதழ்களை தவறாமல் அனுப்பிவைக்கவும்.

நன்றி
இப்படிக்கு
முனீஸ்வரன்
தமிழ்நாடு

**

பேரண்புமிக்க “எரிமலை” ஆசிரியர் அவர்களுக்கு வணக்கம். தாங்கள் அனுப்பி வைத்த நவம்பர் –டிசம்பர் *1997* மாத எரிமலை இதழ்கள் கிடைக்கப்பெற்றேன். மிக்க மகிழ்ச்சி. நான் “எரிமலை” யை ஒவ்வொரு பக்கமும் விடாமல் படிக்கின்றேன். டெல்லியில் நடைபெற்ற ஈழத்தமிழர் ஆதரவு மாநாடு கட்டுரை தொகுப்பு சிறப்பாக தொகுத்து அளித்துள்ளீர்கள். மிக்க நன்றி அடுத்து எமக்கு வீடியோ கேசட், ஒளிவீச்சு ஆகியவை அனுப்பி வைக்கவும். நான் தங்களுக்கு “நிதி உதவி” செய்ய விரும்புகின்றேன். யார் மூலமாக? எப்படி? செலுத்துவது என்று தெரியப்படுத்தவும்.

நன்றி

அன்புடன்
எரிமலை வாசகன்
பெ. வீரமணி
பாணாவரம்
தமிழ்நாடு

**

மதிப்பிற்குரிய எரிமலை ஆசிரியர் அவர்களுக்கு,

வணக்கம்.

தாயகத்தின் உண்மைச் சம்பவங்களைத் தாங்கி வரும் எரிமலை எமக்கு அங்குள்ள நிலவரங்களை அறிவதற்கு மிகவும் பேருதவியாக இருக்கின்றது.

ஒவ்வொரு பக்கங்களையும் தவற விடாது படித்துவருகின்றேன். ஆனால் எரிமலை இதழ் எனக்கு தாமதமாகவே வந்துசேர்கின்றது. விரைவில் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். நன்றி.

எஸ். நந்தா
மலேசியா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே...



கிளிநொச்சித் தாக்குதல் – பக்கம்04



ஓடி ஒளியும் சிங்களப் படைகள் – பக்கம்07



பாரிய கடற்சண்டை – பக்கம்08



பொன்னான வாய்ப்பு – பக்கம்16




அன்னை பூபதி – பக்கம்22



கண்டியில் குண்டுவெடிப்பு – பக்கம்24


★ நில அபகரிப்பிற்காக கிராமப் படுகொலைகள் – பக்கம்10

★ தலைதெறித்த மனிதர்களாகக் காட்சிதரும் சிங்கள ஆட்சியும் படைத்தரப்பும். – பக்கம்12

★ சந்திரிகாவின் ஒப்புதல் வாக்குமூலம் ஒரு புதுவகைத் தந்திரம். – பக்கம்14

★ உள்ளே கொதிப்புறும் ஒரு மனச் சாட்சியின் குரல். – பக்கம்19

★ தேசியப் பொறுப்பும் காலப் பணியும். – பக்கம்26

★ தாங்கமுடியாத யுத்தச் சுமையால் வங்குரோத்தாகும் சிறிலங்கா. – பக்கம்28

★ சிக்கித் தவிக்கும் சிங்கள அரசு. – பக்கம்32

★ விரும்பாதது – சிறுகதை. – பக்கம்34

★ காலத்தினூடு நிகழும் பயணம். – பக்கம்37

★ எதற்காக – சிறுகதை – பக்கம்40

★ ஐ.நா. பிரதிநிதி தமிழ்ச் சிறுவர் கண்டு கவலை. – பக்கம்43

★ களத்திலிருந்து ஒரு குரல். – பக்கம்47




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



கலை, இலக்கியங்கள் இன்றைய போராட்ட வாழ்வை சித்தரிப்பதாக அமையவேண்டும். இன்றைய காலத்தை உருவகிப்பதாக அமைய வேண்டும். இன்றைய வரலாற்றுப்போக்கை பதிவுசெய்வதாக இருக்க வேண்டும்.

கலையும், இலக்கியமும் வாழ்க்கையை கருப்பொருளாகக் கொண்டவை, வாழ்க்கையை தரிசித்து நிற்பவை, வாழ்பனுபவத்தை குறியீடு செய்பவை. இன்று எமது வாழ்வும், வாழ்வனுபவமும் விடுதலை வேண்டிய ஒரு போராட்டத்துடன் பிணைந்து நிற்கிறது. இந்தப் போராட்டச் சூழ்நிலையே எமது வாழ்வை நிர்ணயிப்பதாகவும் அமைந்துவிட்டது. எனவே, எமது கலை, இலக்கியங்கள் இந்தப் போராட்ட வாழ்வின் தன்மைகளை, அந்த வாழ்வில் பிறக்கும் ஆழமான அனுபவத்தழும்புகளை, உணர்வுகளை சித்தரித்துக் காட்ட வேண்டும். அதே வேளை விடுதலை என்ற உன்னதம் பற்றி விழிப்புணர்ச்சியைத் தோற்றுவிப்பதாக அமையும் போது அவை சிறப்புப் பெறுகின்றன. மானிட விழுமியங்களை வலியுறுத்தி, மனித மேம்பாட்டை குறிக்கோளாகக் கொண்ட படைப்புக்களே சிகரத்தை எட்டுகின்றன. தமிழீழப் போராட்டச் சூழலில் இன்று மையம் கொண்டிருக்கும் இலக்கிய எழுச்சி எதிர்காலத்தில் அதி உன்னதமான ஆக்க இலக்கியங்களைப் படைத்து உச்சங்களைத் தொடும் என்று திடமாக நம்புகின்றேன்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**

**மேதகு. வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்கள்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்




கலை பண்பாட்டு
அரசியல் சமூக ஏடு

★

பதினைந்தாம் ஆண்டு
ஏப்பிரல் 1998

★

ஆக்கங்கள்
அபிப்பிராயங்கள்
மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**

தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
*C/O T.C.C-France,*
*341, Rue des Pyrenees,*
*75020 Paris.*
*Tel: 01 - 43 58 11 42*

# வெளிச்சம் பெறும் தமிழீழத்திற்கான பாதை

இனவாத சந்திரிகா அரசுடனான தமிழர்களது பேச்சுவார்த்தைகள் முறிவடைந்து மீளப்போர் தொடங்கி மூன்று ஆண்டுகள் கடக்கும் இவ்வேளையில், தமிழீழ விடுதலைக்கான அரசியல் இராணுவ சாத்தியங்கள் என்றுமில்லாதவாறு அதிகரித்துக் காணப்படுகின்றது. மரபு ரீதியான உட்கட்டுமானத்துடன் எமது தேசிய விடுதலைக்கான போரணிகள் வன்னியில் புரிந்து வரும் சமர், நாம் எம் தாயகத்தை மீட்டு எல்லைகளை வரையறை செய்து சுதந்திர தமிழீழத் தேசத்தைப் பிரகடனப்படுத்தும் காலம் வெகுதொலைவில் இல்லை என்பதைப் புலப்படுத்துகின்றது. எமது தமிழர் தரைப்படையின் போர் நடவடிக்கைகளில் பீரங்கிப் படையணிகளும், டாங்கி எதிர்ப்புப் படையணிகளும், விமான எதிர்ப்பு அணிகளும் இன்று காத்திரமான பங்கு வகிக்கின்றன. பயிற்றப்பட்ட பல்லாயிரம் இளைஞர்களும், யுவதிகளும் தரைப்போரின் பல்வேறு நகர்வுகளில் வீரச்சாதனை புரிந்து வருகின்றனர். எமது கடற்போரணிகள் அண்மைக் காலமாக சிங்களக் கடற்படையுடன் கடற்பரப்பில் நடாத்தும் பலமணிநேரச்சமர் எங்களின் கடற்படை உருவாகிவிட்டதென்பதற்கான சான்றாகும். எமது வான்பரப்பை வெற்றி கொள்ளும் போரியல் பலத்தையும் தமிழீழம் தன்னகத்தே கொள்ளும் என்பது புலிகளின் போர்ப் பரிணாமத்தை ஆராயும் உலக சமூகத்திற்குத் தெளிவாகப் புரியும்.

இதுதான் எம் விடிவிற்கான ஆதாரமாகும். எம் தமிழர் தாயகம் விடுவிக்கப்பட்டு எம் மக்களால் ஆளப்படும் தேசிய இறைமை கொண்ட தேசமாக உருவாக வேண்டுமாயின் அதற்கான பிரதான தடையாக நிற்கும் அந்நிய ஆக்கிரமிப்பு விரட்டியடிக்கப்பட வேண்டும். அதனை சாதிப்பதற்கு எமது தமிழர் போரணிகள் முழுமையான பலத்தினைப் பெற்றிருக்க வேண்டும். இன்று தேசியத் தலைவரின் வழிகாட்டலில் உருவான ஒரு மரபு ரீதியான போரணி தமிழீழத் தேசத்திற்காக உருவாக்கிவிட்டது. அது தன் முழுமையான பலத்தினை பெறும்போது அங்கு தமிழீழம் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும்.

உலக இயக்கப்போக்கும், அதனது இராஜதந்திர அமைவுகளும் நாம் எமது சொந்த பலத்தின் அடிப்படையில் தமிழீழத்தைப் பிரகடனப்படுத்தும் போது அதனை அங்கீகரித்து எம்மோடு உறவாட தயாராகும். இதுதான் இன்றைய பனிப்போருக்குப் பிற்பட்ட காலத்தின் அரசியல் இராஜதந்திர உண்மையாகும். சிங்கள தமிழ் தேசங்களின் முரண்பாட்டை தீர்ப்பதற்கு சர்வதேச மத்தியஸ்துவம் தேவையென ஏற்றுக்கொள்ளும் உலக சமூகத்திடம், நாம் இரத்தம் சிந்தி, வியர்வை சிந்தி மீட்கும் தேசத்தை அங்கீகரிக்கக் கோரும் தார்மீக உரிமை எமக்கு உள்ளது. இதற்கான சர்வதேச கடமைகளை புலம்பெயர்ந்து வாழும் தமிழ்ச் சமூகம் மேற்கொள்ள வேண்டும்.

உலகத் தமிழர் தேசியத்தின் ஒன்றுபட்ட நேர்மையான கோட்பாட்டின் அடிப்படையிலான பலமானது எமது விடுதலை இயக்கம் போர்க்களத்தில் பெறும் வெற்றிகளுக்கு மகுடம் சூட்டும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## கிளிநொச்சி தாக்குதல் :

# வெட்டியெடுக்கப்பட்ட 'கேக்' துண்டு



ஆனையிறவு– பரந்தன்– கிளிநொச்சி இராணுவக் கூட்டுத் தளம் மீண்டும் ஒருமுறை புலிகளின் பெருந்தாக்குதலுக்கு உட்பட்டுள்ளது. 01.02.98 அன்றைய தாக்குதலின் போது கிளிநொச்சிப் படையினரின் முன்னரங்கப் பகுதிகளை உடைத்தெறிந்து புகுந்த புலிகள், நகரின் மையப் பகுதி வரை முன்னேறி குறித்தளவு நிலத்தையும் மீட்டெடுத்துள்ளனர்.

இந்த நில மீட்பு விடயத்தை இன்றுவரை படைத்தலைமை ஏற்க மறுக்கின்றது. ஆனால் இந்த உண்மைக்கும் அப்பால் கிளிநொச்சிப் பகுதியும் – பரந்தன் பகுதியும் புலிகளிடம் வீழ்ந்து விட்டது என்ற வதந்தி தென்னிலங்கையில் பரவியது. இந்த வதந்தியை மறுப்பதற்காக தென்னிலங்கைப் பத்திரிகையாளர்களை கள முனைக்கு அழைத்துவரவேண்டிய நிர்ப்பந்தம் படைத்தலைமைக்கு எழுந்தது. பரந்தனும்– கரடிப்போக்கும் படையினரின் பிடியிலேயே உள்ளது. ஆனால் கிளிநொச்சி நகரின் மையம் புலிகளின் கைகளிலேயே உள்ளது என்ற உண்மையை பத்திரிகையாளர்கள் அம்பலப்படுத்தினர்.

தாக்குதலுக்கு முன்னர் படையினர் நிலைகொண்டிருந்த டிப்போ சந்திப் பகுதியிலிருந்து சுமார் 2 கிலோமீற்றர் தூரம் பின்வாங்கி, இப்போது கிளிநொச்சி வைத்தியசாலைப் பகுதியை முன்னரங்காக்கி படையினர் அரண் அமைத்து நிலைகொண்டுள்ளனர்.

டிப்போ சந்தியில் இராணுவம் குடிகொண்டிருந்த காலத்தில் அங்கிருந்து சுமார் 3 கி.மீ முன்னாலிருந்த தொலைத்தொடர்புக் கோபுரப் பகுதிவரை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியாகவே இருந்தது.

இந்த வகையில் இராணுவம் நிலைகொண்டிருந்த கிளிநொச்சிப் பகுதியில் 2 கி.மீ மீள நிலப்பகுதி அன்றைய பெருந் தாக்குதலில் மீட்கப்பட்டுள்ளது என்றாலும், உண்மையில் மொத்தம் 5 கி.மீ நீள நிலப்பகுதி அத்தாக்குதலின்பின் புலிகளின் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. இதனால் ஜெயசிக்குறுய் படையினர் நகர வேண்டிய தூரம் 5 கி.மீ களினால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இன்றைய களநிலவரத்தைப் பொறுத்தவரையில் 5 கி.மீ தூரத்தைக் கைப்பற்றி நிலைகொள்வதென்பது ஒரு பற்றாலியனை இழந்தாவது சாதிக்கக்கூடியதொன்றா என்று கேள்வி எழுவது இயல்பானதே.


01.02.98 அன்றைய பெருந் தாக்குதலையும் – அடுத்து சில நாட்கள் தொடர்ந்த நேரடிச் சண்டைகளுக்கும் பின்னர், புலிகள் தங்களது முன்னரங்கப் பாதுகாப்பு அரண்களை படையினரின் தற்போதைய முன்னரங்க நிலைகளுக்கு (வைத்தியசாலைப் பகுதி) மிக அருகில் அமைத்துள்ளனர்.

புலிகள் கைப்பற்றிய கிளிநொச்சிப் பகுதியை மீண்டும்

**கிளிநொச்சிப் பகுதியை மீண்டும் கைப்பற்றிவிட பத்துத் தடவைகளுக்கு மேல் படையினர் முயற்சி எடுத்திருந்தனர். ஒரு நாளில் மட்டும் 5 தடவைகள் முயன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் அவர்களது அனைத்து முயற்சிகளும் புலிகளின் தீவிரமான எதிர்த்தாக்குதல்களினால் முறியடிக்கப்பட்டன.**



www.tamileelamarchive.com




கைப்பற்றிவிட பத்துத் தடவைகளுக்குமேல் படையினர் முயற்சி எடுத்திருந்தனர். ஒரு நாளில் மட்டும் 5 தடவைகள் முயன்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. ஆயினும் அவர்களது அனைத்து முயற்சிகளும் புலிகளின் தீவிரமான எதிர்த் தாக்குதல்களினால் முறியடிக்கப்பட்டன.

பின்புலமாக ஒரு பாரிய இராணுவத்தளத்தைக் கொண்டிருந்த போதும் இழந்த 2 கி.மீ நீள நிலப்பகுதியை மீண்டும் கைப்பற்றமுடியாது போனது, ஒரு புதிய இராணுவ யதார்த்தத்தை வெளிப்படுத்தியுள்ளது.

அதாவது, இனிமேல் புலிகளின் எதிர்ப்புகளை முறியடித்துக்கொண்டு முன்னேறி ஒவ்வொரு அங்குல நிலத்தையும் ஆக்கிரமிப்பது என்பது சாதாரண விடயமல்ல என்பதையும் அதற்காக பலியிடப்போகும் படையினரின் எண்ணிக்கையும்– சாதாரணமாகி இருக்கமாட்டாது என்பதையும் இந்தப் புதிய இராணுவ யதார்த்தம் படைத்தலைமைக்கு உணர்த்தியிருக்கும்.

இந்தப் புதிய இராணுவ பரிமாணத்தைத்தான் மாங்குளம் சண்டை முனையிலும் படையினர் எதிர்கொள்கின்றனர்.

புலிகள் பயன்படுத்தும் பெருந்தொகையான எறிகணைகளும்– அவை வெகு துல்லியமாக எதிரி இலக்குகளைத் தாக்குவதும்– மற்றும் மரபுப் போர் முறையில் புலி வீரர்கள் பெற்றுள்ள சண்டைத் திறனில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியும் மேற்குறித்த புதிய இராணுவ பரிமாணத்திற்கு அடிப்படைக்காரணிகளாக உள்ளன. இந்த இராணுவ அம்சங்கள் காரணமாக முன்னெப்போதும் இல்லாத வகையில், இப்போது படையினர்– நேரடிச் சண்டைகளில் பெரியளவில் உயிரிழப்புக்களைச் சந்திக்கின்றனர்.

சிங்களத்துப்படைகளுக்கு எதிராக தமிழர் சேனை பெற்றுள்ள இந்த மகிழ்ச்சி தரக்கூடிய மரபுப் போர்ப் பலம் தலைவர் பிரபாகரனின் அயராத முயற்சியாலும்– அவரது இராணுவ நிபுணத்துவத்தினாலும்– அவர் வரைந்து நடைமுறைப்படுத்தும் புதிய புதிய தாக்குதல் தந்திரோபாயங்களினாலும் பெறப்பட்டுள்ளன.

மாங்குளம் முனையிலும் சரி– கிளிநொச்சி முனையிலும் சரி ஜெயசிக்குறுய் படையினரின் நகர்வு நடவடிக்கைகள் ஒருவித ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளன. ஆயினும் இந்த இயலாமை நிலையை மறைத்து – அதை நியாயப்படுத்துவதற்காக புதிய, புதிய– இராணுவத் தந்திரோபாயச் சொற்களை சிங்கள இராணுவ வாதிகள் பயன்படுத்துகின்றனர்.

> **'மெதுவான நகர்வு முறை' என்றும் 'ஊர்ந்து நகர்ந்து கைப்பற்றுதல்' என்றும் 'தகுந்த நேரத்திற்காகக் காத்திருக்கிறோம்' என்றும் சிங்களப் படையின் இயலாமைக்கு இராணுவ விளக்கம் அளிக்கப்படுகின்றது.**

'மெதுவான நகர்வு முறை' என்றும் 'ஊர்ந்து நகர்ந்து கைப்பற்றுதல்' என்றும் 'தகுந்த நேரத்திற்காகக் காத்திருக்கிறோம்' என்றும் சிங்களப் படையின் இயலாமைக்கு இராணுவ விளக்கம் அளிக்கப்படுகின்றது.

ஆனால், உண்மையில் ஜெயசிக்குறுவின் சமர்த் தந்திரமாக வேகமான நகர்வும் – விரைவான படை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நகர்த்தலுமே இருந்தன. ரத்வத்த வின் புகழ் வாய்ந்த காலக்கெடுக்கல் இந்த உண்மையை நிரூபிக்கப் போதுமானவை. ரத்வத்த— தளுவத்த குழுவினரின் இராணுவ ஆசை ஈடேறவில்லை என்பதை களநிலவரம் நிரூபித்துவிட்டது. இராணுவத்தின் திட்டப்படி இப்போது ஜெயசிக்குறுய் நகரவில்லை. இதனாலேயே நகர்வுத் தந்திரோபாயச் சொற்பதங்களை துணைக்கிழுத்து சிங்களத்தின் இராணுவ இயலாமையை மூடிமறைக்க முயல்வதுடன் தனது திட்டப்படியே படைநகர்வு நடைபெறுவதாக படைத்தலைமை பாவனை செய்ய விரும்புகின்றது.

தனது இராணுவத் தளங்களின் எல்லைகளை படிப்படியாக விரிவாக்கிக் கொண்டு செல்வதுதான். சிங்களத்தின் இராணுவ இயல்பு.

இதேவேளை, பாரிய இராணுவத் தளங்களின் ஒரு பகுதி மீது புலிகள் தாக்குதலை நடாத்தினால் படையாட்களைக் கொன்று— ஆயுதங்களைக் கைப்பற்றுவது அல்லது அழிப்பதுடன் தாக்குதல் நடாத்திய பகுதியை விட்டு பின்வாங்கி விடுவது புலிகளின் பொதுவான வழமையாக இருந்தது.

ஆனால், ஆனையிறவு— பரந்தன்— கிளிநொச்சி இராணுவக் கூட்டுத்தளம் மீதான இத்தாக்குதலின் போது புலிகள் தங்களது வழமையை மாற்றி— கைப்பற்றிய பகுதியிலும் நிரந்தரமாக நிலை கொள்ள முயன்றனர்.

**புலிகள் விடுத்த இராணுவச் சவாலை வெற்றி கொள்ள இராணுவத்தலைமையும்— ஆனையிறவுக் கூட்டுத் தளப்படையினரும் கூட்டாக முயன்றனர். ஆனால் அனைத்து முயற்சிகளிலும் படையினர் தோற்றனர்.**

தனது தளங்களின் எல்லைகளை விஸ்தரிப்பதையே இலட்சியமாகக் கொண்ட படைத் தலைமைக்கு— தனது தளமொன்றின் பகுதியை கைப்பற்றிய புலிகள், அங்கே தொடர்ந்தும் நிலைகொண்டதை ஜீரணிக்க முடியவில்லை. இதை ஒரு இராணுவச் சவாலாக சிங்களம் எடுத்தது. இராணுவத்தின் கௌரவப் பிரச்சனையாகவும் அது மாறியது. புலிகள் விடுத்த இராணுவச் சவாலை வெற்றி கொள்ள இராணுவத் தலைமையும்— ஆனையிறவுக் கூட்டுத் தளப்படையினரும் கூட்டாக முயன்றனர். ஆனால் அனைத்து முயற்சிகளிலும் படையினர் தோற்றனர். இறுதியில், கைப்பற்றிய பகுதியில் நிலைகொள்வது என்று புலிகள் எடுத்த முடிவை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி, ஒரு புதிய இராணுவ சாதனையை புலிகள் நிலை நாட்டியுள்ளனர்.

★★★

## "புலிகளின் குரல்" வானொலிக் கலைஞர்களுக்கு தமிழீழத் தேசியத்தலைவரின் தங்கவிருதுகள்.

18.02.98 அன்று தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்கள் புலிகளின் குரல் கலைஞர்களுக்கான சந்திப்பொன்றில் உரையாற்றியதுடன் கலைஞர்களுக்கு தங்க விருதுகளையும் சிறப்புப் பரிசில்களையும் வழங்கி கௌரவித்துள்ளார்.

எமது தேசியத்தை மீட்டெடுப்பதற்கான போர் உச்சத்தை எட்டியுள்ள இன்னேரத்தில் போருடன் இணைந்து எம் தேசத்தை நேசித்து வெற்றிக்கு அரும்பாடு பட்டு உழைக்கும் இந்தக் கலைஞர்களுடனான சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

இந் நிகழ்வில் "நாளை மலரும் தமிழீழம்" எனும் பாடலைப் பாடிய சுப்பிரமணியம் தவமலருக்கு தேசியத் தலைவர் அவர்கள் தங்க விருதினையும் சிறப்புப் பரிசில்களையும் வழங்கி கௌரவித்தார்.



"தனியாகப் பிரிந்து தனியரசு அமைப்பதே எமது பிரச்சினைக்கு இறுதியான ஒரே தீர்வு என்பதில் நாம் மனம் தளராது உறுதியாக இருக்க. நாம் தனமானத்துடன் சுதந்திரமாக, நிம்மதியாக வாழ்ந்து எமது சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்துவதாயின் எமக்கு தமிழீழத் தனியரசை அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை."

தமிழீழத் தேசியத் தலைவர்
திரு. வே. பிரபாகரன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## அபாயச் சங்கொலி ஒலித்ததும்

# ஓடி ஒளியும் சிங்களப் படைகள்

**சுதந்திர தினத்தின் பொன் விழா நினைவுகளை கொண்டாட முனைந்த படையினர் சங்கொலி கேட்க "ஆத்துப்பறந்து" பங்கர்களுக்குள் போய் ஒதுங்கிக்கொண்டனர். கொடியேற்றமும் போச்சு, சுதந்திரதினமும் போச்சு.**



வரலாற்றில் ஒரேவிதமான சம்பவங்கள்தான் திரும்பத் திரும்ப நடக்கின்றன என்று சொல்கிறார்கள். இது உண்மையா? நீங்கள் நம்பினால் நம்புங்கள். இல்லாவிட்டால் விடுங்கள் நான் நம்புகிறேன்.

ஏனென்றால் என் கண்முன்னாலேயே ஒரே சம்பவம் திரும்பவும் திரும்பவும் நிகழ்ந்து வருகிறதே!

1986–ம்–87–ம் ஆண்டுகளில் யாழ் நகருக்குப் போனால் நவீன சந்தைக் கட்டிடத்தின் நடுப்பகுதி நுழைவாயிலை குறுக்கறுத்து மண் மூட்டைகள் சுவர் உயரத்துக்கு அடுக்கப்பட்டிருந்ததை கண்டிருக்கலாம்.

திடீரென எழும் அபாயச் சங்கு ஒலியைக் கேட்டதுதான் தாமதம் திமுதிமுவென அனைவரும் ஓடிவந்து அந்த மாடிக் கட்டிடத்தின் மண் மூட்டைகளால் அரண் செய்யப்பட்ட உட்பகுதிகளில் பதுங்கிக் கொள்வர்.

ஏன்? யாழ் கோட்டையிலிருந்து ஏவப்படும் செல்களில் இருந்து தப்பிக் கொள்ளத்தான். அதை ஏன் இப்போது?

அப்படியான சம்பவம் மட்டக்களப்பு நகரில் நடைபெறுகிறது. ஆனால் ஒரு வேறுபாடு. அன்று அபாயச் சங்கொலி கேட்டதும் ஓடி ஒளித்தது பொதுமக்கள். இன்று ஓடிஒளிப்பதோ அன்று மோட்டார் செல்களை ஏவிய சாட்சாத் சிங்களப்படைகளேதான்.

இப்போது வரலாற்றில் ஒரே சம்பவங்கள்தான் திரும்பத் திரும்ப நடக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்கிறீர்களா?

கடந்த பெப்ரவரி 4–ம் திகதி தங்கள் படைமுகாம்களில் கொடியேற்றி சுதந்திர தினத்தின் பொன் விழா நினைவுகளை கொண்டாட முனைந்த படையினர் சங்கொலி கேட்க "ஆத்துப்பறந்து" பங்கர்களுக்குள் போய் ஒதுங்கிக்கொண்டனர். கொடியேற்றமும் போச்சு, சுதந்திரதினமும் போச்சு.

உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா 1974 ஜனவரி 10 யாழ் முற்றவெளி மைதானம் உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் 2–ம் நாள் நிகழ்வுகள். சிவபூசையிற் புகுந்த கரடிகளாய் நுழைந்த சிறீலங்காப் பொலிசாரால் திமிலோகப்பட 9 பொதுமக்கள் வீழ்ந்தனர். எமது மொழியின் சிறப்பை ஆராயும் விழா நின்று போனது.

இன்று 24 வருடங்கள் கழித்து சிங்களத்தில் சுதந்திரத்தின் பொன் விழாவில் சிங்களக் கொடியேற்றுவதற்கு மட்டக்களப்பு விமானத்தளத்தில் 15 விமானப்படையினர் காயமடைந்தனர். அப்படியாயின் வரலாற்றில் ஒரேவிதமான சம்பவங்கள்.

தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலைக்கு காரணமான துரையப்பாவுக்கு குண்டெறியும் முயற்சியில் தியாகச் சாவடைந்த பொன் சிவகுமாரனின் திருவுருவச் சிலை சிங்களப் படைகளால் திரும்பத் திரும்ப தகர்க்கப்பட்டது. இன்று சங்கிலியன் தோப்பின் தூண்கள் இராணுவ ட்ரக்குகளில் கட்டி இழுக்கப்பட்டு உடைக்கப்பட்டுள்ளன.

இப்போது சொல்லுங்கள் வரலாற்றில் ஒரேவிதமான சம்பவங்களே திரும்பத் திரும்ப நடக்கின்றதல்லவா?.

**பு. சத்தியமூர்த்தி**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கடற் புலிகளின் நகர்திறன் ஆற்றலை வெளிப்படுத்திய

# கடற் சண்டை

புலிகளுடனான போரில் சிங்களக் கடற்படை ஆற்றும் மிக முக்கிய பணியாக, இப்போது, குடாநாட்டிற்கான இராணுவ விநியோகமே உள்ளது. இந்த இராணுவப் பணியையும் தனித்த ஒரு விநியோகக் கப்பல் என்றில்லாமல் பல சண்டைக்கலங்கள் உள்ளிட்ட ஒரு கப்பல் அணியாக செயற்பட்டே கடற் போக்குவரத்தை நடாத்தவேண்டிய நிர்ப்பந்தத்தில் அது உள்ளது.




பருத்தித்துறையில் "லாண்டிங் கிராப்ட்" மூழ்கடிப்பு

செலவு அதிகம் என்றாலும் கப்பல் அணிப் போக்குவரத்து உபாயம் பாதுகாப்பிற்கு உத்தரவாதமானது என்று கருதப்பட்டது. இந்தக் கணிப்பில் 22.02.98 அன்று மண் விழுந்து விட்டது. அன்றே கடற் சண்டையில் பருத்தித்துறைக் கடலில் ஒரு சரக்குக் கப்பலும்– காங்கேசன்துறைக் கடலில் ஒரு தரை இறங்கு கலமும் மூழ்கடிக்கப்பட்டன. இதன் மூலம் கப்பலணிப்போக்குவரத்துக்கு இருந்த பாதுகாப்பு உத்தரவாதம் கேள்விக்குறியாகிவிட்டது.

**கடற்புலிகளின் நகர்திறன் ஆற்றலை இந்த கடற் சண்டை எதிரிக்குப் புலப்படுத்தியிருக்கும்**

சிங்களக் கடற்படைக்கும் கடற் புலிகளுக்குமிடையே நடைபெறுகின்ற கடற்சண்டைகள் இப்போது பெரும்பாலும் ஆழ்கடல் சமர்ப்பரிமாணத்திலேயே நடைபெறுகின்றன. 1994–இல் இந்த புதிய சமர்ப் பரிமாணம் ஆரம்பமாகிவிட்டது. மன்னார்கடலில் 19.01.94 அன்று இடம் பெற்ற சாகரவர்த்தனா மூழ்கடிப்புடன் ஆழ்கடல் சமர்ப்பரிமாணம் உறுதியாக வெளிப்படுத்தப்பட்டது.

அவை எறியும் ஆழ்கடலில் அதற்கென்று விஷேடமாகத் தயாரிக்கப்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

பட்ட கடற்கலங்களை வைத்தே சண்டைகளை நடாத்த முடியும். இந்த வகை கடற்கலங்களையே சிங்கள கடற்படை வைத்திருக்கின்றது. இந்த வசதியை கடற்புலிகள் இதுவரை பெறவில்லை. ஆயினும் இருக்கக்கூடிய சாதாரண சண்டைப் படகுகளை பயன்படுத்தி, கடற்புலிகள் திறமையான வகையில் ஆழ்கடல் சண்டைகளையும் அண்மைக் காலமாக நடாத்தி வருகின்றனர். கடற்சண்டையுடன் கூடிய கரும்புலித் தாக்குதல்கள், கடற்புலிகளது முக்கிய ஆயுதமாக விளங்குகின்றன. வெடிமருந்தேற்றப்பட்ட கரும்புலிப் படகுகள் எதிரியின் கடற்கலங்களுக்கு தொடர்ந்தும் அச்சுறுத்தலைக் கொடுத்து வருகின்றன.

எனினும் 22.02.98 அன்று குடாநாட்டின் கடற்பரப்பில் பலமணி நேரம் நடைபெற்ற கடற்சண்டை ஆழ்கடற்சமரில் ஒரு வளர்ச்சிக் கட்டத்தைப் புலப்படுத்திவிட்டது. இந்த கடற்சண்டை பிரத்தியேகமான சில இராணுவ அம்சங்களையும் கொண்டுள்ளது.

எதிரியின் ஆக்கிரமிப்பிற்குள் உள்ள தரைப்பகுதியை கரையாகக் கொண்ட கடல் வலயத்தில் இந்த கடற்சண்டை பலமணி நேரம் நடந்துள்ளது என்பது ஒரு இராணுவ அம்சம்.

அத்துடன், கடற்புலிகள் தங்களது கட்டுப்பாட்டிலுள்ள களப்பிரதேசத்திலிருந்து மிக நீண்ட தூரத்திற்கு எதிரி வலயத்திற்கூடாக ஊடுருவி துணிகரமான ஒரு கடற் சண்டையை வெற்றிகரமாக நடாத்திவிட்டு பாதுகாப்பாக தளம் மீண்டனர் என்பது சண்டையின் மிக முக்கிய இராணுவ அம்சமாகும்.

சம நேரத்தில் தரைப்படையையும் இக் கட்டுக்குள் சிக்கச் செய்வித்து— வான் படையையும் முடக்குவித்து— கடற்படையையும் கட்டிவைக்க முற்படும் வகையில், தலைவர் பிரபாகரனின் போர்ச்செயற்பாடுகள் அமைந்துள்ளன.

இதேவேளை, கடற்புலிகளின் நகர்திறன் ஆற்றலை இந்த கடற் சண்டை எதிரிக்குப் புலப்படுத்தியிருக்கும்.

இந்த வகையில், சில ராங்குகள் மற்றும் இராணுவ உபகரணங்களுடன் சென்ற ஒரு கொள்கலன் கப்பலையும் ஒரு தரையிறங்கும் கலத்தையும் என, இரண்டு கடற்கலங்களை மூழ்கடித்தும் 50–ற்கும் மேற்பட்ட படையினரைக் கொன்றும், கடற்புலிகள் ஒரு ஆழ்கடல் சண்டையை வென்றுள்ளனர். 400 படையினரை ஏற்றிச்சென்ற இன்னொரு தரையிறங்கு கலம் தாக்குதலிலிருந்து தப்பியது படையினருக்கு கிடைத்த அதிஷ்டமாகப் போய்விட்டது.

இரண்டாம் ஈழப்போர்க்காலத்தில் சிறீலங்கா அரசுக்குச் சொந்தமான சுமார் 8000 தொன் எடையுள்ள கடற்கலன்களை புலிகள் கடலடிக்கு அனுப்பி வைத்தனர். இதே வேளை 3–வது ஈழப்போரில் இதுவரை சுமார் 7000 தொன் எடையுடைய சிங்களத்துக் கடற்கலன்கள் மூழ்கடிக்கப்பட்டுவிட்டன. மொத்தத்தில் 15000 தொன்களுக்கும் மேற்பட்ட நிறையுடைய சிங்களத்துக் கடற்கலன்கள் தமிழீழக் கடற் பரப்பில் புதைக்கப்பட்டுள்ளன.

ஒரு விடுதலைப் போரில் இந்த கடற் சமர்ப் பரிமாணம் ஒரு உலக அதிசயமாகவே இராணுவ வரலாற்றில் பொறிக்கப்படும்.

குடாநாட்டிற்கான இராணுவ விநியோகத்திற்காக ஒரு தரைப்பாதை திறந்துவிட்டால், விநியோகப் பணி என்ற சுமையிலிருந்து கடற்படை தன்னை விடுவித்து— கடற்சமரில் தீவிர கவனம் செலுத்தும் என்று படைத்தலைமை நம்பியிருந்தது. ஆனால் தரைப்பாதை அமைப்பு படுமோசமான நெருக்கடியைச் சந்தித்து— தடம்புரண்டு நிற்கின்றது. இதேவேளை, பாதுகாப்பானது என்று கருதப்பட்ட— ஆழ்கடல் வழியே நடைபெற்ற கப்பல் அணி விநியோகமும் பாதுகாப்பற்றதாக மாறிவிட்டதால் முன்னப்போதையும்விட இப்போது, குடாநாட்டிற்கான இராணுவ விநியோகம் பாரிய நெருக்கடியை எதிர்கொண்டுள்ளது.



சம நேரத்தில் தரைப்படையையும் இக் கட்டுக்குள் சிக்கச் செய்வித்து— வான் படையையும் முடக்குவித்து— கடற்படையையும் கட்டிவைக்க முற்படும் வகையில், தலைவர் பிரபாகரனின் போர்ச் செயற்பாடுகள் அமைந்துள்ளன.




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திருகோணமலை

# நில அபகரிப்பிற்காக கிராமப் படுகொலைகள்



திருகோணமலை மாவட்டத்தின் தம்பலகமம் பகுதி மீண்டும் ஒரு முறை கிராமப் படு கொலையைச் சந்தித்துவிட்டது. சிங் களத்தின் காவல்துறையால் இப் படுகொலை சட்டபூர்வமாக நடத் தப்பட்டுள்ளது. இதில் எட்டுத் தமிழர்கள் கொல்லப்பட்டுள்ளனர். 17 பேர் படுகாயமடைந்துள்ளனர். கொல்லப்பட்டவர்களில் நால்வர் பாடசாலை மாணவர்கள்.

முன்பெல்லாம் சிங்களக் காடை யர் மற்றும் ஊர்காவற் படையின ரின் தலைமையில்தான் பெரும்பா லும் – தமிழர் கிராமப் படுகொலை கள் நிகழும். அந்த இனக்கொலையை தமிழ்– சிங்கள கலவரமென்று பெயர்சூட்டியும் – காடையரின் தாக்குதல் என்று திரிவு படுத்தியும் இனக் கொலைப் பரிமாணத்தை சிங்கள அரசு மூடி மறைக்கும்.

ஆனால் தமிழ் படுகொலைக ளுக்கு எதிர்விளைவாக நடந்த பதில டிகளால் மிரண்ட சிங்களக் குடி யேற்றவாசிகள் இப்போது, தமது கொலைவெறியை சற்று அடக்கியே வாசிக்கின்றனர். இதனால் அந்தக் கொலைப் பணியை இப்போது சிங்களப் பொலிசார் தமது கைகளில் எடுத்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்திலும் திருகோணமலை மாவட்டத்திலும் தமிழர் கிராமப் படுகொலைகளை சிங்களப் பொலிசாரே முன்னின்று நடாத்துகின்றனர்.

பல படுகொலைகளை கண்டு விட்ட அம்பாறை சென்றல் காம்ப் கிராமம் அண்மையில் சிங்களப் பொலிசாரால் மீண்டும் தாக்கப்பட் டதும் அது நடந்து ஒருசில மாத இடைவெளியில் இப்போது தம்பலக மமும் சிங்களப் பொலிசாரினால் தாக்கப்பட்டுள்ளது.

இத்தகைய கிராமப் படுகொலைக ளுக்கான தமிழர் கிராமங்களை பேரினவாதிகள் திட்டமிட்டுத் தேர்ந் தெடுக்கின்றனர்.

குறித்த கிராமங்களைவிட்டு தமிழ் மக்களை நிரந்தரமாக விரட்டியடிக்க வேண்டும் என்பதே தாக்குதல்களின் உடனடி இலக்கு. தமிழர் நிலங்களை சிங்கள மயமாக்கும் பேரினவாதத் தின் முயற்சிக்கு இந்தத் தமிழ்க் கிராமங்கள் தடையாக இருப்பதால் அந்தத் தடைகளை அகற்ற கிராமப் படுகொலைகளை ஒரு வழியாக பேரினவாதிகள் கடைப்பிடிக்கின்ற னர்.

தமது கிராமங்களைவிட்டு தமிழ் மக்கள் ஓடியதும் அதை ஆக்கிர மித்து அந்த நிலப்பகுதியை அருகில் உள்ள சிங்களக் குடியேற்றத்துடன் இணைத்து நில அபகரிப்பை விரி வாக்குவது பேரினவாதம் கடைப் பிடிக்கும் ஒரு தந்திரமாகும். தென் தமிழீழத்தின் கணிசமான பகுதி நிலம் சிங்களக்குடியேற்றங்களினா லும் கிராம அபகரிப்புகளினாலும் விழுங்கப்பட்டுக் கொண்டிருக்கின் றன.



ஆறு பெரிய சிங்களக் குடியேற் றங்களால் திருகோணமலை மாவட் டத்தின் தமிழ் முகம் சிதைக்கப் பட்டுள்ளது.

1. அல்லை– கந்தளாய்
2. கல்மெட்டியாவெவ (கல்முட் டியான் குளம்)
3. வான்வெல (வானாறு)
4. பதவியா (பதவில் குளம்)
5. மொறவேவ (முதலிக்குளம்)
6. மகாகிவுல்வெவ (பெரியவி ளான் குளம்)

தமிழ் அடையாளங்களை அப்ப டியே மொழி மாற்றம் செய்து சிங்களவர் பகுதியாக்கிய நிலக் கொள்ளையை சிங்கள ஆட்சியாளர் கள் செய்து வருகின்றனர்.

சுதந்திரப் பொன்விழாக் கண்ட பேரினவாத அரசு தான் செய்த 50 வருட சாதனையாக இந்த நில அபகரிப்பை கொண்டாடியிருக்கும். தென் தமிழீழத்தின் இனவீதாசா ரத்தை இந்த நில அபகரிப்பு தலை கீழாக மாற்றிவிட்டது. இந்த ஆபத்துக் குள் சிக்கிக் கொண்ட முக்கிய மாவட்டங்களாக அம்பாறையும் திரு கோணமலையும் விளங்குகின்றன.


அம்பாறை மாவட்டத்தின் 3/4 பங்கு நிலம் சிங்கள மயப்படுத் தப்பட்டுவிட்டது. மிகுதியையும் அப கரிக்கும் நாசகார நோக்கத்தை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## சிங்களப் பேரினவாதத்தின் திட்டமிட்ட குடியேற்றத்திற்கு இரையாகும் திருமலை மாவட்டம்




நிறைவேற்ற பேரினவாதம் பெரு முயற்சி எடுத்து வருகின்றது.

இதுபோல 1010 சதுர மைல் பரப்பளவைக்கொண்ட திருகோண மலை மாவட்டத்தில் சுமார் 650 சதுரமைல் பரப்பளவு நிலம் சிங்க ளவர் பூமியாக மாற்றப்பட்டுள்ள அநியாயம் நிகழ்ந்துள்ளது. இதில் 574 சதுரமைல் நிலத்தை புதிதாக உருவாக்கப்பட்ட சேருவில சிங்களத் தொகுதி விழுங்கியுள்ளது. திரு கோணமலைத் தொகுதி 216 சதுர மைல்களையும் மூதூர் தொகுதி 170 சதுர மைல்களையும் கொண்டமைக் கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

1921–ம் ஆண்டு எடுக்கப்பட்ட குடிசன கணக்கெடுப்பின்படி திரு கோணமலையின் மொத்த சனத் தொகையின் 4 வீதமாக இருந்த

> ஈழத்தமிழரின் தேசியத்திற்கு அவர்களின் தாயக நிலமை ஆதாரதூணாக விளங்குகின்றது. இந்தத் தாயக நிலத்தைப் பறித்து தமிழினத்தின் தேசிய இன அந்தஸ்தை அழிப்பதே இந்த நில அபகரிப்பின் அரசியல் நோக்கமாகும்.

சிங்களவர் 1981–ம் ஆண்டு 35 வீதமாக உயர்ந்தனர்.

இனக் கொலைத் தாக்குதலின் கொடூரத்தால் நடந்த தமிழரின் இடப்பெயர்வு காரணமாக திரு கோணமலையில் சிங்களவர் வீதா சாரம் இப்போது 50 வீதத்தையும் தாண்டிவிட்டது. இத்துடன் சுமார் 65 வீதமான நிலத்தையும் அபகரித்து திருகோணமலை மாவட்டத்தின் ஆதிக்க சக்திகளாக சிங்களவர் ஆகி வருகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்தின் சிங்களக் குடியேற்றத்தால் அச்சுறுத் தப்பட்டுக் கொண்டிருக்கும் ஒரு பகுதிதான் தம்பலகமம்.

1968–ம் ஆண்டு தம்பலகமத்தின் வடபகுதியில் சிங்களக் குடியேற்றம் ஒன்று அமைக்கப்பட்டது. கல் முட்டினாகுளம் என்ற தமிழர் பகுதி கல்மெட்டியாவெவ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு சிங்களவர் குடியேற்றப்பட்டனர். இக்காரண மாக தம்பலகமம் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் இனவீதாசாரம் மாற்றியமைக்கப்பட்டது.

1921–ம் ஆண்டு தம்பலகமம் வடக்குப் பிரதேசத்தின் மொத்த சனத்தொகையான 741 பேரில் 17 பேரே சிங்களவர். மூன்று பேர் முஸ் லிம்கள். ஆனால் கல்முட்டியாவெவ குடியேற்றம் நடைபெற்ற எட்டு வரு டங்களின் பின் 1976–ல் தம்பலகமம் வடபகுதியில் தமிழர் தொகை 3232 ஆக இருக்க சிங்களவர் தொகை 2774 பேராக வீங்கியது.

திருகோணமலை மாவட்டத்திலி ருந்து 1971–ம் ஆண்டு சேருவில என்ற சிங்களத் தொகுதிக்காக தமிழர் நிலம் வெட்டியெடுக்கப் பட்டது. அப்போது கண்டி– திரு மலை வீதிக்கு கிழக்கே உள்ள பிர தேசங்கள் தவிர்ந்த ஏனைய தம்பல கமம் உதவி அரசாங்க அதிபர் பிரதேசங்கள் சேருவில தொகுதிக்கு தாரைவார்க்கப்பட்டன.

இப்போது தமிழர்கள் வாழும் எஞ்சிய தம்பலகமம் பகுதிக் கிராமங் களை அபகரிக்க பேரினவாதம் எத்தனிக்கின்றது. போர் தொடங்கிய பின் அதைச் சாட்டாக வைத்து 1990–ன் பிற்பகுதியில் தம்பலகமம் உதவி அரச அதிபர் பிரிவிலுள்ள



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

அனைத்துத் தமிழர் கிராமங்களும் இனக் கொலைத் தாக்குதலுக்கு உள்ளாகின. இதனால் மாபெரும் இடப்பெயர்வு அங்கே நிகழ்ந்தது. பெருமளவு மக்கள் வடபுலம் நோக்கி ஓடி வந்தனர். எஞ்சியோர் அங்கே அகதி முகாம்களில் தஞ்சமடைந்த னர். ஆயினும் இடம்பெயர்ந்தோரில் கணிசமான பகுதியினர் மீளவும் தமது கிராமங்களில் குடியேறினர். அவ்விதம் மீளக்குடியமர்ந்த தம்பல கமம் பகுதியின் புதுக்குடியிருப்பு– பொற்கேணி கிராமங்களே 01. 02. 98 அன்று சிங்களப் பொலிசாரின் தாக்குதலுக்கு உள்ளாகின.

1985–ல் பாலம் போட்டாறு தமிழ்க் கிராமம் தாக்கப்பட்டது. இப்போது ஜெயபுர என்ற பெயருடன் அது சிங்களவர் கிராமமாகிவிட்டது.

பன்குளம்– முதலிக்குளம் என் பன 1977–இலும் பின்னர் 1982– இலும் தாக்கப்பட்டனர். அங்கிருந்து தமிழ் மக்கள் விரட்டியடிக்கப்பட் டனர். முதலிக்குளம் மொறவேவ ஆனது. பன்குளம் காடாகியது.

1984–ம் ஆண்டு தென்னமரவாடி– கணுக்கேணி கிராமங்கள் 24 மணி நேர அவகாசத்திற்குள் எழுப்பி வைக்கப்பட்டன. இப்போது அந்தக் கிராமங்கள் வடக்கு கிழக்கு நிலப் பரப்பைத் துண்டிக்கும் இராணுவ வலயமாகிவிட்டன.

ஈழத்தமிழரின் தேசியத்திற்கு அவர்களின் தாயக நிலமை ஆதார தூணாக விளங்குகின்றது. இந்தத் தாயக நிலத்தைப் பறித்து தமிழினத் தின் தேசிய இன அந்தஸ்தை அழிப்பதே இந்த நில அபகரிப்பின் அரசியல் நோக்கமாகும்.

படைபலத்தால் தமிழர் நிலத்தை ஆக்கிரமித்து சிங்களவர்களைக் குடி யமர்த்தி நில அபகரிப்புச் செய்ய சிங்கள அரசு முயலலாம். ஆனால் அந்த நில அபகரிப்பை– அத்துமீறிய சிங்களக் குடியேற்றங்களை தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் என் றுமே அனுமதிக்கமாட்டாது.

★★★

# தலைதெறித்த மனிதர்களாக காட்சி தரும் சிங்கள ஆட்சியும் படைத்தரப்பும்

தலைதெறித்த மனிதர்கள் – இவ்வாறு அழைக்கப்படத் தக்கவர்களாகவே இவ்வகையின் கட்சியாளர்களும் அவர் தம் பரி வாரங்களும் காட்சி தருகின்றனர். அதென்ன அப்படிச் சொல்லிவிட் டீர்கள்? நாட்டை நிர்வகிப்பவர் களை எழுந்தமானத்தில் அப்படிச் சொல்லலாமா?

பொறுங்கள்,

அண்மையில் சிறீலங்கா ஜனாதி பதி, பாதுகாப்பு அமைச்சர், படைத் தளபதிகள் வெளியிடும் கருத்துக்க ளைக் கூர்ந்து கவனித்தல் இது நன்கு புனாகு ம்.

அமெரிக்க 'ரைம்' சஞ்சிகைக்குப் பேட்டியளித்த சந்திரிகா இதுவரை தான் கடந்து வந்த பாதையையே திருப்பிப் போட்டுள்ளார்.

1994/95–ல் விடுதலைப் புலிகளு டன் தான் நடத்திய பேச்சுக்களில் வட பிரதேசங்களை பிரபாகரனுக்கு குறித்த காலத்திற்கு தேர்தல் இல்லா மலே நிர்வகிக்க முன் வந்ததாகவும் பல்வேறு சலுகைகளையும் அளித்த தாகவும் அவையும் பிரபாகரனைத் திருப்திப்படுத்ததாலேயே யுத்தத் தைத் தொடர வேண்டியதாயிற்று என்ற தோரணையில் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

எப்படியிருக்கிறது, கதை? ஒவ் வொருமுறையும் உலங்குவானூர்தி தென்னிலங்கைச் சமாதானத் தூதர் களைச் சுமந்து வரும் போதும்,

**யுத்தத்திற்கு வெளியுலகில் இருந்து கிடைக்கும் ஆதரவு நலிந்து வருகிறது. சுதந்திர தினத்திற்கு வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சிறீலங்காவின் சீரழிவை, அதற்கான காரணம் யுத்தமே என்பதை நேரில் கண்டு சென்று விட்டனர். இப்போது யுத்தத்தைத் தொடரவேண்டியதாயிற்று என்ற தோரணையில் திருவாய் மலர்ந்திருக்கிறார்.**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

திரும்ப கொழும்புக்குப் போனபின் அங்கிருந்து அறிக்கைகள் வரும் போது, அவர்கள் பேச்சுவார்த்தை மண்டபத்திலிருந்து வெளிவந்து பத்திரிகையாளர்களுக்கு வாய்திறக்கும் போதும், திரும்ப கொழும்புக்குப் போனபின் அங்கிருந்து அறிக்கைகள் வரும்போது ஏமாற்றமடைந்து கொண்டிருந்த உங்களுக்கு இப்படியான தகவல்கள் ஏதாவது முன்பு கிடைத்தனவா? "பின்ன ஏன் உப்படிப் புலம்புகிறார் சந்திரிகா?"

யுத்தத்திற்கு வெளியுலகில் இருந்து கிடைக்கும் ஆதரவு நலிந்து வருகிறது. சுதந்திர தினத்திற்கு வந்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகள் சிறீலங்காவின் சீரழிவை, அதற்கான காரணம் யுத்தமே என்பதை நேரில் கண்டு சென்று விட்டனர். இப்போது யுத்தத்தைத் தொடரவேண்டிய தாயிற்று என்ற தோரணையில் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

எனவேதான், தங்கள் மீது உலகின் இரக்கத்தை ஈர்க்கும் விதமாகப் பேசிவருகிறார்; அவ்வளவே! "நாட்டைக் கட்டியெழுப்புவதில் நாம் தோற்றுவிட்டோம்.; சுதந்திரப் போராட்ட வீரர்களின் கனவை நனவாக்கத் தவறிவிட்டோம்" என்று தன்னிரக்கத்துடன் கூறி சந்திரிகா தொடர்கிறார் பாருங்கள். "நாட்டை ஒன்றுபடுத்தும் பணியில் இந்த வருடமும் எம்மை அர்ப்பணித்துக் கொள்வோம். அதற்கு எமக்கு அறிவும், துணிவும் தேவை" என்றார். எப்படி வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல யுத்தத்தைத் தொடர்வோம் என்பதைச் சொன்னார் பாருங்கள்.

இந்த உரைக்கு சமாந்தரமாகவே மேற்சொன்ன 'ரைம்' பேட்டி வெளிவந்திருக்கிறது. யுத்தத்திற்கு சர்வதேச ரீதியில் ஆதரவு வீழ்ச்சியடையும் நிலையில் தாம் வேறுவழியின்றியே யுத்தத்தில் இறங்கியிருப்பதாக நிறுவ முயன்றிருக்கிறார் மெத்தப்படித்த பிரான்ஸ் பட்டதாரி. சரி போகட்டும் தளபதி ரத்தவத்தை என்ன சொல்கிறார்? தான் யுத்தத்தினை வெல்வதற்குமென காலக்கெடுகளை விதித்தும் வாக்குறுதிகளை வழங்கியதும் உண்மைதான். அதற்குள் யுத்தத்தை என்னால் வெல்லமுடியவில்லை என்பதும் உண்மைதான். ஆனால், யுத்தத்தை விரைவில் வென்றெடுப்பேன் என்கிறார். புத்திசாலித்தனமான அறிவிப்பு ஏனென்றால் ஏற்கனவே ஏற்பட்டுவிட்ட சறுக்கல்களுக்கு வருத்தம் தெரிவித்தாயிற்று. இனிமேல் நிகழப்போவதற்கு காலக்கெடு, வாக்குறுதி எதுவும் வழங்கப்படவில்லையே. இனி என்ன நடந்தாலும் அது அவரைப் பாதிக்கப் போவதில்லைத்தானே!

இனிப் படைத்தரப்புக்கு வருவோம். இவர்கள் என்ன செய்கிறார்கள், "அண்டகாசம் ஆபூதசாகசம் திறந்திடுசீசேம்!" பாணியில் காரியங்களை நகர்த்துகிறார்கள்.

யாழ்ப்பாண இராணுவத் தளபதி

> வரலாற்றின் போக்கினை உணராதவர்கள் வரலாற்றுச் சுழற்சியில் தூக்கி யெறியப்படுவர் என்பது வரலாற்றின் படிப்பினை.

மேஜர் ஜெனரல் பலகல்ல விடுத்தார் பாருங்கள் அறிக்கை "கடந்த 1-ம் திகதி ஆனையிறவுத் தளத்தில் புலிகளால் தொலைத் தொடர்புக் கோபுரம் தகர்க்கப்பட்டது என்பது பிழையானது. சில கேபிள்கள் மட்டுமே அறுக்கப்பட்டன. இவையும் மூன்று நாட்களுக்குள் திருத்தப் பட்டுவிட்டன" என்றாரே பார்க்கலாம். ஆனால் பி.பி.ஸி வானொலிக்கான தொலைபேசிப் பேச்சுகள் எதுவும் 1-ம் திகதிக்குப் பிறகு ஒலிபரப்பாகவில்லை. ஏனைய தகவல்களையும் அங்கிருந்து பெற முடியவில்லை என தென்னிலங்கை தகவல் தொடர்பு சாதனங்கள் கூறுகின்றன ஏன்? ஆனையிறவுத் தொலைத்தொடர்புக் கோபுரம் தகர்க்கப்பட்டமையே என பல தரப்பினரும் வெளிப்படையாகக் கூறிக் கொண்டிருக்கையில் பலகல்லவின் கூற்றின் அர்த்தம் என்ன?

இதைவிட புதினம்பாருங்கள், கிளிநொச்சி நகரம் யார் கையில் இருக்கிறது என்ற விவகாரம். பத்திரிகையாளர்களை பலாலி, ஆனையிறவு ஊடாக பரந்தனுக்கு அழைத்து வந்து படையினர் கரடிப்போக்குச் சந்திக்கு கால்நடையாக கூட்டி வந்து அங்கிருந்து தெற்காக சிறிது தூரம் சென்று தூரத்தில் நின்றபடி "அதோ அதுதான் கிளிநொச்சி ஆஸ்பத்திரி" என்று காண்பித்திருக்கிறார்கள். அத்தோடு நிறுத்தினார்களா? பரந்தன் கிளிநொச்சிப் பகுதிகள் முழுமையாகவே கட்டுப்பாட்டிலேயே உள்ளதாகவும் பத்திரிகையாளர்களை தமது முன்னரங்க நிலைவரை அழைத்துச் சென்று, காண்பித்து இதை நிரூபித்துள்ளதாகவும் பீற்றிக்கொண்டுள்ளனர்.

பத்திரிகையாளர்களோ நிலைமையைப் புரிந்துகொண்டுவிட்டார்கள். ரத்வத்த, கிளிநொச்சியில் ஒரு அங்குல நிலம்கூட இழக்கப்படவில்லை என்று கூறியதன் உண்மை நிலையையும் உணர்ந்துவிட்டனர். கிளிநொச்சி டிப்போச் சந்தி, கிளி. மத்திய மாகாவித்தியாலயம் வரை நிலைகொண்டிருந்த படையினர் கரடிப்போக்குவரை பின்தள்ளப்பட்டிருக்கின்றனர் என்பதே உண்மை என்று வெளியாகச் சொல்லியும்விட்டனர். கந்தறுந்து நிக்கிறது படைத்தரத்தரப்பு.

ஆக ஒட்டு மொத்தத்தில் உலகையும் மக்களையும் ஏய்த்து திசைமாற்றி தமது காரியத்தை செய்வதிலேயே கவனமாயுள்ள சிறீலங்கா கடந்தகாலத்தில் இருந்து பாடம் படித்துக் கொள்ளத் தயாராயில்லை என்பது தெளிவு. ஆனால், வரலாற்றின் போக்கினை உணராதவர்கள் வரலாற்றுச் சுழற்சியில் தூக்கியெறியப்படுவர் என்பது வரலாற்றின் படிப்பினை.

OO

**பு. சத்தியமூர்த்தி**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சந்திரிகாவின் "ஒப்புதல்" வாக்குமூலம்:

## ஒரு புதுவகைத் தந்திரம்




அரசியலில் ஒருவர் மேற்கொள்ளும் ஒரு நடவடிக்கை அல்லது முன்வைக்கும் கருத்து அவருக்குத் தெரிந்தோ அன்றித் தெரியாமலோ அது திட்டவட்டமாக ஒரு தத்துவத்தைச் சார்ந்திருக்கும். ஒரு நடவடிக்கை அல்லது கருத்து அதன் நோக்கத்திலும் விளைவிலும் எடைபோடப்பட வேண்டும். ஆயினும் விளைவே இறுதியானது. இந்தவகையிற் "தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு" என்று சந்திரிகா கூறும் கருத்தின் தத்துவ உள்ளடக்கத்தை இக்கட்டுரை பரிசீலிக்கின்றது.

இப்போது எம்முன் உள்ள பிரச்சினை என்னவெனில் "தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு" என்று ஒப்புக்கொள்வதல்ல. தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு தேசிய இனப் பிரச்சினை என்பதை ஏற்றுக்கொள்வதும், தேசிய இன அடிப்படையில் அவர்களின் அபிலாஷைகளை அணுக வேண்டியதும்தான்.

"தமிழ் மக்களுக்குப் பிரச்சினை உண்டு; அவர்களுக்குப் பல குறைகள் உண்டு; மொழிப் பிரச்சினை, கல்விப் பிரச்சினை, வேலைவாய்ப்பு பிரச்சினை மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரச்சினை; நிர்வாகப் பிரச்சினை; மனித உரிமைப் பிரச்சினை" எனப் பலவாறாகக் கூறித் தமிழ் மக்கள்மீது பச்சாதாபப் படுவதுடன் நின்றுவிடாது மேலும் ஒருபடி மேலே சென்று கடந்தகால (சிங்கள) ஆட்சியாளர் விட்ட தவறுகள்தான் இதற்கெல்லாம் காரணம் என்று "பாவமன்னிப்பும்" கோருகின்றனர்.

உண்மையில் இத்தகைய "ஒப்புதல்" வாக்குமூலமானது உண்மையான பிரச்சினையை மழுங்கடிப்பதற்கும், திசை திருப்புவதற்கும், மேலும் தமிழ் மக்களை ஒடுக்குவதற்குமான ஒரு வழிமுறைதான்.

யானையைப் பார்த்த குருடனைப் போல தமிழ் மக்களின் பிரச்சினைகளை குருட்டுத் தனமாகப் பார்க்கும் "மேதாவிகள்" பலர், ஒடுக்கும் சிங்கள அரசிற்கு உண்மையில் ஒத்தூதுகின்றனர். இந்தக் குருட்டுத் தனமான "மேதாவிகள்" தாம் செய்வது என்ன என்பதை அறியாமல் ஒத்தூதுகிறார்கள். இதே வேளை கண் திறந்தபடி தாம் செய்வது என்ன என்பதை அறிந்து ஒத்தூதும் "மேதாவிகளும்' உண்டு. உண்மையில் இந்த இரு வகை "மேதாவிகளும்" ஒரே தொழிலையே செய்கிறார்கள்; ஒரே விளைவையே ஏற்படுத்துகிறார்கள். இவர்கள் தமிழ் மக்களின் பிரச்சினையைத் துண்டாடுகிறார்கள்; பிரச்சினையும் கேந்திரத்தைச் சிதைக்கிறார்கள்; இதனால் ஒடுக்குமுறையாளர்களுக்கு முற்றிலும் துணையே போகிறார்கள்.




தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு சட்டப் பிரச்சினை அல்ல; அது ஒரு மொழிப் பிரச்சினை அல்ல; அது ஒரு நிர்வாகப் பிரச்சினை அல்ல; அது அதிகாரப் பகிர்வுப் பிரச்சினையும் அல்ல; அது ஒரு தேசிய இனப் பிரச்சினை; குறித்த தேசிய இனத்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தின் பெயராலான தேசிய வாழ்வு பற்றிய பிரச்சினை; தேசிய இனக் கௌரவம் பற்றிய பிரச்சினை. இதில் சமாதானம் என்பது சண்டை யின்மை அல்ல; தேசிய இன கௌர வத்தையும் வாழ்வையும் நிலை நிறுத்தல் என்பதுதான்.

சில வேளைகளில் ஒப்பீடுகள் தவறான பிரமையை ஏற்படுத்தும். அத்தகைய வாய்ப்பிற்குரிய இடங்க ளில் எதிரி அதனைத் திட்டமிட்டே செய்வதுண்டு. "தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு பயங்கரவாதப் பிரச்சினையே தவிர வேறில்லை" என்று ஜே.ஆர். ஜெயவர்த்தனா 1980–களில் கூறினார். டி.பி.விஜேதுங்க இதனையே மேலும் ஒருபடி அழுத் திக் கூறினார். இத்தகைய பின்ன ணியில் "தமிழ் மக்களுக்குப் பிரச் சினை உண்டு" என்று சந்திரிகா கூறுவது வறண்ட நாக்கில் பாலை வார்ப்பதுபோல் தோன்றும். இது ஓர் ஒப்பீட்டு மாயை. இத்தகைய மாயைக்கு ஆட்படுவதும் அந்த மாயைக்குள் மயங்குவதும், இதனால் தன்னிலை இழப்பதும் சாதாரண மக்களின் இயல்பு. ஆதலால் பிரச் சினை உண்டு என்று துண்டங்களாக தனிமைப்படுத்தியோ அன்றி மொட் டைப்படுத்தியோ சொல்வதென்பது உண்மையான பிரச்சினையை எதிர் மறையாக்கிவிடுகின்றது என்பதே பொருள்.

எனவே தமிழ் மக்களுக்குப் பிரச்சினை இருக்கின்றது என்று சொல்வதல்ல பிரச்சினை. தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு தேசிய இனப் பிரச்சினை என்று ஏற் றுக்கொள்வதும் அதன் அடிப்படை யில் தீர்வைக் காண்பதும்தான் பிரச்சினை.

தேசிய இனம் என்றால் அதற் கென ஒரு தேசியத் தாயகம் உண்டு; அதற்கெனத் தேசியத் தனித்துவம் உண்டு; அத்தனித்துவத்திற்கேற்ப தனித்துவமான தீர்வுண்டு.

அத்தகைய தனித்துவத்தை மறுத்து, இலங்கையின் அனைத்து மாகாணங் களுக்குமான ஒரு பொதுப் பிரச்சி னையாகக் குழப்பி – பிரச்சினையின் மையத்தைச் சிதைத்து – மாகாண அசதிகாரப் பரவலாக்கல் தீர்வை அரசாங்கம் முன்வைத்துள்ளது.

எனவே தேசிய இன அபிலாஷை என்ற மையத்தை ஏற்காமல் "தமிழ ருக்குப் பிரச்சினை உண்டு" என்று பத்தையடி செத்தையடியாய்ச் சொல்வ தென்பது உண்மையான பிரச்சினை யைக் கைதவற விடுவதற்கான ஒரு நடவடிக்கை என்பதுடன் சந்திரிகா அரசாங்கம் தன்னை ஒரு நியாய மான அரசாங்கம் எனக் காட்ட எடுக்கும் நடவடிக்கையாயும் உள் ளது. தமிழ் மக்களின் பிரச்சினை தேசிய இன அபிலாஷையைக் கொண்டது என்பதை விடுத்து தமிழ் மக்களைப் பற்றி ஒப்பாரி பாடுவதும், முதலைக் கண்ணீர் வடிப்பதும், பச்சாதாபப்படுவதும், பாவம், பரி தாபம் கொள்வதும் தமிழ் மக்க ளுக்குச் சோறு போடக்கூடிய விட யங்கள் அல்ல. பிரச்சினை மேற் கூறியவாறு தெளிவாயும் வெட் டொன்று துண்டிரண்டாயும், நேர்க்

**தமிழ் மக்களுக்குப் பிரச்சினை இருக்கின்றது என்று சொல்வதல்ல பிரச்சினை. தமிழ் மக்களின் பிரச்சினை ஒரு தேசிய இனப் பிரச்சினை என்று ஏற்றுக்கொள்வதும் அதற் அடிப்படையில் தீர்வைக் காண்பதும்தான் பிரச்சினை.**

கணியமாயும், சுற்றி வளைப்பின்றி யும் இருக்கும் போது "மேதாவிக ளும்", "தாராண்மை" வாதிகளும் தமிழ் மக்களின் பிரச்சினையைப் பற்றி ஆயிரக்கணக்கான பக்கங்க ளில் பட்டியல் போடுகின்றார்கள்; விரிவுரை செய்கின்றார்கள்; விபரணம் செய்கிறார்கள்; வியாக்கியானம் கூறுகிறார்கள்; புத்திமதி சொல்கி றார்கள்; போதிக்கிறார்கள்; மேலும் நீதி பற்றியும், ஒழுக்கம் பற்றியும் தமிழருக்குப் பலவாறாகப் பிரசங் கிக்கின்றார்கள்.

இப்போது தமிழ் மக்களுக்குத் தேவைப்படுவது இந்தப் பொய்யான தும், போலியானதும், பகட்டான தும், ஏமாற்றுகரமானதுமான சட்ட பண்டித விளக்கங்களும் போதனை களுமல்ல இரத்தமும் தசையுமான பிரச்சினைக்கு இரத்தமும் தசையு மான தீர்வுதான்.

தமிழருக்குப் பிரச்சினை உண்டு என்று சொல்வதும், குற்ற ஒப்புதல் வாக்குமூலம் அளிப்பதும், பாவ மன்னிப்புக் கோருவதும், சந்திரி காவை "நியாயமானவர்" என்றும் அனுதாபத்திற்குரியவர் என்றும் காட்ட உதவுமே தவிர தமிழருக்கு எந்த வகையிலும் உதவப் போவ தில்லை. இவ்வாறு தோன்றும் "நியாயமானவர்", "அனுதாபத்துக் குரியவர்" என்பன தமிழரை ஒடுக்கு வதற்கான மேலதிக வளத்தையும் பலத்தையும் வழங்கும் விடயங்களே தவிர வேறில்லை.

"சுதந்திர" பொன்விழா உரையில் சந்திரிகா "இரத்தக் கண்ணீர்" வடித்தார். வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் அனைத்தும் "இரத்தக் கண்ணீரைத் தான்" முதன்மைப் படுத்தின. அது சந்திரிகாவிற்கு தற் காலிக வெற்றி. உண்மையில் இந்தக் கிளிசரின் கண்ணீர் பிரச்சினையை மூடி மறைக்கவே உதவியதென்ப துடன் சந்திரிகாவைக் குற்றவாளிக் கூண்டிலிருந்து விலக்கி, அவரை நீதிபதியாகக் காட்டிவிட்டது. கொலைக் குற்றவாளியை நீதிபதி யாக்கிய "இரத்தக் கண்ணீரின்"– கிளிசரின் கண்ணீரின் மகிமைதான் என்ன?

சந்திரிகாவின் "இரத்தக்கண் ணீரை" தமது பச்சைக் கண்களால் கண்டுகளித்த "மேதாவிகள்" ஓர் உண்மையைப் பார்க்க மறுக் கின்றனர். அதாவது "இரத்தக்கண்ணீ ரால்" நிரம்பி வழிந்த அந்தப் பொன்விழா மேடையில் தமிழரின் பிரச்சினை ஒரு தேசிய இனப் பிரச்சினை என்று வாய் தடுமாறிக் கூடச் சொல்லிவிடக்கூடாது என்ப தில் அவர் எவ்வளவு உறுதியாயும், அவதானமாயும், நிதானமாயும் இருந்தார் என்பது.

இத்தகைய "ஒப்புதல்" வாக்கு மூலங்களும், "பாவமன்னிப்புக்க ளும்", "இரத்தக்கண்ணீர்களும்" உள் ளடக்கத்தில் உண்மையான பிரச்சி னையை மறுதலிப்பவைகளே. இந்த "ஒப்புதல்" வாக்குமூலங்களினதும் "பாவமன்னிப்புகளினதும்", "இரத்தக்கண்ணீர்களினதும்" விளைவை விளங்கிக் கொள்ள தமிழ் மக்களுக்கு அகராதிகள் தேவை இல்லை; நடைமுறை வாழ்க்கை போதும்.

★★★



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பொன்னான வாய்ப்பு

**இருபத்தாறு வருட வரலாற்றைக் கொண்ட தமிழரின் ஆயுதப் போராட்டம், இப்போது தீவிரமான கட்டத்தை அடைந்துள்ளது. சிறீலங்காவின் அரசபடைகளுக்கு எதிராக கடுமையானதொரு மரபுப் போரை தொடர்ச்சியாக நடாத்துமளவுக்கு புலிகள் இயக்கத்தின் படையமைப்பும் போர்வலுவும் வளர்ச்சி கண்டுள்ளது. தமிழீழப் போரரங்கில் மட்டுமல்ல தீவடங்கிலும் விரிவாக்கம் கண்டுள்ளது.**

இரு பகுதிப் படைகளினதும் பலப் பரீட்சைக்களமாக வன்னிப் போர்க்களம் அமைந்துள்ளது. கவசப்படையணிகள் மற்றும் மோட்டார்–ஆட்லறி படையணிகளின் துணையுடன் வன்னியின் இதயத்தை ஊடறுத்து நகரமுனையும் சிங்களத்துப்படைக்கு பேரழிவுகளை உண்டுபண்ணி அதன் தரைப் படையை நகரவிடாமல் முடக்கி வைக்கும் அளவுக்கு புலிப்படையின் மரபுப் போர்வலு அதிகரித்துள்ளது.

இதேவேளை, சிங்களத்தின் வான் படையை புலிகளின் விமான எதிர்ப்பு அணி, ஏறக்குறைய செயலிழக்கச் செய்துவிட்டது. சிங்களப் படையும், தமிழீழக் கடலில் தூர விலகியிருக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையிலேயே உள்ளது.

ஒவ்வொரு போர் அரங்கிலும் வெவ்வேறு வகையான இராணுவ இலக்குகளை அடைய புலிகள் முயல்கின்றனர்.

சிங்களத்துப் படையாட்களைக் கொன்று அழிப்பிலும் அவர்களது ஆயுதங்களைப் பறித்தெடுப்பதிலும் கவனம் செலுத்தும் அதேவேளை, அரசின் பொருளாதார இலக்குகளை தாக்கி அழித்து சிங்களத்துப் போர் இயந்திரத்துக்கு முதுகெலும்பாக விளங்கும் அரச பொருளாதாரத்தை பலவீனப்படுத்திவிடுவதிலும் புலிகள் இயக்கம் அக்கறை காட்டுகின்றது. இவற்றை வெற்றிகரமாக செயற்படுத்தி வருவதன்மூலம் சிறீலங்காவில் அரசியல் நெருக்கடிகளை தோன்றச் செய்து போரை நடாத்தும் ஆட்சிபீடத்தை நிலைகுலையச் செய்விக்கும் கைங்கரியத்






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

தையும் புலிகள் இயக்கம் சாதிக்க முயல்கின்றது.

போர்க்கள நிலவரங்களுக்கும் இராணுவ யதார்த்தங்களுக்குமேற்ப விவேகமான முடிவுகளை எடுத்து, சிறப்பான போருபாயங்களை வரைந்து தமிழீழ விடுதலைப்போரை தலைவர் பிரபாகரன் அவர்கள் வெற்றியை நோக்கி வழி நடாத்தி வருகின்றார். இதே சமயம் எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க சிங்கள அரசு தனது முழுப் பலத்தையும் வளத்தையும் ஒருங்குதிரட்டி, இறுதி முயற்சி ஒன்றை எடுக்கின்றது.



சிங்களப் படைக்குவிப்பின் குவிமையமாக, அண்மைக்காலத்தின், வன்னிப் போர் அரங்கு அமைந்துள்ளது. மாங்குளம், கிளிநொச்சி என இரண்டு பிரதான சமர்முனைகளை இந்தப் போர் அரங்கம் கொண்டுள்ளது. ஒவ்வொன்றும், எண்ணாயிரத்தில் இருந்து ஒன்பதினாயிரம் ஆட்தொகையைக் கொண்ட நான்கு சிங்களத்து டிவிசன்கள் இந்த இரு சமர் முனைகளிலும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

அதாவது, சிங்களத்துப்படையின் சுமார் அரைப்பங்கு ஆட்பலம் வன்னிப் போர் அரங்கில் நிலை கொண்டுள்ளது. இந்த ஆட்தொகைக்குள் சிறப்புக் கொமாண்டோ அணிகள் மற்றும் போர் அனுபவம் வாய்ந்த படையினர் உட்பட சிங்கள இராணுவத்தின் முன்னணிப் படையைச் சேர்ந்த ஏறக்குறைய முக்கால் பங்கினரும் அடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**படையாட்களை அழித்து அவர்களது ஆயுதங்களைப் பறித்தெடுத்தல் என்ற இராணுவத்திட்டத்தை, வன்னிப் போர் முனையில் புலிகள் இயக்கம் வெகு சிறப்பாகவே நடைமுறைப்படுத்தி வருகின்றது.**



படையாட்களை அழித்து அவர்களது ஆயுதங்களைப் பறித்தெடுத்தல் என்ற இராணுவத்திட்டத்தை, வன்னிப் போர் முனையில் புலிகள் இயக்கம் வெகு சிறப்பாகவே நடைமுறைப்படுத்திவருகின்றது.

ஓயாத அலைகள் தாக்குதலில் இருந்து ஜயசிக்குறுக்கு எதிராக நடக்கும் எதிர்ச்சமர்வரை வன்னிப் போர்க்களத்தில் சிங்களப்படை சந்தித்த ஆள் இழப்பு மிகமிக அதிகம். இந்த இரண்டு இராணுவ நிகழ்ச்சிகளுக்கும் இடைப்பட்ட, இந்த 20 மாதத்தில் சுமார் ஐயாயிரம் படையினர் கொல்லப்பட்டுள்ளனர். *(ஓயாத அலைகளில் 1400– சத்ஜயவில் 600– ஜயசிக்குறுவில் (இதுவரை) 3000)* ஏறக்குறைய எண்ணாயிரம் படையினர் காயமடைந்துள்ளனர். இந்த இழப்புகள் கொடுத்த மன உளைச்சல்களினால், இந்தக் காலப் பகுதியில் சுமார் பதினையாயிரம் சிப்பாய்கள் படையை விட்டோடியுள்ளனர். எனவே சிங்களப்படையை பொறுத்த வகையில் மொத்தம், இருபத்தெட்டாயிரம் படையினரை வன்னிப் போர்க்களத்தில் இழந்துள்ளது.

இவை காரணமாக சிங்களப் படை என்றுமில்லாதவாறு பாரிய ஆட்பற்றாக்குறையை எதிர்கொண்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

டுள்ளது. இதனால் வன்னிப் போரரங்கில் அது பாரிய சவால்களை நெருக்கடிகளைச் சந்திக்கின்றது. நவீன படைக்கலங்களை இறக்குமதி செய்து ஆட்பற்றாக்குறையை ஈடு செய்ய படைத்தலைமை முயல்கின்றது. ஆயினும் அவை எல்லாவற்றையும் நிறைவேற்றிக் கொடுக்கும் நிலையில் அரச பொருளாதாரம் இல்லை.

தமிழீழப் போரரங்குகளில் மரணிக்கும் பல்லாயிரம் சிங்கள இளைஞர்களின் சாவுகள் மற்றும் சிங்களவரின் முற்றத்திற்கே போர் விரிவாக்கம் பெற்றதனால் சிங்கள மக்களிடம் ஏற்பட்டுள்ள அச்ச உணர்வு பதட்ட நிலை காரணமாக போர் அமைச்சர் ரத்வத்த கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாகிவருகின்றார். போரையும் சரியாக நடத்தமுடியாமல் சமாதான நடைமுறைக்கும் வரமுடியாமல் சந்திரிகா அரசாங்கமானது திரிசங்கு சொர்க்க நிலைக்குள் சிக்கித்தவிக்கின்றது.

ஆட்பற்றாக்குறைப் பிரச்சினை, ஆயுதத்தட்டுப்பாட்டுப் பிரச்சினை, விநியோகப் பிரச்சினை புலிகளின் வீரியமான எதிர்த்தாக்குதல்கள் என பிரச்சனைச் சகதிக்குள் சிக்கி, சிங்களப்படை அல்லலுறுகின்றது.

சிங்கள அரசின் திரிசங்கு சொர்க்க நிலையிலும் சிங்களப்படையின் இயலாமையிலும்தான் ஈழத்தமிழர் விடிவே தங்கியுள்ளது.

சிங்களப்படைகள் நெருக்கடிக்குள் சிக்கித் தவிக்கும்போது நாம் போரைவேகமாக நகர்த்துவதன் மூலம் வெற்றியை விரைவாகப் பெற முடியும்.

இப்போது, வன்னிச் சமர் முனைகளில் தடுத்து நிறுத்தப்பட்டு முடக்கி வைக்கப்பட்டுள்ள படையினர் மீது வலிந்த தாக்குதல்களை நடாத்தி படையினரைக் கொன்று– விரட்டி ஆயுதங்களையும் கைப்பற்றி நிலங்களை மீட்கும் கைங்கரியத்தை புலிப்படை செய்யவேண்டியுள்ளது.

இந்தப் போர் உபாயத்தை வெற்றிகரமாகச் செயற்படுத்துவதற்கு புலிப் படையின் ஆட்பலம் அதிகரிக்கப் படவேண்டும்.

தமிழர் சேனையான புலிப்படைக்குத் தேவையான ஆட்பலத்தை, நிதிப் பலத்தை வழங்க வேண்டிய தவிர்க்கமுடியாத கடமை தமிழ் மக்களிடமே உண்டு. வேறெவரும் இந்த ஆட்பலத்தை, நிதிப் பலத்தை வழங்கி உதவமாட்டார்கள். இப்போது சர்வதேச சூழலும் தமிழர் போராட்டத்திற்கு சார்பாக திசை திரும்புகின்றது. போர்க்கள நிலையும் தமிழர் சேனைக்கு சாதகமாகவே உள்ளது.

தமிழீழ மக்களைப் பொறுத்தவரையில் இது ஒரு அரிய சந்தர்ப்பம். வெற்றி இலக்கை நோக்கி போரை வேகமாக நகர்த்துவதற்கேற்ற இந்த பொன்னான வாய்ப்பை எமது மக்கள் கைநழுவ விடக்கூடாது.

★★

# ஸ்கொட்லாந்து

இங்கிலாந்து, வேல்ஸ், ஸ்கொட்லாந்து, வட அயர்லாந்து ஆகிய நாடுகளைக் கொண்ட கூட்டமைப்பே ஐக்கிய இராச்சியம் என அழைக்கப்படுகிறது. இந்த நான்கு நாடுகளும் 200 ஆண்டுகளில் ஒன்றாக இணைக்கப்பட்டன. 1536–இல் இங்கிலாந்தின் அரசனான ஏழாவது கென்றி இங்கிலாந்தையும், வேல்ஸையும் ஒன்றாக இணைத்தார். ஸ்கொட்லாந்தை 17–ம் நூற்றாண்டில் முதலாவது அரசன் இணைத்து இம்மூன்று நாடுகளையும் ஒன்றாக்கி ஐக்கிய இராச்சியம் என பெயரிட்டு அழைத்தான்.

1967–இல் ஸ்கொத்லாந்தின் ராணிமேரி தனது முடியைத் துறந்து தனது மகனுக்கு ஜேம்ஸ் VI என்ற பட்டம் சூட்டி அவனை அரசன் ஆக்கினார். 1603–ம் ஆண்டுகளில் இங்கிலாந்தின் அரசியாக இருந்த எலிசபெத் மகாராணி இறக்க மகாராணியின் மைத்துனனான ஆறாம் ஜேம்ஸ் அரசன் இங்கிலாந்தின் முதலாவது ஜேம்ஸ் அரசனாக பதவி ஏற்றான்.

ஒரு நூற்றாண்டு காலமாக நடந்த சச்சரவுக்குப் பின் 1707–இல் நடந்த வாக்கெடுப்பில் ஸ்கொட்லாந்து இங்கிலாந்துடன் இணைவதை ஒரு சிறிய பெரும்பான்மை வாக்குகளால் ஏற்று வெற்ஸ் மினிஸ்ரர் பாராளுமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பட்டுள்ளன.

1800–ம் ஆண்டில் அயர்லாந்து தீவு இணைக்கப்பட்டு ஐக்கிய இராச்சியம் என்ற கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது. ஆனால் 1921–இல் அயர்லாந்தில் பெரும்பாலான பகுதிகள் பிரிந்து அயர்லாந்து குடியரசாக மாறியது. வடக்கேயுள்ள ஆறு மாநிலங்களும் புரட்டஸ்தாந்து மதத்தினை பெரும்பாலானதாக கொண்டிருந்ததால் வட அயர்லாந்து என்ற பெயருடன் ஐக்கிய இராச்சியத்தில் இருந்தது.

— சிறீகாந்த்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# உள்ளே கொதிப்புறும் ஒரு மனச்சாட்சியின் குரல்

**சின்னத்துவாரத்தினூடே தெரிந்த ஒளிக்கீற்றைச் "சூரியப் பிரகாசம்" என நம்பி வேடன் விரித்த வலையில் விழுந்து விட்டோமென்ற 'ஞானம்' இன்றுதான் எமக்கு விளங்கியது.**

க.வ. துரைரத்தினம்

தேசாந்திரம் புறப்பட்ட ஒரு தெருப்பாடகனைப் போல.. பட்டமரத்திற் குடியிருக்கும் பறவைகளைப் போல.... உழுத வயலில் வளைதோண்டும் அகிழானைப்போல... குடா நாட்டில் இன்று நாம் குடியிருக்கிறோம்.

சின்னத்துவாரத்தினூடே தெரிந்த ஒளிக்கீற்றைச் "சூரியப் பிரகாசம்" என நம்பி வேடன் விரித்த வலையில் விழுந்துவிட்டோமென்ற 'ஞானம்' இன்றுதான் எமக்கு விளங்கியது. எம்மை விடுவிக்க வந்ததாகக் கூறிய சிங்களப் படைகளைத் தேவதூதுவராக எம்மில் சிலர் நம்பினர். அவர்கள் முகத்திலணிந்திருந்த முகமூடியை உண்மைமுகமென எண்ணி ஊர் திரும்பினோம். இன்று பட்டுச்சேலையின் சரிகை கரைந்ததும் கட்டிய சேலை பழையதுதான் என்பதைக் கண்டுகொண்டோம்.



குடாநாட்டுக்குத் திரைபோட்டு உள்ளே நடப்பது வெளியே தெரியாதவாறு மறைத்துவிட்டு சிறீலங்காவின் பிரச்சார ஊடகங்களெல்லாம் புனரமைப்புப் பற்றியே பேசுகின்றன. சிந்திய கண்ணீருக்கு மாற்றீடாக யாழ்ப்பாண மக்களுக்கு சுதந்திர வாழ்வளித்துள்ளோமென்று எழுதுகின்றன. பன்னிரண்டு வருடப் பயங்கரவாத ஆட்சியிலிருந்து மக்களை மீட்டெடுத்து மிளிரச் செய்ததாகக் காட்டுகின்றன.

எங்கள் நெஞ்சை நாங்களே தொட்டு மனச் சாட்சிக்கு ஒரு பதில் கூறவேண்டிய தருணமிதுதான். வெள்ளைக்கொடி கட்டிய வீட்டிலிருக்கவும்.... இரவாகி ஊரடங்கு நேரத்தில் வெளியே போவதெனில் இரண்டு விளக்குகளுடன் செல்லவும்.... பத்து மைல் தூரத்துக்கு பஸ்சில் போவதற்கிடையில் பன்னிரண்டு இடங்களிற் பரிசோதனையென்று இறங்கியேறவும்... வந்து நிற்கும் சிங்களப் படையினர் எங்கள் பெண்களின் மேனியை காமக்கண் கொண்டு மேயவும், சில நேரங்களிற் தொடவும், கண்டும்காணாதது போல சகித்துக் கொள்ளவும்.... தினசரி சுற்றிவளைப்பென்று அவலத்துக்குள்ளாகவும்..... எல்லாவற்றுக்கும் மேலாக எங்களை நாங்களே தீர்மானிக்கமுடியாத, இருப்பிழந்துபோன மனிதக் கூடென உலவவுமா நாங்கள் குடாநாடு திரும்பினோம்?

பன்னிரண்டு வருடப் பயங்கரவாதிகளின் ஆட்சியென்று சந்திரிகா அரசினால் வர்ணிக்கப்படும் எம் பிள்ளைகளின் கட்டுப்பாட்டில் இருந்த காலத்தில் குடாநாட்டில் எப்போதாவது இப்படி நடந்ததா? அப்போது எப்படி இருந்தது? நள்ளிரவில்கூட எங்கள் பெண்பிள்ளைகள் நடுக்கமின்றி அந்த நாட்களில் உலவினர், பாட்டும், கூத்தும், பண்பாட்டு எழுச்சியுமாக எழில் கொண்டு விளங்கியது யாழ்குடாநாடு.

கசிப்பு இருந்ததா? காடையரின் தான்தோன்றித்தனங்கள் தலைவிரித்தாடியதா? ஆபாச சினிமாவும், இழிவுக் கலாச்சார எச்சங்களும் போதை மருந்துப் பொருட்களும் இருந்தனவா? தெருவிற்போய் வரும்போது அடையாள அட்டை காட்ட வேண்டிய அவலமேதும் இருந்ததா? நிம்மதியாக நாங்களும் விடுதலை நெருப்புடன் புலிகளும் தாய்பிள்ளை உறவோடு மகிழ்ந்திருந்தோம். இந்த மகிழ்ச்சியான காலத்தைத்தான் சந்திரிகா அரசு பயங்கரவாதிகளின் ஆட்சிக்காலமென்று கூறுகின்றது.

இந்தப் பன்னிரண்டு வருட காலத்தில் சிறீலங்கா அரசும், சிங்களப் படைகளும் எம்மீது கீறிய



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கோரங்கள் எத்தனை? இன்று புனரமைப்பு என்று புலம்பும் சிங்கள அரசு எம்மீது செய்த கொடூரங்கள் எத்தனை? கொலைகள் எத்தனை? இன்று கட்டியெழுப்புவோம் என்று சொல்லும் கட்டிடங்களையெல்லாம் குண்டு வீசி இடித்துக் கொட்டியது யார்? குடாநாட்டு வீதிகளைத் தார் பூசிச் சீர்செய்வதாக கூறுகின்றனர், இந்த வீதிகள் குண்டும் குழியுமானது யாரால்? நவாலியிலும், நாகர் கோவிலிலும் மனிதப் படுகொலைக்கு உத்தரவிட்டது யார்? இராஜவீதியில் பள்ளிக்குப் போன பிள்ளைகளைக் குண்டு வீசியழிக்கத் தேதிகுறித்தது யார்?

இந்துக் கோவில்களையும், கிறிஸ்தவ தேவாலயங்களையும் எறிகணை வீச்சுக்கும், குண்டு வீச்சு விமானங்களுக்கும் இரையாக்கியவர் எவர்? விடுதலைக்காக எழுந்து பறக்கத் தொடங்கியபோதே எமது இறக்கைகள் முறிக்கப்பட்டன. சுதந்திரவிடிவைக் காணும் ஆவலால் நாங்கள் கூவத்தொடங்கிய போதே எமது குரல்வளைகள் திருகப்பட்டன. ஆடிப்பாடித் திரிந்த எம் வீதிகள் ஆதிக்கசக்திகளின் சப்பாத்துக் கால்களினால் ஆக்கிரமிக்கப்பட்டன. நாங்கள் மூச்சுவிடவும், விலங்குடன் உலவவும் நேரமொதுக்கித் தந்துள்ளான் எதிரி.

இன்னேரத்துக்கு வெளியே வாவென்றும், இந்த நேரத்துக்குள்ளே உள்ளே போவென்றும் எங்களுக்கான இருப்புக்கு வந்தவொருவன் வரம்புகட்டி வைத்துள்ளான். இந்த எல்லைகளுக்குள்ளே சுளக்கயிற்றிற் கட்டி மேயவிடும் மாடுகளைப் போல வாழ்வதெம் விதியாச்சு. அவலவாழ்வுள்ளே நாங்கள் அந்தரிப்புக்குள்ளாகியுள்ளோம்.





நாங்கள் அவாவிய விடுதலையை அடித்து நொருக்கிவிட்டு, நாங்கள் ஆசைப்பட்ட சுதந்திரத்தை நசுக்கி கசக்கிவிட்டு வீட்டுக்கு மின்சாரம் தருகின்றனர். வாயைத் திறந்து பேசவும், பாடவும் கூடிக்கூத்தாடவும் எமக்கிருந்த விட்டு விடுதலையான வாழ்வைப் பறித்துவிட்டுத் தொலைபேசி தருகின்றனர். பெற்றோலுக்கும், மண்ணெண்ணைக் காகவுமே நாங்கள் போராடியதாகத் தப்புக் கணக்கிட்டுக் கப்பலில் வந்திறங்கும் பொருட்களுக்குக் கணக்குச் சொல்கின்றனர்.

**நாங்கள் கேட்டது இவையல்ல.**
**நாங்கள் கேட்பது இவையல்ல.**

நாங்கள் எம்மை எவருமே ஆளாத வாழ்வையே கேட்கின்றோம். நாங்கள் எம்மை நாமே தீர்மானிக்கும் இருப்பையே கேட்கின்றோம். நாங்கள் யாருக்கும் அடிமைகள் அல்லர்.

எங்கள் வீதிகளில் "சென்றி" கள் அமைத்து எங்கே போகின்றாய் என்று எம்மை இடைமறித்துக் கேட்காத வாழ்வுக்கே ஏங்குகின்றோம். அந்த வாழ்வை வழங்கப் போவதாகத் தென்மராட்சியில் எமக்கு உத்தரவாதம் கொடுத்தவர்கள் இன்று எதை வழங்குகின்றனர்?

**நாங்கள் எம்மை எவருமே ஆளாத வாழ்வையே கேட்கின்றோம். நாங்கள் எம்மை நாமே தீர்மானிக்கும் இருப்பையே கேட்கின்றோம். நாங்கள் யாருக்கும் அடிமைகள் அல்லர்.**

அழகான தேர்தல் நாடகமொன்றை அரங்கேற்றிவிட்டு, கோமாளிகளை ஆடவிட்டுள்ளனர். இந்தக் கொழும்புப் பிரமுகர்களுக்காகவா நாங்கள் தவமிருந்தோம்? பத்து வருடங்கள் தம்மைப் பாதுகாத்திருந்த இந்த முகமில்லா மனிதர்களுக்காகவா நாங்கள் குடாநாடு புகுந்தோம்? வேடமிட்டாடும் இந்த அரசியல் விபசாரிகள் எம்மையும் சோரம் போகலாம் வாருங்கள் எனத் தூண்டுகின்றனர். பேரினவாதப் பிசாசுகளுடன் இரவிற் கூத்தாடும் இந்தத் துரோகக் கூட்டம் பகலில் வந்து



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

எங்களுக்குக் கண்ணீர் துடைப்பதாகக் கணக்கு விடுகின்றனர். எமக்கு எல்லாம் விளங்கும்.

நீதியின் தராசில் நிறுவையிட்டு இருபக்கத்தையும் அளவிட்டறியும் வேளை வந்துள்ளது. மாரீசமானின் பொய்மைத் தோற்றத்தில் மயங்கியது போதும், அடங்கி வாழ்ந்தால் அனைத்தும் கிடைக்கும் இல்லையேல் ஒன்றும் கிடைக்காது உருக்குலைந்து போவீர் என்ற சிங்கள அரசின் மிரட்டலுக்குச் சிரம் தாழ்த்தியது போதும். சுதந்திரத்தின் பொருளறியாது, விடுதலையின் பெருமையறியாது, எம் பிள்ளைகளால் உயிர் கொடுத்துப் பெற்ற விடுதலைச் சுடரை அணைத்தவர் என்ற பழிச் சொல்லுக்கு நாம் ஆளாகக்கூடாது. கண்ணீர் விட்டு வளர்ந்த விடுதலைப் பயிரை கருகச் செய்தவர் என்ற அவப்பெயரை எதிர்காலச் சந்ததி எம்மீது சுமத்தக்கூடாது.

குடாநாட்டுக்கு உள்ளேயிருப்பதா? வெளியே இருப்பதா? என்பது விவாதத்துக்குரியதல்ல. எங்கிருந்தாலும் விடுதலை உணர்வுடனும் சுதந்திரத்தைப் பெறும் துணிவுடனும் வாழ்ந்தோமா என்பதே கணிப்புக்குரியது. காலம் கழியக் கழிய இன்னும் நெருக்கடிகளையும் இராணுவ அழுத்தங்களையும் சந்திக்கப்போகும் குடாநாட்டில் வாழும் நாங்கள் இதற்கு எப்படி முகம் கொடுக்கப் போகின்றோம் என்பதே கேள்வி. உலகமெங்கும் அடக்குமுறையாளர் போராடும் மக்களுக்கு கொடுத்த மரணமிரட்டல்களுக்கும், வதையின் கோரங்களுக்கும் பணிந்து சிங்கள அரசுக்குச் சிரம்தாழ்த்தப் போகின்றோமா? அல்லது நெஞ்சில் விடுதலை நெருப்புடன் தொடர்ந்தும் நிமிர்ந்து நின்று வேதனைகளையும் சோதனைகளையும் சந்தித்து வெற்றிகொள்ளப்போகின்றோமா?

கண்ணீராற் காத்த பயிரைக் கருகவிடுவோமெனில் அடக்குமுறையாளருக்கு நாங்கள் நல்ல மனிதர்கள். ஏதோ ஒரு வழியில், எங்கள் வல்லமைக்கேற்ற வகையில், போராடும் பிள்ளைகளுக்குச் சோறாவது கொடுத்தால் சுதந்திரதேவிக்கு நாங்கள் சொந்த மனிதர்கள். இந்த இரண்டு பக்கத்திலும் எந்தப்பக்கத்தில் நாமெம்மை இனம்காட்டப் போகின்றோம்?

சத்தியம் தோற்றதாகச் சரித்திரமில்லை. நாங்கள் முன்னெடுத்துள்ள விடுதலைப்போர் நமக்காக அல்ல. நம் சந்ததிக்காகவென்றுணர்ந்து கொள்வோம். பாதி வழி கடந்த விடுதலைப் பயணத்தைத் தொடர்வோம். எந்தத் துயர் வரினும் ஏற்றுக் கொள்வோம்.

**தொடர்ந்து நடப்போம்**
**விடுதலை கிட்டும் வரை.** □

## ஐம்பது வருடங்களுக்கு முன்னர்

# சிறீலங்காவின் சுதந்திர தினம்



ஐம்பது வருடங்களுக்கு முன்னர் 04.02.1948 அன்று ஒரு புதன் கிழமை. அதற்கு முந்திய வெள்ளி மகாத்மாகாந்தி கொலையுண்டதால் ஏற்பட்ட தாக்கங்கள் 133 வருட பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்து விடுபடப்போகும் இலங்கையர்களின் உற்சாகத்தைக் கணிக்க முடியவில்லை. பத்திரிகைகள் "டொமினியன்" பாராளுமன்றம் குறித்து மூச்சுவிடாமல் எழுதிக் கொண்டிருந்தன. பிரதான விழா கண்டியில்.

இடதுசாரிகள் அவ்வளவு உற்சாகமாக இருக்கவில்லை. பிரதம மந்திரியின் சுதந்திரதின உரை சிங்களத்தில் பி.பி.சி.யில் ஒலிபரப்பப்பட்டது.

சுதந்திரத்தை கொண்டாடுங்கள், புதிய சப்பாத்துக்களோடு சுதந்திரமாக நடமாடுங்கள் என்றது ஒரு விளம்பரம். புதிய சப்பாத்துக்களை வாங்க எல்லோருக்கும் வசதியிருக்கவில்லை என்ற யதார்த்தத்தை உணர்த்துவதுபோல் புதிதுபோல் ஆக்கப்பட்ட சப்பாத்துக்கள் என்று ஒரு திருத்தத்துடன் ஒரு நிறுவனம் விளம்பரம் செய்தது.

டொன் கரோலின் நிறுவனம் தேசிய கொடிகளை விற்பனை செய்தது. எம்.டி.குணசேனா நிறுவனத்தினர் அலங்கார வெளிச்சக் கூடுகளை விற்பனை செய்தனர். கொழும்பிலிருந்த பல திரையரங்குகள் புதிய ஆங்கில, தமிழ், ஹிந்தி, சிங்களப் படங்களை வெளியிட்டன. இதன்போது 886 கைதிகள் விடுவிக்கப்பட்டனர்.

கொழும்புத் துறைமுகத்தில் "நீர்த் திருவிழா". மிதக்கும் மேடைகளிலே தேசிய நடனங்கள் ஆடப்பட்டன.

வெளிநாட்டுச் செய்திகள் முக்கியத்துவம் இழந்து போயின. புதிய சுதந்திர சகாப்தம் தொடங்குகிறது என பெப்ரவரி 5–ம் திகதி ஒரு பத்திரிகை தலைப்புச் செய்தி எழுதியிருந்தது.

சுதந்திரதினக் கொண்டாட்டங்களை கேட்கவென பெரக் றேடியோக்கள் பற்றரிகளுடன் 97ரூபாய் 50 சதத்திற்கு விற்பனைக்கு விடப்பட்டன.

சுதந்திரதின விழாக்களை விமானத்தில் பறந்து காண விரும்பியோருக்கு எயார் சிலோன் நிறுவனம் விஷேட பறப்புக்களை ஏற்பாடு செய்திருந்தது. புகையிரதப் பகுதியின் 50 விஷேட புகையிரதங்கள் சேவைக்கு விடப்பட்டன. கண்டி–கொழும்பு வீதி அலங்கரிக்கப்பட்டது.

சிறீலங்கா மக்கள் இன்று உட்பட்டிருக்கும் கொலைகாரத்தனமான அழுத்தங்கள் இல்லாத மகிழ்ச்சியான நாட்கள் அவை.





www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# பத்தாண்டுகளாக எரியும் நெருப்பு

தமிழீழ மண்ணில் அன்னை பூபதியின் தியாகம் நிகழ்ந்து பத்தாண்டுகள் உருண்டோடிவிட்டன. அன்று அவர் என்னென்ன கோரிக்கைகளை முன்வைத்தாரோ அவற்றை ஏற்றுக்கொள்ள பத்தாண்டுகள் கடந்த நிலையிலும்கூட சிறீலங்கா அரசு தயார் நிலையில் இல்லை. சிங்களப் பேரினவாதத்திடம் உரிமை கேட்க அஹிம்சை ஆயுதத்தைப் பயன்படுத்த முடியாதென்பதற்கு ஏற்கனவே பல அனுபவங்கள் கிடைத்துவிட்டாலும்; அஹிம்சையைப் பயன்படுத்துவது தொடர்பாக தமிழினம் சிறீலங்காவையும் இந்தியாவையும் ஒன்றாகவே கணித்ததெனக் கூறமுடியாது. சிறீலங்கா அரசிடமிருந்து வேறுபட்ட, "தென்னாசியப் பிராந்தியத்தின் வல்லரசு" என்ற மதிப்பிற்குரிய பீடத்தில் வைத்தே இந்திய இராஜதந்திரத் தலைமையை தமிழீழ மக்கள் நோக்கினார்கள். தியாகி திலீபனும், அன்னை பூபதியும் உயிர் பிரிந்து போகும் இறுதிப் புள்ளிவரை அஹிம்சைக்கான மரியாதை இந்திய அரசிடமிருந்து கிடைக்குமென்று காத்திருந்தார்கள்; உயிரும் தந்தார்கள். இந்த உண்மையையும்; அதன் கனபரிமாணத்தையும் உணர முடியாது போனமையும்; ஆன்மத்தை வெற்றிகொள்ள போரால் முடியாதென்பதைப் புரிந்து கொள்ளாமையுமே இந்திய அரசு தமிழீழ மக்களின் மனங்களை வெற்றிகொள்ள முடியாமற் போனமைக்கான முதன்மைக் காரணங்களாகும்.

> அன்னை பூபதி அரசியல் வழியூடாகவே வாழ்ந்தவருமல்ல. அநியாயப் போருக்கெதிராகப் போர்க்கொடி தூக்கிய சாதாரண குடும்பப்பெண்ணே.

## அன்னை பூபதி

வடக்கையும், கிழக்கையும் இணைத்தலாகிய ஆரம்ப நடவடிக்கைக்கே இணங்க மறுக்கும் சிறீலங்கா அரசின் எண்ணங்களை வழிமொழிந்து போரிட்ட இந்திய அரசிற்கு, வடக்கிலிருந்து திலீபனும், கிழக்கில் இருந்து அன்னை பூபதியும் தியாகப் போர் புரிந்து உயிர்தர வேண்டியதாயிற்று. இப்பொழுது தமிழீழ மண்ணில் இந்திய இராணுவம் இல்லை. ஆனால் தியாகி திலீபனும், அன்னை பூபதியும் இருபெரும் தியாகச் சுடர்களாக தமிழீழ மண்ணோடும் மக்களோடும் நிலைபேறு பெற்றுவிட்டனர். "தர்மத்தின் ஆவேசம் ஒருவரில் சரியான படி குவியம் பெற்றால் தனிமனித சக்தியே போதும் ஒரு வல்லரசைத் தோற்கடிக்க" இந்த உண்மையைக் காந்தியிடம் கற்றுக் கொண்டு இந்தியாவைவிட்டு வெளியேறியது ஆங்கிலப் பேரரசு. இந்த உண்மையை மறந்ததால் ததால் அதையே இன்னொரு தடவை அன்னை பூபதியிடமும், திலீபனிடமும் கற்றுக்கொண்டு, தமிழீழத்திலிருந்து வெளியேறியது இந்திய அரசு. அன்னை பூபதியின் பத்தாண்டுகளைச் சீர்தூக்க இந்த ஒப்புவமையே போதுமானது.

மட்டக்களப்பைச் சேர்ந்த பூபதி கணபதிப்பிள்ளை என்னும் தமிழீழத் தாயின் உண்ணாவிரதப் போராட்டம் ஏற்கனவே நாமறிந்த உண்ணாவிரதப் போராட்டங்களிலிருந்து வேறுபட்டது. பழைய அஹிம்சைப் போராட்ட வாதிகள் ஏதோ வகையில் அரசியல் மயப்பட்டவர்களாகவே இருந்தனர். ஆனால் அன்னை பூபதி அரசியல் பாதையில் தனக்காக எந்தப் படிக்கட்டுக்களையும் அமைத்துக் கொண்டவரல்ல. அரசியல் வழியூடாகவே வாழ்ந்தவருமல்ல. அநியாயப் போருக்கெதிராகப் போர்க்கொடி தூக்கிய சாதாரண குடும்பப் பெண்ணே. மனைவி, தாய் என்ற






www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

குடும்பத்தின் பாச வலைகளை அறுத்துக் கொண்டு, ஒரு பெண்ணால் இந்த நெருப்பைக் கடக்க முடியாதெனவே முதலில் இந்திய இராணுவ அதிகாரிகள் தீர்மானம் பண்ணியிருந்தனர். 19.03.88 அன்று அவர் உண்ணாவிரதப் போராட்டத்தில் உட்கார்ந்தபோது அது சாதாரணமாகவே நோக்கப்பட்டது. ஆனால், நாட்கள் நகர நகர அவரின் ஆத்ம வெளிச்சம் தமிழீழ எல்லையையும் தாண்டி, ஒளிபரப்பத் தொடங்கியது. இராணுவ அதிகாரிகள் அதைத் தடுப்பதற்குப் பகிரதப்பிரயத்தனமெடுத்தனர்.

எனினும் அன்னை பூபதியின் மனவுறுதியைத் தகர்த்துவிட அவர்களால் கடைசிவரை முடியாமலே போய்விட்டது. இது அன்னை பூபதி புரிந்த அசுர சாதனையாகும். அவரின் இறுதிப்பயணத்தால் மக்கள் எழுச்சி ஏற்பட்டுவிடக்கூடாதென்பதற்காக மட்டுநகர் முழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டது. அதையும் தகர்த்துக்கொண்டு சுமார் ஐயாயிரம் மக்கள் வீதியில் இறங்கினரென்றால்; அந்த எழுச்சியைத் தூண்டிய விசையென அன்னை பூபதியின் ஆத்ம பலத்தைக் குறிப்பிடலாம். அந்த நிகழ்ச்சி தமிழீழத்தில் வெடித்துள்ள மக்கள் போராட்டத்தை யாருமே தடுக்க முடியாதென உணர்த்தியபடியே அமைதித் திரையைக் கிழித்துக் கொண்டு உலகின் முன் தரிசனமாக்கியது.

யுத்தத்தை நிறுத்தியாக வேண்டும். நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைக்கு இந்திய, சிறீலங்கா அரசுகள் முன்வரவேண்டுமென்ற அன்னையர் முன்னணியின் கோரிக்கைகளை இறுதிவரை ஏற்க மறுத்தது இந்திய அரசு. அவர்கள் அஞ்சிய "தமிழீழ அரசு உருவாவது இந்திய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கும்" என்ற கருத்தியல் எங்கிருந்து வளர்ந்ததென அறிய முடியாவிட்டாலும்; அக்கருத்தியலானது எப்பொழுதுமே சிங்களப் பேரினவாதத்திற்குச் சாதகமாகவும்; தமிழீழ மக்களுக்குப் பாதகமாகவுமே இருந்து வருகிறது. இந்திய அரசியல் சட்டப்படி " இந்திய ஒன்றியத்தின் தனித்தன்மையை யாரும் கேள்வி கேட்கக் கூடாது. பிரிந்து செல்வதற்கான உரிமை



யோடு கூடிய சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை சட்டவிரோதமானது." இந்த அடிப்படை உரிமைக் கோரிக்கையில் கட்டியமைக்கப்பட்ட ஓர் அரசின் ஆட்சி அதிகாரங்களுக்கு ஒரு இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையானது பாரதூரமான விடயமாகப்படுவது இயல்பானதே. ஆனால், இதில் ஓர் நுட்பமான

அன்னை பூபதியின் மனவுறுதியைத் தகர்த்துவிட அவர்களால் கடைசிவரை முடியாமலே போய்விட்டது. இது அன்னை பூபதி புரிந்த அசுர சாதனையாகும்.

விடயம் மறைந்திருப்பதை நாம் அவதானித்தல் வேண்டும். சுயநிர்ணய உரிமையைத் தாமாகக் கேட்பது ஒருவகை, அவ்விதம் கேட்கும்படியான நிலைக்கு ஓர் இனத்தைத் தள்ளிவிடுவது இன்னோர் வகையானது. தமிழீழத்தை சுயநிர்ணய உரிமையைக் கோரும் விளிம்பு நிலைக்குத் தள்ளியது சிறீலங்கா அரசே. தமிழீழத்தில் உணவுப் பொட்டலங்களை வீசி இந்திய அரசே அதை உறுதிப்படுத்தியுமிருக்கிறது. ஆகவேதான் இந்தியா இந்த நுட்பமான உண்மையை என்றாவது விளங்கிக் கொள்ளும்; நியாயத்தின் பக்கமாகத் தன்னைத் திருப்பிக்கொள்ளும் என்று, திலீபனின் அனுபவத்திற்குப் பிறகும் கூட அன்னையர் முன்னணி நம்பியிருக்கிறது. அந்த நம்பிக்கைக்கு சாட்சியமாக முன் வந்தவரே அன்னை பூபதி. "இலங்கை அரசாங்கம் இனப் பிரச்சினையில் ஒன்றாகத் தன்னை ஒரு போதும் அடையாளம் காட்டிக் கொள்ளவில்லை. மாறாக அதை உருவாக்குகின்ற ஒன்றாகவே காட்டி வந்துள்ளது" என்று அரசியல் விஞ்ஞான ஆய்வாளர் பழனித்துரை இந்தியாவிலிருந்தே சுட்டிக்காட்டியிருப்பதையும் நாம் இங்கு மனதில் கொள்ளவேண்டும்.

"இலங்கையும் இந்தியாவில் ஒரு பகுதிதான். இந்தியக் கூட்டமைப்பில் சுயாட்சி பெற்ற அலகாக அது இருக்க வேண்டும்" இப்படியொரு கருத்தை நேரு கூறியதாகத் தெரிவிக்கிறது' நேரு தேர்ந்தெடுக்கப்பட்ட படைப்புக்கள்' என்ற நூலின் 450–வது பக்கம். இது எந்தளவிற்குச் சாத்தியமான கூற்றென்பது இங்கு அவசியமானதல்ல; ஆனால் 'இலங்கைத் தீவின் சுயாட்சி' என்ற சொற்பதம் இந்திய மாநிலங்களுக்கில்லாது போகும் சுயநிர்ணய உரிமையை இலங்கைத் தீவு கொண்டிருக்கிறதென்ற கருத்தை அங்கீகரிக்கும் வாசகமாகவே கொள்ள முடியும். அப்படியாயின் இலங்கைத் தீவில் வாழும் தேசிய இனமான தமிழினத்திற்கு மட்டும் அவ்வுரிமை மறுக்கப்படுவது ஏன்? அன்னை பூபதியும் திலீபனும் இதைத்தான் கேட்டனர். இது சிறீலங்கா அரசிற்கு எதிரான கோரிக்கையல்ல. இதை எதிர்த்து வருவதானால் இந்திய சிறீலங்கா அரசுகள் இதுவரை எந்த நலனையும் அடைந்துவிடவில்லை. அன்னை பூபதிக்குப் பின்வந்த பத்தாண்டுகள் தெளிவாக உணர்த்திவிட்ட உண்மைகள் இவை. இந்த மாபெரும் சிக்கலிலிருந்து தமிழீழ மக்களையும், இந்திய , சிறீலங்கா அரசுகளையும் மீட்கக்கூடிய ஒரேயொரு முடிவு தமிழீழ மக்களின் நியாயபூர்வமான கோரிக்கைக்கு வழிவிடுவதுதான். இதற்காகவே அன்னை பூபதி தியாகம் புரிந்திருக்கிறார் என்பதை விளங்க மேலுமொரு பத்தாண்டுகள் அவசியமற்றவை.

கி.செ துரை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# அந்தக் குண்டு

**சிங்கள அரசின் 'ரிவிரச' யாழ்ப்பாணத்தை இடம் பெயரச் செய்தது. வீரமிகு குண்டுத்தாக்குதல் ஒன்று பேரினவாதத்தின் சுதந்திரப் பொன் விழாவை இடம்பெயரச் செய்து விட்டது.**

பண்டைய சிங்கள இராசாக்கள் தங்களது இராசதானிகளை அடிக்கடி இடம்மாற்றிக் கொண்டிருந்தார்கள். அநுராதபுரம்– பொலநறுவை– தம்பாதனிய– மகியங்கண– கண்டி என்று அவை காலத்திற்கு காலம் இடம் பெயர்ந்து திரிந்தமைக்கு தமிழர் படையெடுப்பே காரணம் என்று சிங்கள வரலாற்றாசிரியர்கள் கூறுகின்றனர்.

> சிங்கள பௌத்த பேரினவாதத்தின் உயிர் நிலையாகவும் அதன் அரசியல் சித்தாந்த தளமாகவும் தலதாமாளிகையை மையமாகக் கொண்ட கண்டி செயற்பட்டு வருகின்றது

கண்டியில் இருந்து கொழும்புக்கு மாற்றப்பட்ட சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டத்தையும் அந்த இடப்பெயர்வு வரலாற்றின் தொடர்ச்சியாக, அவர்கள் சொல்லப்போகின்றனர்.

சுதந்திரப் பொன்விழாவின் சிறப்பு அம்சமாக தனது அரசாங்கம் சாதித்த முக்கிய ஒரு சாதனையை முதன்மைப்படுத்திக் காட்ட சந்திரிகா அம்மையார் விரும்பியிருந்தார். தமிழர் நிலத்தை ஆக்கிரமித்துவரும் இராணுவச் செயலை அதற்காகத் தேர்ந்தெடுத்தார். சிங்கள மக்களின் இனவாத உணர்வைத் தூண்டி அரசியல் ஆதாயம் தேடவும் முயன்றார். இந்தப் பேரினவாத விழாவைக் கொண்டாடுவதற்கேற்ற பொருத்தமான இடமாக கண்டி தலதாமாளிகை முன்றலைத் தேர்ந்தெடுத்தார்.

சுதந்திரதின விழாக்கள் தலைநகரங்களில் நடைபெறுவதுதான் பொது வழமை. சிறீலங்காவின் ஆட்சிமையமாகவும் பொருண்மிய கேந்திர நகரமாகவும் பல்லின மக்கள் வாழும் பெரு நகராகவும் தலைநகரான கொழும்பே விளங்குகின்றது. அப்படியிருக்க பொன்விழாவிற்காக கண்டி தேர்ந்தெடுக்கப்பட்டது ஏன்?

கண்டி, கடைசியாகப் பறிபோன சிங்கள இராசதானி.

அதேவேளை, சிங்களவர் கைகளில் தீவின் ஆட்சி அதிகாரத்தை பிரித்தானியா ஒப்படைத்தபோது அதைப் பெறுமிடமாக கண்டி தலதாமாளிகை முன்றலையே சிங்கள ஆளும் வர்க்கம் தேர்ந்தெடுத்திருந்தது. அத்துடன், தமிழருக்கு ஓரளவிற்கேனும் உரிமை வழங்க முயன்ற பண்டா செல்வா ஒப்பந்தத்தைக் கிழித்தெறிய வைக்க ஜே.ஆர். நடாத்திய இனவாத அரசியல் யாத்திரையும் தலதாமாளிகை நோக்கியே நடாத்தப்பட்டது.

1995–இல் சிங்களப் படை







www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

களால் யாழ்ப்பாணம் ஆக்கிரமிக்கப்பட்டபோதே அதன் வெற்றி விழா கண்டியிலும் கொண்டாடப்பட்டது. இப்போது, குடாநாட்டிற்குத் தரைப்பாதை அமைத்துவிட்டு அந்த இராணுவ வெற்றிவிழாவை ஒரு பொன்விழா பரிசாக இனவாத பூதத்திற்கு வழங்க கண்டியை சந்திரிகா அரசாங்கம் தேர்ந்தெடுத்துள்ளது.

இனவாதத்திமிரை வெளிப்படுத்தியபடியும் இராணுவச் சவால்களைத் தொடுத்தபடியும், சிங்கள அரசு பொன்விழா கொண்டாட்ட ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்த போது தலதாமாளிகை முன்றலில் அந்தப் பேரிடி இறங்கியது.

இவ்விதமாக, சிங்கள பௌத்த பேரினவாதத்தின் உயிர் நிலையாகவும் அதன் அரசியல் சித்தாந்த தளமாகவும் தலதாமாளிகையை மையமாகக் கொண்ட கண்டி செயற்பட்டு வருகின்றது.

எனவேதான் பேரினவாத அரசாங்கத்தால் பேரினவாத விழாவிற்காக பேரினவாதத்தின் தலைநகரான கண்டிதேர்ந்தெடுக்கப்பட்டிருந்தது.

இனவாதத்திமிரை வெளிப்படுத்தியபடியும் இராணுவச் சவால்களைத் தொடுத்தபடியும், சிங்கள அரசு பொன்விழா கொண்டாட்ட ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருந்தபோது தலதாமாளிகை முன்றலில் அந்தப் பேரிடி இறங்கியது.

பல்லாயிரம் படையிரம் படையினரையும் அவர்களது பாதுகாப்பு வல்லமைகளையும் துளைத்துக் கொண்டு அவர்கள் எங்கிருந்தோ உதித்து ராஜவீதியில் மிதந்தார்கள். பேரினவாதத்தின் முற்றத்தில் நகர்ந்து அதன் நெஞ்சு மீது ஏறிமிதித்து மூக்கின் மேலால் நகர்ந்து இரண்டு கண்களுக்கும் நடுவால் நழுவிப் போய் அந்த இராணுவ அற்புதத்தைப் படைத்தார்கள்.

தமிழீழத்திற்கு எதிராகப் போரைத் தொடக்கி தமிழர்களை இன அழிப்புச் செய்து கொண்டிருந்த பேரினவாத பூதத்திற்கு அதன் உயிர் நிலையிலேயே பலத்த பதிலடி விழுந்து விட்டது. இனவாதப் பொன்விழாவையும் அகதியாக்கி தனிமைக்குள் முடக்கிவிட்டது. சந்திரிகா ரத்வத்த குழுவினரின் இராணுவத்திமிரையும் அடக்கிவிட்டது.

✱✱




## காணவில்லை

ஓ...பெண்புலியே
தென்றல் கூட புயலாகும்
என்பதை உன்னால்
தெரிந்து கொண்டேன்
பூ கூட பூகம்பமாகும்
என்பதை உன்னால்
புரிந்து கொண்டேன்

ஓடை கூட கடலாகும்
என்பதை உன்னால்
கண்டு கொண்டேன்

பூனை கூட புலியாகும்
என்பதை உன்னால்
பார்த்துக் கொண்டேன்

ஆனால் காணவில்லை
பெண்புலியே நீ
இறக்கும் வரை உறங்கியதை
இருக்கும் வரை இறந்ததை

ந. கலைஅமுதா

## இது புதுயுகம்

கண்களில் அனல் வீச
கரங்களில் ஆயுதம் பேச
நெஞ்சினில் உறுதி உரமேற
வீரம் கொழுந்துவிட்டெரிய
கால்கள் வெற்றிநடை போட
பகலென விடியல் நாட.....
எழுந்திட்ட மறத்தமிழன்
விரைந்திட்ட செய்தி கேட்டு
கலங்கிட்டது சிங்களம்
துலங்கிட்டது தமிழ் வீரம்
வியந்திட்டது உலகம்
பறந்திட்டது புலிக்கொடி
தமிழ்மானம் திகழ்ந்தது இங்கடா
மலரப் போவது தமிழீழம் அங்கு
மகிழப்போவது தமிழ்மொழி

த. மதியழகன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தேசியப் பொறுப்பும் காலப் பணியும்

தொடர்ச்சியான இராணுவ நடவடிக்கைகள் மூலம் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்ட யாழ் குடாநாடு அண்மையில் சிறீலங்கா அரசினால் நடத்தப்பட்ட ஒரு தேர்தல் நாடகத்தைக் கண்டுள்ளது. இது வெளிப்பார்வையில் ஜனநாயக வழிமுறை ஒன்று அரங்கேற்றப்பட்டதாக தோற்றங்காட்டலாம். ஆனால், இது இயல்புவாழ்க்கை தோன்றிவிட்டதாக அரசு உருவாக்க முயலும் உருவாக்கத் தொடரின் ஒரு அங்கமே, ஏற்கனவே அரசும், அரசுசார்பு தொடர்பு சாதனங்களும் இப்பணியை அழகுடனும் வெகு நுட்பமாகவும் ஆழத்துடனும் ஆரம்பித்துவிட்டன.

யாழ் குடா நாட்டில் வாழும் மீனவர்கள், விவசாயிகள், மாணவர்கள், கலாச்சாரவாதிகள் பொது அமைப்புகளைச் சார்ந்தோர் போன்றோர் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டதும், அவ் விஜயங்கள் தொடர்பு சாதனங்களில் முக்கிய நிகழ்ச்சிகளாக்கப்பட்டு மிகவும் பிரபலப்படுத்தப்பட்டதும் இந்த நோக்கிலானவையே. விளையாட்டுக் குழுக்கள் கூட யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்டதும், அழைத்துச் செல்லப்பட்டவர்களுடன் சிங்கள விளையாட்டு வீரர்கள் போட்டிகளில் இணைந்து பங்கேற்றமையும், இந்நிகழ்ச்சிகளில் அமைச்சர்களே நேரில் பிரதம அதிதிகளாக கலந்துகொண்டதுமான செய்திகள் ஏனைய முக்கியத்துவம் வாய்ந்த பல செய்திகளையே சில காலம் பின்னுக்குத் தள்ளிவிட்டிருந்தன.

யாழ்ப்பாணத்திலிருந்து அழைத்துச் செல்லப்பட்ட பிரதிநிதிகள் கொழும்பில் தெரிவித்த சில கருத்துக்கள் அரசின் நோக்கத்திற்கு சாதகமாக அமைந்திராத பட்சத்தில் அவை இருட்டடிப்புச் செய்யப்பட்டதும், முக்கியத்துவம் கொடுக்கப்படாததும் குறிப்பிடத்தக்க விடயமாக நாம் கவனத்திலெடுக்க வேண்டியது.. இருந்தபோதும் இவர்களின் பயணங்கள், யாழ் மண்ணில் ஒரு சாதாரண வாழ்வு முறை நிலவுவதாகக் காட்டப்படுவதற்கே தொடர்பு சாதனங்களால் அதிக அளவில் பயன்படுத்தப்பட்டன. இந் நடைமுறைத் தொடரில் நாம் சந்தித்த இறுதிக் கட்டமே யாழ் உள்ளூராட்சித் தேர்தலாகும்.

இலங்கைத் தீவின் இனப்பிரச்சினை உச்சக்கட்டம் எய்தி ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாகப் பரிணமித்து முழு உலகின் கவனத்தையும் ஈர்க்கும் இக்காலப் பகுதியில் தனது கர்ணகடூரமான ஒடுக்குமுறை நடவடிக்கைகளையும், இன ஒழிப்பு முயற்சிகளையும், மனித உரிமை மீறல்களையும் மறைக்க இப்படியான ஒரு தேவை அரசுக்கு ஏற்பட்டிருப்பது ஆச்சரியமானதல்ல.

**இன்று யாழ் குடாநாட்டில் பல புதிய தொடர்பு ஊடகங்கள் தோன்றுகின்றன. புதிய படைப்பாளிகள் இவற்றில் பங்கேற்கிறார்கள். கலாச்சார நடவடிக்கைகள் தொடருகின்றன. ஆனால் இவற்றினூடாக எமது தேசியக் கடமை முன்னெடுக்கப்பட வேண்டும். பொய்மைகளும் மாயைகளும் கிழித்தெறியப்படக் கூடியதாக இந்த முயற்சிகள் அமைய வேண்டும்.**

ஆனால், யாழ் குடாநாட்டில் நிலவும் நிலமையோ நேர்மாறானது என்பது யாவரும் அறிந்ததே. யாழிலிருந்து கொண்டு சென்று காட்சிப் பொருளாக்கப்படும் இம்மீனவர்களுக்கு கடலில் சென்று நிம்மதியாகத் தொழில் செய்யச் சுதந்திரம் இல்லை. மீன்பிடி உபகரணங்கள் இல்லை. பேட்டியாளர்களாகத் தோன்றிய விவசாயிகள் தமக்கான உள்ளீடுகள் சந்தை வாய்ப்புக்கள் இன்றியே இன்றுவரை இன்னல்களைச் சந்திக்கின்றனர். இவ்வாறே மாணவர்கள், விளையாட்டு வீரர்கள் என்போரும் தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையிலேயே அரசின் தேவைகருதி பிரச்சாரப் பொருட்களாகப் பயன்படுத்தப்பட்டிருக்கின்றனர்.

இவை ஒரு புறமிருக்க எங்கே, எப்போது, எதற்காக என்று தெரியாதவகையில் கைது செய்யப்படக் கூடுமோ, காணாமற் போகவேண்டி வருமோ என்ற மனப்பீதியுடனான ஒரு வாழ்க்கை இங்கு விதிக்கப்பட்டுவிட்டது. நாளாந்தம் பல தடைகளைத் தாண்ட வேண்டியுள்ள பயணங்களும் தடைகளைத் தாண்டி குடாநாட்டுக்குள் வரமுடியாத பொருட்களுமாக நெருக்கடிகள் நிறைந்த ஒரு நிலமை நிலவி வருகிறது. குறிப்பாகச் சொன்னால் ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையின்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

நாற்றம் குடாநாடெங்கும் வீசுகின் றது எனலாம்.

இங்கிருந்து சிறீலங்காத் தலைநக ரின் தொடர்பு சாதனங்களின் பிரச்சாரத் தேவைகளுக்குப் பயன் படுத்தப்பட்ட இந்த அப்பாவிகள் கூட, வகுக்கப்பட்ட எல்லைகளுக் கப்பால் எட்டிப்பார்த்தாலும் கைது செய்யப்படும் அபாயக் கோட்டைத் தாண்ட முடியவில்லை.

நிலவும் இன ஒடுக்கு முறையில் எவ்வித மாற்றமும் இதுவரை காணப்படவில்லை. வாழ்வு நிலை யில், வளத்துக்கான அறிகுறிகள் கூடக் காட்டப்படவில்லை. தனிம னித அடிப்படைத் தேவைகளுக்கும் நிறைவேற்றத்திற்கும் இடையிலான சுவர்கள் அகற்றப்படவுமில்லை. அகற்றப்படப் போவதுமில்லை. சமாதானத்திற்கான யுத்தம், தீர்வுப் பொதி என்பன எவ்வாறு அரசின் பேரினவாதம் அணிந்து வந்த முக மூடிகளாக முன்னின்றனவோ அவ் வாறே, இவ்வியல்பு வாழ்க்கை நிலவு கிறதென்று காட்டப்படும் மாயை மீண்டும் ஒரு சூழ்ச்சிப் பொறியாக எழுந்து நிற்கின்றது.

இந்த மாயத்திரை கிழித்தெறியப் பட வேண்டும் உண்மை உலகின் கண்களில் தெரியவேண்டும்.

இதை நிறைவேற்றக்கூடிய அறி வும் ஆளுமையும் தொடர்பு வசதிக ளும் எமது மண்ணில் வாழும் அறிவு



ஜீவிகளுக்கே உண்டு. சமூக ஸ்தாப னங்களாக உருவெடுத்துள்ள மனிதா பிமானிகளே! படைப்புக் கலையில் உலகை நெறிப்படுத்தி வரும் கலை, இலக்கிய கர்த்தாக்களே! ஒவ்வொரு தமிழ் மகனும் தன் தேசிய தனித் துவத்தைப் புரிந்து கொள்ள வேண் டும்; அதற்கு நீங்கள் உழைக்கவும் வேண்டும்.

வெறும் இனக்குழுவாகக் கையேந் தும் நிலையில் எம்மை மாற்ற முனையும் அரசின் விஷ முயற்சியின் மயக்கத்திற்கு அப்பால் நாம் ஒரு தனித் தேசிய இனம் என்பது உணரப் பட வேண்டும். பிரச்சினையின் தீர்வு என்பது யுத்தத்தால் ஏற்படுத்தப் பட்ட, ஏற்படுத்தப்படும் அனர்த்தங் களிலிருந்து விடுபடுதல் என்ற வட்டத்திற்குள் அடங்கிவிடுவதல்ல. விடுதலையின் சுகத்தை முழுமை யாக அனுபவிப்பது என்பது எம் ஒவ்வொருவரின் எண்ணத்திலும் செயலிலும் ஸ்தாபிதமாக வேண்டும்.

இன்று யாழ் குடாநாட்டில் பல புதிய தொடர்பு ஊடகங்கள் தோன்று கின்றன. புதிய படைப்பாளிகள் இவற்றில் பங்கேற்கிறார்கள். கலாச் சார நடவடிக்கைகள் தொடருகின் றன. ஆனால் இவற்றினூடாக எமது தேசியக் கடமை முன்னெடுக்கப்பட வேண்டும். பொய்மைகளும் மாயை களும் கிழித்தெறியப்படக்கூடியதாக இந்த முயற்சிகள் அமைய வேண்டும்.

ஒடுக்கு முறை இருட்டுக்குள் விடுதலை உயிர்ப்புள்ள ஒரு துண்டுப் பிரசுரமும் சுவரொட்டியும் கூடப் பெரும் ஒளிச் சுடராக ஒளிரும்.

இவையெல்லாம் எமது கருத்துல கவாதிகளின் தேசியப் பொறுப்புக் குரியன. இந்தத் தேசியப் பொறுப்பை கையேற்கத் தயங்குவதும், மௌனம் கொள்வதும் எதிரிக்குச் சாதகமாக அமைந்துவிடும் அபாயமானது.

---

# ஏவுகணைகள் எந்தரகம்

தமிழ்மாறன்

வானில் தினம் அலையும்
மரணப் பறவை மனிதர்கள்
வாழும் மனைகள் மீது
குண்டுகள் வீசியது
கோரப் பற்கள் பதித்து
மீண்டும் வானில் மறைந்து போனது

ஒன்றாகி வாழ்ந்த உறவுகள்
உருக்குலைந்து போனதன் பின்
ஐயோ என்ற அவலக்குரல் எழுந்து
வானைப் பிளந்த போதும்
யார் தான் திரும்பிப் பார்த்தார்கள்?
இன்று கண்டெடுத்த சிறு குண்டும்
வெளிநாடு சென்றதாம்
ஏவுகணைகள் எந்த ரகம்?
பொய்மையே வெல்லும் என்ற
பொல்லாத மனிதர்கள் அல்லவா-நீங்கள்
உங்கள் வார்த்தைகள் வலுப்பெற்றிடுமா
வான் பறவையே உன்னை
தாக்கவரும் ஏவுகணைகள்
தரைமீதிருந்து எழவில்லையே
வானிலே தான் தளங்கள்
நிரந்தரமாக நிர்மானிக்கப்பட்டன

மனித ஆன்மாவிலிருந்து பிரிந்து
சென்ற ஏவுகணைகள் வான் முழுதும்
வலம் வருகின்றன தொடர்ந்தும் இனி
உனது மரணங்கள் தொடர் கதையாகும்.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# தாங்க முடியாத வங்குரோத்தாகும்

"சிறீலங்கா கீழைத்தேசத்து சுவிசர்லாந்தாக விளங்கும் என்ற நல் நம்பிக்கை நிறைவேறவில்லை. உலகின் பதினெட்டு வறிய நாடுகளில் ஒன்றாக சிறீலங்கா மாறிவிட்டது". "உலகின் ஆகக்கூடிய அளவு தற்கொலை இடம்பெறும் நாடாகவும், போதைப் பொருள் பாவனை நாடாகவும், கூடுதல் கொலைகளையும், திருட்டுக்களைக் கொண்ட நாடாகவும் உருவாகியுள்ளது".

தபால், தொலைத்தொடர்பு, சாதன அமைச்சர் மங்களசமரசவீர.

"எமது பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு கட்சிப் பொறுப்பை ஏற்ற பின் பெருந்தோட்டங்களை விற்றது. ஷெல்காஸ் மற்றும் ரெலிகொம் ஆகிவற்றை விற்றே இந்த யுத்தத்தை நடத்த வேண்டியுள்ளது. 1997–ம் ஆண்டின் யுத்தச் செலவு ரெலிகொம் நிறுவனத்தை விற்றே ஈடுசெய்யப்பட்டது. எனவே 1998–ம் ஆண்டிற்கான நிதியை எங்கிருந்து பெறுவது"

லங்கா சமசமாஜக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரும், கட்சியின் செயலாளருமான பட்டிவீரக்கோன்.

வருடாந்த வரவு–செலவுத் திட்டத்தின்படி சிறீலங்கா அரசின் இன்றைய யுத்தச் செலவீடானது 4500 கோடி ரூபா ஆகும். இது சிறீலங்காவின் வருடாந்தச் செலவீட்டில் 20 வீதத்திற்கு அதிகமானதாகும். இது தேசிய வருமானத்தில் 6.5 சதவீதம் மேலானதாகும்.

இவ்வீதாசாரமானது உலக யுத்தச் செவீட்டிற்கென பெருந்தொகை நிதியை ஒதுக்கும் நாடுகளின் வரிசையில் சிறீலங்காவையும் சேர்த்துக் கொண்டுள்ளது. குறிப்பாக ஈராக், இஸ்ரேல், பாகிஸ்தான் சிரியா போன்று எப்பொழுதும் அண்டை நாடுகளுடன் யுத்தத்திற்கெதிரான தயார் நிலையில் படைகளை வைத்துக் கொண்டுள்ள நாடுகளின் செலவீடு போன்று சிறீலங்காவின் செலவீடு உயர்மட்டத்தில் உள்ளது. ஆனால், இதில் உள்ள வேறுபாடு யாதெனில் அந்நாடுகள் யாவும் அண்டை நாடுகளுடன் போருக்கான செலவீடாக இது இருக்கையில் சிறீலங்கா அரசானது 'உள் நாட்டுப் போர்' ஒன்றிற்காக இவ்வளவு பெருந்தொகை நிதியை ஒதுக்கீடு செய்கின்றது. இந்த வகையில் இச் செலவீடானது பெரும் முக்கியத்துவம் பெறுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதே சமயம் வரவு–செலவுத் திட்டத்தில் ஆரம்பத்தில் ஒதுக்கப் படும் செலவீடு மட்டும்தான் சிறீலங்கா அரசிற்கான யுத்தச் செலவீடு என மதிப்பீடு செய்தல் தவறானதாகும். ஏனெனில், வருடாந்தம் இவ் ஒதுக்கீட்டுத் தொகையைவிட குறைந்தது 1000 கோடி இராணுவச் செலவீட்டிற்கென குறைநிரப்பு பிரேரணை மூலம் ஒதுக்கப்பட்டு வருகின்றது. ஒருவகையில் இது கடந்த பல வருடங்களாக இடம்பெறும் வழமையான நடவடிக்கைகளாகவே மாறி வந்துள்ளது.

ஆனால் யுத்தத்தின் செலவீட்டை மதிப்பீடு செய்தல் என்பது வரவு–செலவுத்திட்ட மதிப்பீடு மற்றும் குறை நிரப்பு பிரேரணை மூலமான ஒதுக்கீடு என்பனவற்றுடன் மட்டும் நின்றுவிடுதல் செலவீடு குறித்து பிழையான முடிவினையே கொடுக்கக்கூடியதாகும்.

ஏனெனில், யுத்தத்திற்கென சிறீலங்கா அரசின் சகல வளங்களுமே திருப்பிவிடப்பட்டுள்ளன என்பதே யதார்த்தமானதாகும். இந்த நிலையில் யுத்தச் செலவீட்டிற்கென நேரடியாக ஒதுக்கீடு செய்யப்படும் நிதியினைத் தவிர வேறு துறைகளுக்கு ஒதுக்கப்படும் நிதியும் பெருமளவில் யுத்தத்திற்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

எடுத்துக்காட்டாக சுகாதார அமைச்சிற்கென ஒதுக்கப்படும் நிதியில் கணிசமான அளவு யுத்தத்தில்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# யுத்தச் சுமையால் சிறீலங்கா !

காணப்படும் இராணுவத்தினருக்கான சிகிச்சை என்ற ரீதியில் செலவு செய்யப்படுகின்றது. இதில் மருந்துச் செலவீடு மட்டுமல்ல இராணுவத்தினருக்கான வைத்தியசாலை கட்டுமானம் தொழில் நுட்பக் கருவிகள் இறக்குமதி என்ற ரீதியில்கூட பெருமளவு நிதி செலவீடு செய்யப்படுகின்றது.

இதே போன்று பொருளாதார அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் நிதியின் ஒருபகுதியும் யுத்தச் செலவீட்டிற்குச் செல்கின்றது. எடுத்துக் காட்டாக மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் பெயரில் ஒதுக்கீடு செய்யப்பட்ட கனரக வாகனங்கள் பெருமளவில் யுத்த முனையில் பாவனைக்குக் கொண்டுவரப்பட்டன. இதில் புல்டோசர்கள், ட்ரக்குகள் என்பன முக்கியமானவையாகும்.

**புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் இராணுவம் மேற்கொள்ளும் பாரிய தாக்குதல்கள் —யுத்தம் இடம்பெறும் பகுதிகளின் பொருளாதாரக் கட்டமைப்பையே முற்றாகச் சிதைத்துவிடக் கூடியவையாகவும், பெரும் பொருளாதார அழிவுகளை ஏற்படுத்துபவையாகவுமே உள்ளன.**

இதே போன்றே வீதி அபிவிருத்திக்கென ஒதுக்கப்படும் நிதியில் கணிசமான தொகையானது இராணுவத் தேவைக்காக அமைக்கப்படும் வீதிகளுக்குச் செலவீடு செய்யப்படுகின்றன. இதே சமயம் அப்பிராந்தியங்களின் அபிவிருத்தி, புனரமைப்பு என்ற ரீதியில் செலவீடு காட்டப்படுகின்றது.

இவ்வாறாக யுத்தச் செலவீட்டிற்கான நிதியின் ஒருபகுதி மறைமுகமாக இராணுவச் செலவீட்டிற்கு வந்து சேர்கின்றது. இவ்வாறாக பெருந்தொகை யுத்தச் செலவீடானது நாட்டின் பொருளாதாரத்திற்கு பெரும் சுமையாக ஏறிக்கொண்டிருக்கையில்– மறுபுறம் யுத்தத்தினால் ஏற்படும் பொருளாதார அழிவுகள், இழப்புக்கள் என்பன பொருளாதாரத்தைச் சிதைவுறச் செய்துகொண்டிருக்கின்றன.

புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற ரீதியில் இராணுவம் மேற்கொள்ளும் பாரிய தாக்குதல்கள் –யுத்தம் இடம்பெறும் பகுதிகளின் பொருளாதாரக் கட்டமைப்பையே முற்றாகச் சிதைத்துவிடக் கூடியவையாகவும், பெரும் பொருளாதார அழிவுகளை ஏற்படுத்துபவையாகவுமே உள்ளன. அதாவது விளைநிலங்கள், தொழிலகங்கள் அழிக்கப்படும்; அதேவேளை, மக்களின் சொத்துடைமையும் அழிவிற்கு உள்ளாக்கப்படுகின்றது.

இவை ஒருபுறமிருக்க, அரசு மேற்கொண்டுள்ள பொருளாதாரத் தடை நடவடிக்கைகள்,, மீன் பிடித் தடை என்பவற்றால் உற்பத்தி நடவடிக்கைகள் பெருமளவில் பாதிப்பிற்குள்ளாக்கப்படுகின்றன. இது தமிழ் மக்களின் பொருளாதார நடவடிக்கைகளைச் சீரழித்து அவர்களின் வாழ்க்கையைப் பெரிதும் பாதிப்பிற்குள்ளாக்குவதாக உள்ளது.

உதாரணமாகச் சுட்டிக்காட்டுவதானால்– சிறீலங்கா இராணுவம் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கைகளினால் தமிழர் பிரதேசங்களிலுள்ள பெரும்பாலான நகரங்கள் பாரிய அழிவிற்கு உட்பட்டுள்ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட வடக்கிலுள்ள பல நகரங்களையும், கிழக்கிலுள்ள முக்கிய நகரங்களையும் இதற்கு எடுத்துக்காட்டாக சுட்டிக் காட்ட முடியும்.

இதே போன்று வடக்கிலும் கிழக்கிலுமுள்ள பெருந்தொகையான விளை நிலங்கள் இராணுவ நடவடிக்கைகளினால் பெரும் அழிவிற்கு உள்ளாகியுள்ளன. அனேக கிராமங்களைவிட்டு மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளதோடு அவை அழிக்கப்பட்ட/ கைவிடப்பட்ட கிராமங்களாகவும் மாறியுள்ளன.

இதே சமயம், வடக்கு– கிழக்கில் சிறீலங்கா அரசாங்கம் முனைப்புடன் நடத்தும் யுத்தமானது வடக்கு கிழக்கில் மட்டுமல்ல, தென்னிலங்கையில் குறிப்பாக கொழும்பு நகரிலும் – வடக்கு– கிழக்கு எல்லையோரக் கிராமங்களிலும் பெரும் பொருளாதார இழப்புக்களுக்கும் அழிவுகளுக்கும் வழிவகுப்பவையாகவே உள்ளன. அதாவது யுத்தத்தின் எதிர்விளைவானது சிறீலங்காவின் பொருளாதார அழிவிற்கு மட்டுமல்ல அதன் பொருளாதாரக் கொள்கைக்கே



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சவால் விடுவதாகவும் மாறியுள்ளது.

சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் கொழும்பில் பாரிய குண்டுத் தாக்குதல்கள் பல இடம்பெற்றுள்ளன. இதில் மத்திய வங்கி குண்டுத் தாக்குதல், கொலன்னாவ– சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையம்மீது மேற்கொள்ளப்பட்ட அதிரடித்தாக்குதல்கள், உலக வர்த்தக மையத்தின் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல்கள் என்பன பல நூறு கோடி ரூபாய்கள் இழப்பினை ஏற்படுத்தி உள்ளது. இத்தாக்குதல்களின் போது ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து சரியான மதிப்பீடுகள் எவற்றையும் அரசாங்கம் வெளியிடவில்லை. அதனால் ஏற்பட்ட இழப்பானது சிறீலங்காப் பொருளாதாரத்தை பெருமளவில் பாதித்துள்ளது என்பதை பொருளாதார ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டத் தவறவில்லை.

ஒருபுறம் வெளிநாட்டு மூலதனத்தை எதிர்பார்த்த நிலையில் அமுல்படுத்தப்படும் இப் பொருளாதார அமைப்பானது இக் குண்டு வெடிப்புகளினால் பெரும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாகியுள்ளன. அதாவது வெளிநாட்டு மூலதனத்தின் உள்வருகையை இது வெகுவாகப் பாதிப்பதாக உள்ளது. பாதுகாப்பற்ற ஒரு பிரதேசத்தில்– ஒரு நாட்டில்– தமது மூலதனத்தைப் போட்டு தொழில் நடவடிக்கை ஆரம்பிக்க முதலீட்டாளர்கள் தயாராக இல்லாமையே காரணமாகும்.

இதே போன்றே சிறீலங்கா அரசு அந்நியச் செலாவணியைத் திரட்டுவதற்கென முக்கிய துறையாக வளர்த்தெடுக்க முனைந்த உல்லாசப் பயணத்துறையும் பெருமளவு நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளது. அதாவது தொடர்ச்சியான குண்டுவெடிப்புக்கள் உல்லாசப்பயணத்துறையை வெகுவாகப் பாதிப்பவையாகவும் அரசாங்கம் எவ்வாறான முன் முயற்சிகளை மேற்கொண்டபோதும் இத்துறையை வளர்த்தெடுக்க முடியாத நிலையே உருவாகியுள்ளது.

இவை தவிர வடக்கு கிழக்கு கடற்பகுதிகளில் கடற்புலிகளின் பிரசன்னமும்– கொழும்புத் துறைமுகத்தில் கடற்புலிகள் மேற்கொண்ட தாக்குதலும் சிறீலங்காவிற்கான கப்பற் கட்டணத்தையும், காப்புறுதியையும் அதிகப்படுத்தியுள்ளதோடு சர்வதேச கப்பல் போக்குவரத்து அமைப்புக்களினால் ஆபத்தான கடற் பிராந்தியமென சிறீலங்காவின் கடற்பரப்பை பிரகடனம் செய்யவும் வைத்துள்ளது. இது சிறீலங்காவுக்கான கப்பல் போக்குவரத்து கட்டணத்தை மட்டுமல்ல சுதந்திரமான கப்பல் போக்குவரத்திற்கும் பொருளாதார நடவடிக்கைகளிற்கும் இடையூறு விளைவிப்பவையாகவே உள்ளன. குறிப்பாக திறந்த பொருளாதாரத்திற்கு அடித்தளமாகவுள்ள ஏற்றுமதி– இறக்குமதி வர்த்தகத்தை ஒருவகை நெருக்கடியான நிலையிலேயே அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

> மக்கள் வறுமை அதிகரிப்பதன் காரணமாக பெரும் விரக்தி நிலைக்கும் அதன் விளைவாக ஒருபகுதியினர் தற்கொலைக்கும் ஒரு பகுதியினர் தம்மை மறக்கும் நிலைக்கு போதைப்பொருளுக்கும் அடிமையாகின்றனர்.

இந்த வகையில் யுத்தம்– ஒருபுறம் செலவீடு என்ற ரீதியிலும் மறுபுறம் அழிவுகள் என்ற ரீதியிலும் வேறொரு புறம் எதிர்விளைவுகள் என்ற ரீதியிலும் சிறீலங்காப் பொருளாதாரத்தை பெரும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறது. சந்திரிகா அரசாங்கம்– நாட்டின் பொருளாதாரம் திட்டமிட்ட முறையில் முன்னேறிச் சென்றுகொண்டிருக்கிறது என எவ்வாறுதான் அடித்துக் கூறினாலும், புள்ளிவிபரங்களைக் காட்ட முயன்றாலும் யுத்தம் நாட்டை அழிவுப் பாதையில் கொண்டுசெல்கிறது என்பதை நாட்டில் இடம்பெறும் நிகழ்வுகளே நிரூபிப்பவையாக உள்ளன.

ஒரு புறம் நாட்டிலுள்ள வளங்கள் யாவும் தனியார்மயமாக்கல் என்ற ரீதியில் வெளியார் கொம்பனிகளுக்கு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஆரம்பத்தில் நட்டத்தில் இயங்கும் கொம்பனிகளே தனியார்மயப்படுத்தப்படுவதாக அரசு கூறிவந்திருப்பினும் தற்பொழுது இலாபத்தில் இயங்கும் துறைகளையே அரசாங்கம் இரகசியமாக விற்றுவரும் நிலையிலேயே உள்ளது. அத்தனை தூரம் அரசாங்கத்திற்கு நிதி தேவை, அவசியமானதாகவுள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் அரச உடைமைகளை துரித வேகத்தில் தனியார் மயமாக்கி வருவதாக குற்றம் சாட்டி ஆட்சிக்கு வந்த அரசாங்கம், ஐ.தே.க 17 வருட காலத்தில் தனியார்மயமாக்கிய அதே அளவு கொம்பனிகளை மூன்று ஆண்டு காலத்திற்குள் தனியார் மயமாக்கி உள்ளதாக தகவல் ஒன்று உறுதி செய்கின்றது.

மறுவளமாகக் கூறுவதானால் எந்தக் கொம்பனிகளை விற்றால் இவ்வாண்டிற்கான யுத்தச் செலவீட்டை ஈடுகட்ட முடியும் என்ற நிலையிலேயே அரசாங்கம் இன்று உள்ளது. இதனை ஆளும் தரப்பின் ஒரு பகுதியினரே ஒப்புக் கொள்ளும் நிலையில் உள்ளனர். பாராளுமன்ற உறுப்பினர் பட்டிவீரக்கோனின் கூற்றுக்களும் இதையே நிரூபிக்கின்றன.

இவற்றின் எதிர்விளைவே சிறீலங்கா இன்று உலகில் அதி வறிய நாடுகளின் வரிசையில் இடம்பிடித்துக் கொண்டமைக்கும் நாட்டில் தற்கொலை செய்பவோரின் தொகை அதிகரிப்பதற்கும், போதைப் பொருள் பாவனை உயர்வடைந்து செல்வதற்கும் காரணமாகும். அதாவது மக்கள் வறுமை அதிகரிப்பதன் காரணமாக பெரும் விரக்தி நிலைக்கும் அதன் விளைவாக ஒரு பகுதியினர் தற்கொலைக்கும் ஒரு பகுதியினர் தம்மை மறக்கும் நிலைக்கு போதைப் பொருளுக்கும் அடிமையாகின்றனர்.

இந்த வகையில் யுத்தத்தின் மூலம் சிறீலங்கா அரசாங்கம் நாட்டைப் பொருளாதார அழிவை நோக்கி மட்டும் வழிநடத்திச் செல்லவில்லை. மக்களின் சமூக வாழ்வையே பெரும் அழிவை நோக்கி கொண்டு செல்கின்றது.



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# கடற்கரைக் காட்சிஅல்லது போர்க்காட்சி

கடுங்காற்றின் உந்துதலில்
கொந்தளித்துத் திமிறி ஆர்ப்பரிக்கும்
கடல்.
கரைகரையாய்க் கைப்பற்றி
தரைமுழுதும்
இந்தா விழுங்குகின்றேன்
என்கின்ற தோரணையில்,
தாவித்தாவி
கொழுத்த பெருஞ் சிங்கமென
கர்ஜிக்கும் அது.

அணியணியாய்த் திரண்டெழுந்து
சீறிப்பறந்து
பாறைக் கரைகளில் மோதிச் சிதறி
நுரைகக்கி மறையும் அலைப்படைகள்.

ஓயாதிரைச்சலிடும்
கடுங்காற்றின் முடுக்குதலில்,
மீளவும் மீளவும்
அலைகளின் வெறிப்பாய்ச்சல்,
சின்னாபின்னம்,
பின்வாங்கல்.

அவைகளால் மோதுண்டு
சிறிதுசிறிதாய்
அரியுண்டு தேயுறினும்
அணையென நீண்டு
ஆர்ப்பாட்டமின்றித் தனித்து
பெரிய கருங்கடலை
எதிர்கொண்டு நிற்கும் கரை.

**இளந்திரையன்**

# மீட்சி

வீம்பு பெருகப்பெருக
நிலம் விழுங்கி நீண்டது சிங்களம்.
நெஞ்சிலேறி மிதித்து
முகத்தில் மண்வேலியிட்டது.
மண்ணணைக்குள் உயிரொளித்து
சாவைத்துரத்தும் கனவை நெய்தது.

சாவைத் தொலைத்த பிறவிகள்
போரேரிறக்கி மண்ணணை உழுதன.
சாவை விதைத்து
சிலுவை தந்த உயிர்களைக் கொய்தன.

நிலம் செரிக்காது
குடல் பொருமிற்று.
நிலைகொள்ளா அவஸ்தையில்
விழுங்கிய நிலம் துப்பி
சிங்களத்தின் வீம்பு உள்ளொடுங்கியது.
மண் செழிக்க முளைத்த பிள்ளைகள்
தன் தேகமேறித் திரியவும்

கல்லாய்ச் சமைந்த பூமி கனிந்தது.
மூச்செறிந்து அவர்கள் தேகம் வருடியது.
பச்சையம் கொழிக்கும் கைகளால்
பரிவு ததும்ப நிழல் விரித்துத் தாலாட்டியது.

மடியணைத்து-
நெஞ்சிருந்து நீர் சுரந்து வேர் நனைந்தது.
மடிச்சூட்டில் கிறங்கி
முலை கவ்விப் பாலுறுஞ்சும் பரவசமூட்டி
தாயென நெக்குருகியது.

**எஸ் உமாஜிப்ரான்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# சிக்கித் தவிக்கும் சிங்கள அரசு


## போரின் விரிவாக்கத்தால் அரசியல் பொருண்மிய சிக்கலுக்குள் சிக்கித் தவிக்கும் சிங்கள அரசு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் நோக்குடன், சந்திரிகா அம்மையார் இரு வகைத் தந்திரோபாய அணுகுமுறைத் திட்டத்தை வரைந்து நடைமுறைப் படுத்தினார். தீர்வுத் திட்ட அணுகுமுறை போர்த்திட்ட அணுகுமுறை என்ற அந்த இரண்டு முக அணுகுமுறைகளிலும் சந்திரிகா அரசாங்கம் தோல்வியையே சந்தித்து வருகின்றது.

தமிழர் தேசியத்தின் ஆணிவேர்களையே அறுத்தெறியும் நாசகார நோக்கத்தைக் கொண்ட சந்திரிகாவின் தீர்வுத் திட்டத்தையே சிங்களத்து அரசியல் சக்திகள் நிராகரித்த செய்தி மேற்குலக நாடுகளை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. தமிழ் மக்களின் தேசிய இனச்சிக்கலை தீர்த்து வைக்க விரும்பாத இன வெறிப் பரிமாணங் கொண்ட சிங்கள தேசத்தின் அரசியல் உளவியலை அது பகிரங்கப் படுத்தியுள்ளது. சந்திரிகாவின் தீர்வுத் திட்ட தந்திரோபாயம் இறுதியில் செத்தேவிட்டது.

இதேவேளை, அவரின் போர்த்திட்ட அணுகுமுறையும் இமாலய நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளது.

சந்திரிகா ரத்வத்த குழுவினரின் இராணுவக் கணிப்புகளை மற்றும் அரசியல் தீர்க்க தரிசனங்கள் எல்லாவற்றையும் பொய்யாக்கியபடி போர் விரிவாக்கம் கண்டு வருகின்றது.



வன்னியூடாக ஒரு விநியோகப் பாதை சமைத்து விடுதலைப்போரை நசுக்கிவிடலாம் என்ற சிங்கள இராணுவவாதிகளின் கணிப்புக் கனவு கலைந்து வருகின்றது. வன்னிப் போரரங்கில் புலிகள் வெளிப்படுத்தும் மரபுப் போர்த்திறன், விசயம் தெரிந்த சிங்களத்து வல்லுனர்களுக்கு திகைப்பையும் அச்சத்தையும் ஊட்டிவருகின்றது.

இந்தப் போர் விரிவாக்கத்திற்கு ஈடுகொடுத்து யுத்தத்தை தொடர்வதற்கேற்ற பொருண்மிய பலத்தை சிங்கள அரசு இழந்து வருகின்றது என்ற உண்மையை சந்திரிகா அம்மையாரும் ஏற்கத் தொடங்கியுள்ளார்.

வன்னியில் தீவிரம் பெறும் மரபுச் சமரைத் தொடர்ந்தும் நடாத்திச் செல்வதற்கு நவீன போர் விமானங்களும் கருவிகளும் மற்றும் சக்திமிக்க ராங்குகளுமே மேலதிக வெடிப்பொருட்களும் அவசியம் தேவையென படைத்தலைமை அரசைக் கோரியுள்ளது. இந்த அவசரத் தேவையை நிறைவேற்றத் தேவையான பண பலம் தனது அரசாங்கத்திடம் இல்லை என்று அம்மையார் பகிரங்கமாகவே கைவிரித்துவிட்டார். வருடாந்த பாதுகாப்புச் செலவீனமே தலைக்கு மேல் சென்றுவிட்ட நிலையில் இவ்விதமான மேலதிக நிதி ஒதுக்கீட்டை அரசு விரும்பினாலும், செய்யக்கூடிய நிலையை



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

இழந்துவருகின்றது.

தமிழீழப் போரரங்கில் மட்டுமல்ல இப்போது, போர் தீவடங்கிலும் விஸ்தரிக்கப்பட்டுவிட்டது. தென் இலங்கை எங்கும் பரவலாகவும், தொடர்ச்சியாகவும் நடந்துவரும் தாக்குதல்களால் அரச வருமானம் கடுமையான வீழ்ச்சியைச் சந்தித்துள்ளது. அரசதிறைசேரிக்கு பண மூடைகளை வழங்கும் கறவைமாடுகளான உல்லாசப் பயணத்துறையும் வெளிநாட்டு மூலதன வரவுகளும் இத் தொடர்தாக்குதல்களின் விளைவுகளால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

சமாதானச் சங்கை ஊதி அதிகாரத்திற்கு வந்த அம்மையாருக்கு சமாதானத் தேவதை என்ற அழகான அடையாளச் சின்னத்தை பெறுவதை விட, விகாரமா தேவி என்ற வெறியூட்டும் பேரினவாதச் சின்னத்தைப் பெறவே விரும்பினார். ஆனால், இந்த இரண்டு அடையாளங்களும் இல்லாமல்போய் அழிவின்சின்னமாகவே அவர் சித்தரிக்கப்படப்போகின்றார்.

சமாதான சூழலை அல்லது போர் வெற்றியை அல்லது பொருண்மிய வளர்ச்சியை எதிர்பார்த்து நின்ற சிங்கள மக்கள் இவை ஒன்றுமே கைகூடாத நிலையில் சந்திரிகா அரசாங்கம் மீது அதிருப்தியையும் கோபத்தையும் கொட்டுகின்றனர். இந்த அரசியல் சூழலை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி எதிர்க் கட்சிகளும் அரசாங்கத்திற்கு அரசியல் நெருக்கடிகளைக் கொடுத்து வருகின்றன.

மொத்தத்தில் போரின் விரிவாக்கத்தாலும் அதன் விளைவுகளாலும் சந்திரிகா அரசாங்கமானது அரசியல் – இராணுவ– பொருண்மிய நெருக்கடிக்குள் சிக்கித் திண்டாடுகின்றது என்பதே இன்றைய யதார்த்த நிலையாகும்.

***



# ஓ வீரனே !

ஓ வீரனே
நீ வீழ்ந்து போனாய்
என்பதனை விடவும்
நீ வாழ்ந்து போனாய்
என்பதுதான் பெரிது
படித்துப் பட்டம் பெற்றபின்
நாட்டை விட்டுவிட்டு
நாதியற்று அலையும்
மற்றவர்களைப் போலல்லாமல்
வாய்ப்பையும் வசதியையும்
உதறித் தள்ளிய பின்
நீ இங்கே வாழவந்தாய்
அனுதினமும் செத்துப் பிழைத்து
அவல வாழ்வு வாழ
உனக்குச் சம்மதமில்லை
உன் ஒவ்வொரு
மூச்சுக் காற்றையும்
சுதந்திரமாகச் சுவாசித்தாய்
ஆழமான தேசப்பற்றுடன்
உன் ஒவ்வொரு அசைவையும்
அன்னை மண்ணுக்காக்கினாய்
துப்பாக்கியும் கையுமாய்
துள்ளித் திரிந்து
நீ பகைவிரட்டிய காலம்
இப்போதும் கண்களில்
இன்று நீ கனவாகிப்போனாலும்
உன் கனவு மட்டும்
இன்னும் இங்கே வாழ்கிறது
அது இனிமேலும் வாழும்
ஆம் !
உன் கனவு நனவாகும் வரை
ஒவ்வொரு புலி வீரரின்
நெஞ்சிலும் உயிர்வாழும்.

சூரிய நிலா



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சிறுகதை

# விரும்பாதது

பரந்தனூரான்

விரும்பாத ஒன்றைத் தீர்மானிக்கும் நிர்ப்பந்தத்திற்குள் நின்றார். வேறு வழியே இல்லை. கசப்பான திண்மத்தை தின்றாகியே வேண்டும். ஊசி முனையில் ஏற்றிவிடப்பட்ட புழுவானார். ஊசி வெம்மையில் கனல்வதாய் மனம் பெரும் சித்திரவதைப் பட்டது. மனதிலிருந்து சொரியும் குருதியாக முடிவை வீட்டில் சிந்தினார். மனைவிக்கு சற்று நிம்மதியான பெருமூச்சு (முழு நிறைவற்றது) வந்தது.

'கடவுளே! இப்ப எண்டாலும் இந்த மனுஷனுக்கு கண் திறந்துதே!'

இம் முடிவால் வீட்டில் பெரு மாற்றம் நிகழ்ந்து எல்லோர் முகங்களிலும் மகிழ்வு ஒளிரும் என அவர் எதிர்பார்த்தார்; இது முழுமையாக நடக்கவில்லை என்றே தோன்றியது. பெரிதும் பூரித்துப் போக வேண்டிய மகளின் முகத்தில் கூட அப்படி பெரிதாய் மாற்றம் நிகழவில்லை. சிறு மகிழ்வே அவள் முகத்தில் இழையோடியது. அதை மேவி பீதி நிறைந்து வழிந்தது. அவரின் முடிவு செயற்பாடாகி காரியம் நிறைவேறுவதற்குள் தன் ஜீவிதத்திற்கே முடிவை 'அவர்கள்' தந்துவிடுவார்களோ என மனத் தரையில் பயவிருட்சம் கிளை விரித்தது.

ஒரு வகையில் அவர்களது மீளலே தனக்கிசைவான இம் முடிவை எடுக்க காரணம் என எண்ணினாள். ஆனால், இது சுபமாக நிறைவேறிவிட வேண்டுமே எனத் தவிப்பு மேலோங்கியது.

அவருக்கு தான் இப்படி தீர்மானம் எடுக்க வேண்டிவரும் என அன்று வானத்தை தலையால் தொட்டுக் குதித்து மறுப்புரைத்த போது கனவும் வரவில்லை. இப்போது வேறு வழியின்றி அம்முடிவையே எடுக்க வேண்டியதானதை நினைத்து மனம் வெதும்பினார். இதனால் யார் மீதோ இனம் தெரியாத கோபம் பிறந்து பிரவாகித்தது. யார் மேலே இதனைப் பிரயோகிப்பது எனப் புரியாமல் தடுமாறினார்.

மகள் மீதுதான் இனம் புரியாத சினம் கூர்மைப்பட்டது. அவளால் தானே இந்த வில்லங்கம். வீட்டிற்குள்ளேயே அமைதிப்பட்டு கிடந்திருந்ததால் இப்படியொரு விபரீதம் நேர்ந்திருக்குமா? என எண்ணினார். அவள் மீறி உடைத்தெறிந்து விட்டதாகக் கருதும் அடக்க ஒடுக்கம் என்ன என்பது அவருக்கே பொருள் புரியாமல் எழும்பியது.

இப்போது எதை வாழ்வியலுக்கு வரம்பாக இடுவது? எல்லாமே சாதாரணம் என்றாகியிருப்பது போல் தோன்றியது. ஆனால், அந்த விஷயத்தைத்தான் அன்று அவரால் சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியாமல் போயிற்று. அவரது தெருவில் உள்ளோரது வாய்களில் அரைபட்டு முற்றும் இடியாத மாவாக காதில் அந்தக் கதை விழுந்தது. வீட்டிற்கே சிதை மூட்டி விடுகிறேன் என்பதாய் எகிறிக் குதித்தார்.

ஏற்கனவே அவருக்கு அது பற்றியோர் சந்தேகம் இருந்தது. அவன் சில காலங்களாக அவரது வீட்டின் தெருவையே அதிகம் உபயோகித்தான். மணிக்கொரு தரமாக இந்தத் தெருவின் கிடங்குகளில் விழுந்தெழும்பி அவனது சைக்கிள் பயணித்தது. 'வீதியில் எத்தனை பேர் போகிறார்கள்' என்று இருந்துவிட அவரால் முடியவில்லை. அவன் அவரது வீட்டைக் கடக்கும் வரை சைக்கிளின் வேகத்தை மிக மந்தப் படுத்துவான். தன் தலையைத் திருப்பி வேலிக்கு மேலால் பார்வையை வீசியபடியே 'பெடலை' மிதிப்பான். இந்த வித்தியாசங்கள் தான் அவருக்கு சந்தேகத்தை ஊட்டியது. சந்தேகத்திற்கு தீர்வு காணும் முகமாக வீட்டிலிருக்கும் மகளை அவதானித்தார். எதுவித சலனமும் புலப்படவில்லை. எந்நேரமும் சமயலறைக்குள் புகை மண்டிய அடுப்போடு போராடினாள். ஏனைய வேளைகளில் முற்றம் பெருக்கினாள். அல்லது புத்தகங்களோடு பார்வையைப் பொருத்தி இருந்தாள்.

புத்தகங்களே அவரது சந்தேகப் பொருள்!

அவள் வெளியே புறப்பட்ட பின் புத்தகங்களைத் தட்டினார். எதுவும் சந்தேகத்துக்கு வலு சேர்க்கவில்லை. அவள் வீட்டிற்கு வெளியே என்ற நினைவு எழ தெருவில் எங்கேனும்.... எனச் சடுதியாக எண்ணத் தலைப் பட்டார். ஆனால் அதைப் பரீட்சித்துப் பார்க்கும் அளவிற்கு சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை.

இப்போது ஒருவர் கொண்டு வந்து அவர் காதில் கொட்டிவிட்ட செய்தியால் கொதித்தெழுந்தார். அவர் வீட்டிற்குள் நுழைந்த வேகத்தில் படலை இருதடவை தாங்கு தூணோடு அடித்துக் கொண்டது. வீட்டின் கதவு, ஓடுகள் யாவும் அதிர்ந்தன. இடிந்து சொரிந்துவிடுவன போல, மகளுக்கு பிரமை தட்டியது. கூவி வந்து வீட்டின் முகட்டில் வெடித்து வேகம் கொள்ளும் எறிகணைகள் நினைவில் வந்தன.

அவர் வீரபத்திரரானார். சன்ன



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


தம் நிகழ்ந்தது. முழு உக்கிரமும் மனைவி மேல்தான் விழுந்தது. மனைவி எதுவும் புரியாதவளாக மலைத்துப் போய் நின்றாள். அவள் முகத்தில் வியப்புக் கோடுகள் பரவி அழிந்தன. மீண்டும் பரவின. அவருக்குத் தன் உக்கிரப்பிளம்பை முழுமையாய் மகளின் மேல் வீசத் துணிவில்லை. அவள் ஒரு 'ஒற்றை றோட்டு' என்பது அனுபவ தேர்வு. எடுத்த வேகத்தில் முடிவு கட்டி விட்டாள் என்றால் சில வேளை அவர் வாழ்வின் பிடிமானமே அழிந்து போகலாம்.

உக்கிரத்தின் சிறு கதிர் வீசல் மட்டும் அவள் முகத்தில் தெறித்தது; "சொல்லிப்போட்டன் உதை கனவிலும் நினையாத, அவனின்ர கதையையே மறந்திடு"

அவள் வாயில் இருந்து மொழி எழவில்லை. பதிலாக முகத்தை மூடிக் கொண்டு குப்புறக் கிடந்து விசும்பினாள். தாய் அவள் மீது சில கையாயுதத் தாக்குதல்களை நடத்தினாள். "ரியூசனுக்கும் பள்ளிக்கூடத்துக்கும் போய் இதே படிச்சனி? உன்னைக் கண்டபடி வெளியிலவிட்டது தான் பிழை!"

ஆனால் இருவருமே அவளை முற்றாக வீட்டிற்குள் இட்டு வரப்படும் முடிவுக்கு வரவில்லை. வழமை போலவே கல்வி சார் இடங்களுக்குப் போனாள். அவள் சில கொண்டாட்டங்களிற்குப் போகும் போதுதான் இடையிடையே தடைக் கற்கள் விழுந்தன. அல்லது மேலே படிய விடப்பட்டன. காலம் கரைந்து ஓடியது. அந்தக் கரைதல்களினூடே நீரடிபட்ட கல்லென அவள் விவகாரம் ஒளிர்ந்தது. அது மண்ணாக அரிக்கப்பட்டதெனவே எண்ணினார் அவர். மூன்றாண்டுகளுக்கு முன் அவன் கனடாவுக்கு என அவரது கண்களுக்குள் இருந்து காணாமல் போனான். சனியன் தொலைந்ததென பெருமூச்சு விட்டிருந்தார்.

ஆறுமாதங்களில் அவனின் தாய் வீட்டிற்கு வந்தாள். "அண்ண பெடியன் உங்கட பெட்டைய விரும்பியிட்டான், இனி என்ன..... செய்து வச்சுவிடுவம் அவனே கனடாக்கு கூப்பிடுறன்" என்ற தொனிப் பொருளில் பேச்சைத் தொடங்கியவள் அவர் வீரபத்திரராய் சன்னதம் கொள்ளக் கண்டாள். இறுதியில் அவளும் கோபவார்த்தைகளை பொழிந்து விட்டு ஒரு சலிப்போடு படலையைக் கடந்தாள். "என்ர பிள்ளைக்கு கலியாணம் செய்து வைக்க எனக்குத் தெரியும்" என அடிக்கடி கறுவிக் கொண்டார் அவர்.



"இவள் ஏதாவது குறுக்கு வழியில போனாலும் போயிடுவாள் போல கிடக்குது கெதியா ஒரு வழியப் பாருங்கோ!" என மனைவி இரகசியமாகக் கூறினாள்.

"அவளுக்கு வயது கிடக்குது இன்னும் ரெண்டு வருஷத்துக்கு ஏதாவது படிக்கட்டும் ஆறுதலாக யோசிப்பம்" அவள் அவனை மெல்ல மெல்ல மறந்தே போனாள்! இது அவரது நினைப்பாக இருந்தது.

நீண்டகால வெளியில், மாற்றங்கள் நிகழ்ந்தேறின. புதிய செடிகள் முளை கொண்டன. ஏழு மாத காலத்துள் அவர்களது வாழிடத்தை ஆளுவோர் வேறாயினர். திரும்பிய திசையெல்லாம் வேற்றுச் சப்தம். சந்திகளில் வாளேந்திய விலங்கின் கொடிகள் பறந்தன. என்றுமே காணாத நீலவர்ண அசையும் காட்சிகள் அதனருகே ஒளிர்ந்தன. வீதிகளில், கால் வைக்கும் இடமெல்லாம் சன்னவரம் அருளும் கோபுரங்கள். அவருக்கும் மனைவிக்கும் முகத்தில் பேயறைந்தது போலாயிற்று. தமது அசைவியக்கம் கட்டுப்பட்டுப் போகுமென மனதார எண்ணினர்.

எல்லோருமே புதிய விலங்குகளோடு சிறைப்பட்டார்கள். வந்த சீருடை நஞ்சுகள் உடனடியாக எந்தப் பால் மீதும் பொசியவில்லை. எல்லாமே தமக்குச் சமம் என்பதாய் நுரைத்துச் சலசலத்தன. கைகளை குலுக்கிக் கொண்டன. அந்தக் குலுக்கல்கள் பின்னர் எறிதல்களாக பெண்கள் மீது விழத்தொடங்கிய போது பலரும் நடுங்கிப் போனார்கள்.

அவருக்கு அத்தோடு தூக்கம் கெட்டது, அவளை எப்படிக் காப்பாற்றிக் கொள்வது என்ற யோசனை மனதை அரித்துக் தின்னத் தொடங்கியது. அவர் வீட்டுப் படலையின் முன் நிர்மாணிக்கப்பட்ட கோபுரத்தின் சிற்பம் 'ஐயா' என அட்சர சுத்தியாக அவரை அழைத்து அளவாளாவியதில் சிறிது திடப்பட்டார். மனைவி மகளோடு அண்ணன் தம்பி என்று உறவு கொண்டான். 'அஞ்சற்க' என்று அவன் அபயம் தருவது போல கையசைத்து சிரித்துப் பேசி விட்டுப் போனான். ஆனால் இரண்டு வீடு தள்ளியிருந்த கோபுரத்தின் ரட்சகர் சிற்பம் தொடங்கியிருந்த திருவிளையாடல்தான் அவரின் கழுத்தைப் பிடித்துத் திருகத் தொடங்கியது.

அவள் வகுப்பிற்குப் போய்த் திரும்பிக் கொண்டிருந்தாள். சன்னவரம் அருளும் கோபுரத்திலிருந்து வீதிக்கு நடுவே ராஜநடை பயின்றான் ரட்சகன். நடுமத்தியான வெய்யில் தலையில் இருந்த தொப்பியை ஊடறுத்து உச்சியில் குத்தியது. வியர்வை பிசுபிசுத்தது. வீட்டு நிழலில் இளைப்பாறும் ரேகத்தில் வந்தாள். நடு வீதியில் நின்றவனைக் கண்டதும் திகில் பரவியது. என்றும் இல்லாத மாதிரி ஏன் இப்படி? சைக்கிளை அவனை விலத்தி



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

செலுத்தினாள். சட்டென்று 'கான்ரி லில்' கரம் பதித்து நிறுத்தினான்.

சிவந்த விழிகளோடு உதடுகள் துடிக்க அரைமணி நேரத்தின்பின் வீடு வந்தாள் அவள். அவள் கூறிய செய்தியால் உயிர் நாடியில் விஷம் பரவி ஊர்வதான உணர்வு அவருக்கு. உடனடியாக அவளை இந்த ஊரைவிட்டே அனுப்பி விட வேண்டும் என துடித்தார். எங்கே அனுப்புவது? கொழும்புக்கு அனுப்பி விடலாமா என யோசித்தார். யோசிக்கும் போதே ரட்சகன் அவளைத் தேடி வீட்டிற்கு வந்தான். அவரிடம் தனக்கு அவள் வேண்டும் என்றான். அவருக்கு பூமிபடு வேகமாக நடுங்கியது. என்ன கூறுவது என்று தெரியாமல் தடுமாறினார் நொடிப்பொழுதில் அவர் மனதிலிருந்து சில வார்த்தைகள் சுயாதீனமாக எழுச்சி கொண்டன.

தப்பிக் கொள்வதற்காகவே அந்த வார்த்தைகள்; எழுச்சிகள். அவனோ விடுவதாயில்லை. தமிழும் சிங்களமும் சகோதர மொழிகள் என்று சொல்லி நீண்ட நேரம் வாதாடி விட்டுப் போனான். அவனது திரும்பிய நடையில் மீண்டும் வருவேன் என்பதான திமிர் தொனித்தது. உடனடியாக முடிவு கட்டியாக வேண்டிய நிர்ப்பந்தம். எங்கே அவளை அடைக்கலப்படுத்துவது என்பதை யோசிக்கவே மண்டைக்குள் பல குண்டூசிகள் ஏறின. இரண்டு நாள்களாக, குழம்பினார். அவள் பீதி நிறைந்தவளாக வீட்டுக்குள் அடைபட்டுக் கிடந்தாள். மனைவி நொடிக்கொரு தரம் ரட்சகர்களைத் திட்டினாள். அவருக்கும் அது நேர்ந்தது. இறுதியாக இந்த முடிவைக் கைக் கொண்டார்.

"நான் அவனின்ர தாயிட்ட கதைச்சிட்டு வாறன்" இப்போது போய்க் கேட்க அவனின் தாய் என்ன முகத்திலறைந்தாற் போல் பேசுவாளோ என்பது அடிமனதில் பிசைந்தது. எனினும் அப்படி எதுவும் நடந்துவிடவில்லை. நிர்ப்பந்தத்திற்குள் திணறி அவர் எடுத்த முடிவு மூச்சுத் திணறி சாகடிக்கவில்லை. ஆகா என்று புன்னகையினோடு வரவேற்கப்பட்டது. அதற்காக காரியங்கள் புயல் வேகம் பெற்றன. கப்பலில் பதிந்து கொழும்பு செல்வதற்கான ஏற்பாடுகள் முடிந்தன சிலநாளில்.

பயணத்திற்கு ஒருநாள் மட்டும் இருந்தது. மாலை நேரம் அயலார் யாவரினதும் காதுகளில் விஷயம் போடப்பட்டு விடைபெறத் திட்டம். அவள் வீட்டின் மையத்திலிருந்து ஒவ்வொரு திசைகளிற்கும் புறப்பட்டாள். அவளின் தாயும் தந்தையும் கோயில்களின் சிலைகள் மீது தொலைவில் நின்று விழிகளாலும் சொற்களாலும் பிரார்த்தனை புரிந்தனர்.

இருள் மெல்ல கவியத் தொடங்கியது.

அவர்கள் வீடு திரும்பியபோது அவள் இன்னும் வந்திருக்கவில்லை. ஊர் அடங்கி புதிய விதிகளுக்குள் சிறைப்படும் நேரம் நெருங்கி வந்தது. அவரதும் மனைவியினதும் இதயத் துடிப்புகள் இரட்டித்தன. நாய் ஒன்றின் ஒலி சன்னமாய்த் தெறித்தது. அவள் வீடு திரும்பவில்லை. சட்டென அவருக்கு புதிதாய் நிர்மாணிக்கப்பட்ட கோபுரங்களில் உள்ள ரட்சக சிற்பங்கள் நினைவில் எழுந்தன. அவள் வீடு திரும்பவில்லை? அவரின் மனைவியிடம் இருந்து விசும்பல் எழுந்தது. அந்த விசும்பல் இன்றுவரை காற்றை ஈரப்படுத்திக் கொண்டே.....

முற்றும்.

# மகனைக் காணாது பரிதவிக்கும் தாய்

ஒரு வருடத்திற்கு முன் சிங்கள அராஜகப்படையினரால் பாடசாலைக்குச் சென்று திரும்பி வரும் வழியில் அப்பாவி இளம் மாணவன் கைதுசெய்யப்பட்டான். எதற்காக? என்ன காரணத்திற்காக அவன் கைதுசெய்யப்பட்டான் என்ற விபரம் இதுவரை அவனது பெற்றோருக்குத் தெரியவரவில்லை. இதுவரை அவன் விடுவிக்கப்படவும் இல்லை. எங்கு இருக்கிறான் என்ன ஆனான் என்பதும் தெரியவில்லை. மகனைப் பறிகொடுத்த தாய் தந்தையர் மகனைத்தேடி அலையாத இடமே இல்லை. அவன் உயிருடன்தான் இருக்கிறானா இல்லையா என்பதுகூட எவருக்கும் தெரியாது. ஆனால் அவனின் தாய் தந்தையரோ அவன் திரும்பி வருவான் என தினமும் எதிர்பார்த்து ஏமாந்து கொண்டிருக்கின்றனர். இராணுவ அதிகாரிகள் மனித உரிமை அமைப்புகள் போன்றவர்களிடம் புகார் தெரிவித்தும் சாதகமான பதில் கிடைக்கவில்லை. இராணுவ அதிகாரிகளோ அப்படியெவரையும் தாம் கைது செய்யவில்லையென கூறுகின்றனர். இந்தப் பெற்றோரின் வேதனையை எப்படிச் சொல்வது. இப்படி எத்தனை தாய் தந்தையர் தங்கள் பிள்ளைகளைப் பறிகொடுத்து நிற்கிறார்கள். இந்த இனவெறி பிடித்த சிங்கள இராணுவத்தின் கைகளில் அகப்பட்ட எமது இளம் சந்ததி மீண்டு வருவதென்பது நடக்கமுடியாததொன்று.

இன்று காணாமல் போனோரைப் பற்றி விசாரிப்பதற்கென அமைப்புகள் உருவாக்கப்பட்டாலும் போனவர்கள் திரும்பி வரப்போவதில்லை.

ஜனாதிபதியிடம் நேரில் சென்று மனு கொடுத்தும் எந்தவித பதிலும் கிடைப்பதில்லை. இது போன்ற தாய்மார்களுக்கு யார்தான் ஆறுதல் கூறுவது?



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

# காலத்தினூடு நிகழும் பயணம்

> "எழுத்தும் வாசிப்புமே தொடர்ந்து மனித வரலாற்றின் சாரமும் ஆக்கமும் கொண்ட தொடர்பு முறையாக இருக்கும்"
>
> மனுஷ்யபுத்திரன்

ஒரு மனிதன் நடப்புலகுடன் இடையறாத உறவை வைத்துக் கொள்ளவும், இயங்கவும் வாசிப்பு– அறிதல்– உதவுகிறது. ஒவ்வொரு நாளும் புதிதாய்ப் பிறக்கும்போது புதிய புதிய நிகழ்ச்சிகள் நடக்கின்றன; மாற்றங்கள் உருவாகுகின்றன. காலம் கட்டவிழ்ந்து செல்கையில் அதன் நீட்சியில் ஆயிரம் கோடி புதுமைகள் நிகழ்ந்தபடியே இருக்கின்றன. இவையெல்லாம் பதிவுகளாகவும் செய்திகளாகவும் எப்படியோ ஒவ்வொரு காலத்திற்கும் கடத்தி வருகிறது. மனிதனின் பரிணாமத்தோடு தொடர்புடையதாக இச் செயல் தொடர்ந்து, மனிதனை வளப்படுத்தி வருகிறது. பதிவுகளையும் செய்திகளையும், தொடர்ந்து அவிழும் காலத்திற்கு எடுத்துச் செல்லும் இந்தக்கடத்தல் பல நிலைகளிலும் பல வடிவங்களிலும் நடக்கிறது. ஆரம்பத்தில் இலக்கியம், கலை என்பவற்றூடாக நிகழ்ந்த இந்த ஓட்டம் பின்பு சாதனங்களைக் கண்டுபிடித்ததன் பயனாக வேறு வடிவங்களூடாகவும் பயணிக்கத் தொடங்கியது. மேலும் கூறுவதென்றால் ஊடகங்களின் தொழிற்பாடே காலத்தின் இரகசியங்களையும் செய்திகளையும் காலத்தினூடாகக் கடத்துவதுதான். இந்த ஊடகத் தொழிற்பாடுகளில் ஒன்றிலேயே வாசிப்பு என்பதும் நிகழ்கிறது.

ஒருவர் தன் இளம் பராயத்திலிருந்து தான் அநேகமாகத் தன்னுடைய வாசிப்பைத் தொடங்குகிறார். இளமைக் கல்வியில் இந்த ஆரம்பம் நிகழ்கிறது. மொழியை அடிப்படையாகக் கொண்டது வாசிப்பு. மனிதனின் முதலாவது செயற்பாடு அவன் மொழியுடன் உறவாகுவதுதான். ஒரு குழந்தை முதன்முதலில் பேசத் தொடங்கும் போது இது நடக்கிறது. மொழி தொடர்புக்கும் சிந்தனைக்கும்அடிப்படையானது. மனிதனின் பேச்சும் மொழியிலேயே ஆதாரமாய் இருக்கின்றது. அவன் தனது தேவைகளைத் தெரிவிக்கவும் எண்ணங்



களை வெளிப்படுத்தவும் மொழியையே பயன்படுத்துகின்றான். எனவேதான் குழந்தைப் பருவத்தின் முதற் தொழிற்பாடாக மொழியுடன உறவாகுவது மனிதனின் இயல்பாகிறது. இந்த உறவு அவனுடைய இறுதிக் கணம் வரையிலும் நீடிக்கின்றது. இது ஒரு அவசியமான செயலும்கூட.

மொழி இரு வகையில் இயங்கும் திறனுடையது. ஒலிமூலம் செவிப்புலனூடாகவும் பதிவு மூலம் கற்புலனூடாகவுமான இந்த இருவகையும் அமைகிறது. மொழியில் நிகழும் உரையாடலின் மாற்றம் அடைந்த வடிவமே எழுத்து– பதிவு– மூலமான வாசிப்புக்கான வடிவம். அடிப்படையில் இதுவும் ஒருவகை உரையாடல்தான். அறியப்படுத்தல் ஊடாக அறிதல் ஒரு கொடுத்தல் வாங்கல் தொழிற்பாடாகவே இது இருக்கிறது. வாசிப்பு, ஒருவர் சொல்வதைக் கேட்பது போல பிரதியிட்டதை– வழங்குவதை – நுகர்வது. இந்த நுகர்ச்சி அறிதல் ஆகிறது. அறிதல்– வாசிப்பினூடாக கிரகித்தல்; உள்வாங்குதல் என்பவற்றுடன் மேலும் சிந்தனையைத் தூண்டி மேலும் மேலும் உண்மைகளைத் தரிசித்தலாகின்றது. பதியப்பட்ட மொழி மூலம் பதியப்படாத செய்திகளை அறிவதாகின்றது; அல்லது உணர்வதாகின்றது.

மொழி மனிதனுடைய வாழ்வில் உரையாடலிலேயே பெரிதும் இயங்குகிறது. அடுத்ததாக பதிவில் இயக்கமுறுகின்றது. உரையாடலின் மூலமான அறிதலுக்கடுத்ததாக பதிவினூடாக – பிரதியிடல் மூலமாகவே அறிதலைச் சாத்தியமாக்க முடியும். பிரதியிடல் என்பது அறியப்படுத்தலாகும். ஆகவே முன்வைக்கப்படும் பிரதியை நுகர்வதற்கு வாசிப்பு அவசியமாகின்றது.

வாசிப்பின் பிரதான நோக்கமும் பயனும் அறிதல்தான். ஒருவர் தன்னைத்தானே அறிவதற்கும் தன்

**கருணாகரன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

னைச் சூழவுள்ள உலகத்தைப் புரிந்து கொள்வதற்கும் உலகின் இயக்கப் போக்குகளை தெரிந்து கொள்வதற்கும் வாசிப்பு உதவுகிறது. வாசிப்பு மனதைப் பண்படுத்துகிறது. மனப் பண்போடு நல்லதோர் சமூகத்தை உருவாக்கவும் பேணவும் அதிக பங்களிக்கிறது. ஆனால் இந்த வாசிப்பு ஒழுங்குபடுத்தப்பட்ட தேர்ந்த முறையில் அமைந்திருக்க வேண்டும்.

இன்றைய இயந்திரமயப்பட்ட வாழ்வில் நெருக்கடிகள் அதிகம். அதே வேளை உலகம் சுருங்கி தகவல் பரிமாற்றத்தில் – கருத்தாடலில்– ஊடகங்களின் புதிய வரவும் அறிமுகமும் பயன்பாடும் பெருக்கெடுத்துள்ள நிலையில் எல்லாவற்றையும் அறிந்து கொள்ள எவருக்கும் சாத்தியமில்லை. எனவே வாசிப்பில் ஈடுபடுவதற்கு தேர்வு முக்கியமாகிறது. இங்கே பொது வாசிப்பு– துறைசார் வாசிப்பு என ஒரு பகுப்பு அவசியமாகின்றது. பொது வாசிப்பில் ஈடுபடுவோர் செய்திகள், செய்திக் கட்டுரைகள், ஆய்வுகள், விமர்சனங்கள், புனைகதை, அறிவியல் என்ற வகையில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்பவற்றையே அதிகமாக நாடுகிறார்கள். இதன் அடுத்த கட்டமாக ஜனரஞ்சகம் என்று வணிக எழுத்துக்களில் உறவு கொள்வதையும் அவதானிக்கலாம். இது மேலோட்டமான வாசிப்பு எனப் படும். அறிதல் என்பதைவிட பொழுது போக்கு என்ற நோக்கே இதில் அதிகம் உண்டு. மேலும் நேரத்தை விழுங்கி நம்மை அறியாமலே நம்மைத் திசைதிருப்பியும் விடுகிறது. வாழ்வின் உள்ளடக்குகளையோ புறமுகத்தையோ சரியாகக் காட்டமாட்டாது மாய உலகில் சஞ்சரிக்க வழிவகுக்கிறது. துறைசார் வாசிப்பு இதிலிருந்து முற்றிலும் வேறுபடுகின்றது. இது அவ்வத் துறைகளினூடு விரிவாகவும் ஆழமாகவும் பயணிப்பதாகும். வாழ்வைப் பற்றிய தேடல் காலத்தையும் வரலாற்றையும் ஊடுருவிப் பார்க்கும் திறன், சிந்தனை விரிப்பு என்று இது ஒரு தீவிர நிலையில் இயங்குகிறது. இந்த வாசிப்பே பயனும் நோக்கமும் என்ற இலக்கைப் பூரணப் படுத்துவது. இதையே மகாத்மா காந்தியின் மொழியில் "வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்" என்று சொல்லப்படுகிறது.

வாசிப்பில் ஈடுபடுதல், கற்றற் செயற்பாட்டுக் காலத்திலிருந்து ஆரம்பித்து வாழ்வுமுழுவதும் தொடர்கிறது. கற்றற் காலத்தில் அடிப்படை அறிவுக்கும் பின் அவற்றின் விருத்திக்குமாகவே வாசிப்பு தேவையாகிறது. சிந்தனை வளர்ச்சியை அறியவும் அதனுடன் தொடர்ந்து இயங்கவும் இது பிரதானமாக நிகழ வேண்டும். ஒரு கால கட்டத்தில் பிறந்து வாழும் மனிதர் இன்னொரு கால கட்டத்தினூடாக நகர்ந்து வேறொரு கால கட்டத்தினுள் நுழைகிறார். இப்படிக் காலத்தினூடு இவர் பயணிக்கும் போது "தலை



முறைகள் காலகட்டம்" என்பது உருவாகி விடுகிறது. இத் தலைமுறைகளின் காலகட்டம் மனிதப் பரிணாமத்திலும் உலக நடப்பு விதிகளிலும் மாற்றங்களைக் கொண்டிருக்கும். முதல் தலைமுறையைச் சேர்ந்த இவர் தனக்கு அடுத்த தலைமுறையுடனோ, அதற்கடுத்த தலைமுறையினருடனோ உறவு கொள்ள முடியாத நிலை ஏற்பட்டுவிடுகிறது. அவ்வாறு ஒரு உறவு இருந்தாலும் அது சமநிலை உடைய உறவாக இருப்பதில்லை. இவர் பிறந்த காலத்துப் பழக்க வழக்கங்கள், கருத்துக்கள், வாழ்க்கை முறைகள், சாதனங்கள், தொழில் முறைகள் என எல்லாம் வேறானவை. இவருக்கு அடுத்த தலைமுறைகளினுடையவை வேறானவை. இவரோ தன் காலத்தைய மதிப்பீடுகளுடன் தேங்கும் போது அடுத்த தலைமுறையினருக்கும் இவருக்குமிடையில் முரண்பாடுகள் இயல்பாக மேற் கிளம்புகின்றன. இந்த முரண்பாடுகளைத் தீர்த்து தன் காலத்திலிருந்து அடுத்த காலத்துக்குப் பயணிக்க வாசிப்பு– அறிதல் உதவுகிறது. இங்கே தலைமுறை இடைவெளியை நிராகரித்து ஒரு நிரந்தர இணைப்பை வாசிப்பு வழங்குகிறது. நேற்றைய மனிதன் இன்றைய மனிதனாகவும் நாளைய மனிதனாக இருப்பதுவும் இந்த அறிதலினூடாகவே. மனிதன் தன் வாழ்வில் சந்திக்கும் காலவேறுபாடு, பொருள் வேறுபாடு, இடவேறுபாடு எல்லாவற்றையும் தன் வசப்படுத்த அறிதல் ஒத்துழைக்கிறது.

எழுத்தறிவுள்ள எந்தச் சமூகமும் வாசிப்பிலீடுபட முடியும். வாசிப்பினூடாக தனது அறிவின் எல்லைகளை விஸ்தரித்து தன்னை வளப்படுத்தவும் முடியும். ஆனால் சில சமூகங்கள் தொழிலுக்கான கற்றல்– அறிதலுடன் மட்டும் தேங்கி விடுகின்றன. இது வெறுமனே பொருளீட்டும் சுருங்கிய நோக்கினைக் கொண்டது. இந்த நோக்கமும் போக்கும் வளர்ச்சியுற்று அந்தச் சமூகங்களையே கால ஓட்டத்திலிருந்து அந்நியப்படுத்தி பின்னுக்குத் தள்ளி விடும். வளர்ச்சியுற்ற பல சமூகங்களிலும் இதை அவதானிக்கலாம்.

சரி, வாசிப்புப் பழக்கத்தை, வாசிப்பு முயற்சியை எப்படி ஏற்படுத்துவது என்று ஒருவர் யோசிக்கக் கூடும். இங்கே வாசிப்பை விருப்பத் தேர்வு– அவசியத்தேர்வு என்றவகையில் ஏதாவதொன்றுடன் ஆரம்பிக்கலாம். தொடக்கத்தில் விருப்பத் தேர்வாக– ஒருவர் தனக்கு இயல்பாக ஏற்படும் விருப்ப விடயங்கள் அறிவதற்காக வாசிப்பு. இது விரிவு பெற்று மெல்ல மெல்ல பொது வாசிப்பாகப் பரிமாணமடைந்து ஆழமான வாசிப்புக்கு அழைத்துச் செல்லும். ஆனால், வாசிப்பு என்பது கற்றல்– படித்தல்– உணர்தல் என்ற உள்ளுயிர்ப்புத் தன்மைகளிலிருந்து என்றும் விலகியிருத்தல் கூடாது. விலகிச் செல்லும் போது அந்த வாசிப்பு வீணான செயலாகவும் வாழ்வைப் புறக்கணித்து சமூகத்திலிருந்து மனிதனைப் பிரித்துவிடுவதாக மாற்றிவிடும் அபாயமும் உண்டு.

அவசியத் தேர்வு என்பது ஒருவர்



www.tamileelamarchive.com

தான் தொழிற்படும் துறையின்– இலக்கியம், அரசியல், வரலாறு, சமூகவியல், தத்துவம், அறிவியல், ஆன்மீகம் என்று இது விரிந்து செல்லும் விருத்திக்காகவும் சுயமதிப் பீட்டுக்காகவும் வாசிப்பது. இது ஆரம்பத்தில் துறை சார்ந்து அதன் தேவை கருதி இருந்தாலும் பின்னர் பரந்து ஆழமாகி ஒரு வாசிப்புப் பண்பாட்டையே உருவாக்கிவிடும் அளவுக்கு வளரும். இதுவே ஆரோக் கியமான வாசிப்பின் தொடக்கமாகும்.

ஒருவர் சரியான ஒழுங்கில் தனது வாசிப்பை தொடருவாரானால் அவர் உலகத்தின் முகத்தையும் அதன் செலவழியையும் அறிந்து கொள்ளமுடியும். ஒரு சிறு கிராமத்தி லிருக்கும் மனிதர் உலகம் முழுவ தையும் இன்று அறிந்து வைத்தி ருக்கிறார்; அறிந்துகொண்டிருக்கி றார் என்றால் எப்படி இது நிகழ் கிறது? ஒவ்வொருவரும் உலகம் முழு வதற்கும் பயணிப்பதோ அல்லது ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு சமூகத்துடனும் இணைந்து வாழ் வதோ அல்லது ஒவ்வொன்றுடனும் உறவை வைத்திருப்பதோ சாத்திய மில்லை. ஆனால் நாம் இருக்கும் இடத்தில் இருந்துகொண்டே உலகை அறியவும் ஒவ்வொன்றையும் புரிய வும் அறிதல் வசதியளிக்கிறது. அறித லின் அடிப்படை வாசிப்புத் தானே! எத்தனை சாதனங்கள் வந்தாலும் வாசிப்பின் நிரந்தரத் துவம் அழியாது.

மற்றைய ஊடகங்களைவிட வாசிப்பு ஊடகம் கிரகித்தல் – சிந்தித்தல் என்பதற்கும் அதிக வசதியை அளிக்கிறது. வானொலி, தொலைக்காட்சி என்ற ஊடகங்களூ டான அறிதலில் வேகம் அதிகம். அறியப்படுத்தும் தன்மை என்பது இவற்றில் இயந்திர ரீதியானதால் அறிதலையும் அதற்கேற்ப தயார் படுத்தவேண்டியுள்ளது. ஆனால் வாசிப்பு இந்த அடிப்படையிலிருந்து வேறுபட்டது.

அது அதிக சுதந்திரத்துடன் இயங்க அனுமதிக்கிறது; எந்த ஆர்ப் பாட்டங்களுமில்லாது மௌனமாக தன் உறவை வளர்க்கிறது. அது மேலும் சில வசதிகளையும் அளிக்கி றது. அதிக செலவையும் சிரமத் தையும் தவிர்த்து இலகுவான கையாள்கையில் தன்னை ஐக்கியப் படுத்த தயாராக இருக்கின்றது. அதே வேளை வாசிப்பு பிறருக்கு எந்தச் சிரமத்தையும் தருவதில்லை. பிரதி யைப் படிக்கக்கூடிய ஒளி மட்டும் இருந்தால் அதற்குப் போதுமானது. வாசிப்பு ஊடகம் இயக்குவதற்கா னதல்ல. அதனுடன் சேர்ந்தியங்க வேண்டிய தொழிற்பாட்டை அது கோருகிறது. ஆனால் வாசிப்பின் பெறுமதி உணராது புதிரும் ரகசி யங்களும் சுவாரசியமும் அர்த்தமும் உண்மையும் நிறைந்த கோடானு கோடி சங்கதிகளே அறியாமல் இருக்கும் பேசா மடந்தைத் தனத்தை, நமது சூழலின் பாராமுகத்தை, என்னவென்பது?

"ஒரு நூலகம் திறக்கப்படும் போது பல சிறைச்சாலைகள் மூடப் படுகின்றன" என்பார்கள். உண்மை தான். வளமான, ஒரு பண்பட்ட சமுதாயம் அறிவும் செயற்திறனுமாக இருக்கவேண்டுமெனில் அது தன்னை அறிந்திருக்க வேண்டும். தன்னை, தன் காலத்தை தன் முகத்தை, தன் பிரச்சினைகளை, தன் தேவைகளை அறியும் அறிதல்– தேடல் தன்னை வாழ்விக்கும்.


## துயர்துடைக்க கரம் கொடுப்போம்



தமிழீழத்தில் பட்டினியுடனும் நோயுடனும் போராடும் எம் உறவுகளின் துயர்துடைத்து அவர்களை அரவணைக்க தமிழர் புனர்வாழ்வுக்கழகம் துயர்துடைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகிறது. இதற்கான உதவியைப் பெற்றுக் கொள்ள தமிழர் புனர்வாழ்வுக்கழகம் "துயர் துடைப்பு நாட்கள்" என்ற திட்டத்தை புலம் பெயர்ந்து வாழும் மக்களிடையே ஜூன் ஜூலை மாதங்களில் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளது.

இம் மனிதாபிமான திட்டத்திற்கு அனைத்து தமிழ் மக்களினதும் உதவியினை வேண்டி நிற்கிறது தமிழர் புனர்வாழ்வுக் கழகம். இப்பாரிய மனிதாபிமான பணியில் பங்கேற்க பல்லாயிரம் தொண்டர்களை உரிமையுடன் அணைக்கின்றர்.

உங்கள் மனித நேயத்தையும், உறவுகளின் மேலுள்ள உரிமையையும் மனதில் நிறுத்தி உங்கள் நாடுகளிலுள்ள தமிழர் புனர்வாழ்வுக் கழகங்களுடன் தொடர்புகளை உடன் ஏற்படுத்திக் கொள்ளவும்.

**தமிழர் புனர்வாழ்வுக் கழகம்**




www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சிறுகதை

# எதற்காக?

அதிகாலை 2.00 மணி வரைக்கும் அச்சுக்கோப்பு வேலை. அதன், பிறகு நித்திரைக்குப் போனதில் பியசேனா கண்விழித்த போது, ஆறேமுக்கால்.

ஏழரைமணி பஸ்ஸைப் பிடிக்கும் அவசரம் அவனில் தெரிந்தது. முகம் கழுவி, கன்ரீனில் தேநீர் குடித்தான். அரை கிலோ கேக் வாங்கி பையில் வைத்துக்கொண்டு புறப்பட ஆயத்தமாய் வாசலுக்கு வந்த போதுதான் அது நடந்தது.

கோடை காலத்து இடி போன்ற பேரோசை காதைப் பிளக்க அதன் அதிர்வில் கீழே விழுந்த பியசேனா சமாளித்து எழும்புவதற்கு முன் துப்பாக்கி வெடிச்சத்தங்கள் கேட்கத் தொடங்கின.

அவனுக்குப் புரிந்து விட்டது.

எங்கையோ 'குண்டு' வெடித்திருக்கிறது.

எங்கேயோ என்ன அங்கேயே மிக அருகில்.

அலுவலக ஜன்னல்களின் கண்ணாடி கலீர் என நொறுங்கிச் சிதறுமளவுக்கு அருகே.

வானத்தைத் துழாவிக் கொண்டு சுருள் சுருளாய்க் கிளம்பிய புகை தெரிந்தது.

"மகே அம்மே...!"

"கொட்டி ஆவா....!"

"ஐயோ!"

"ஒக்கம துவண்ட"

"கொட்டி அபேத் மரண்டயனவா..."

"மகே தெய்யனே அப்பேத் ஆரக்ஷகரன்ன"

கூக்குரலிட்டபடி சனங்கள் சிதறி ஓடினார்கள். வெடிச்சத்தங்கள் விடாமற் கேட்டன.

உள்ளே போய் நிற்பது பாதுகாப்பு என்றுபட பியசேனா திரும்பினான்.

நடுங்கியபடி ஒரு கும்பல் நடுக்கூடத்தில் நின்றிருந்தது. பகல் வேலைக்கென ஏற்கனவே வந்துவிட்டவர்களும், இரவு வேலை முடிந்து வீடு திரும்பத் தயாராய் நின்றவர்களுமாய்.

சுமார் அறுபது பேர் வரை—

உயிரைக் கையில் பிடித்தபடி வெளிறிய முகங்களோடு நின்றார்கள். பெண்கள் சிலர் விக்கலெடுத்து ஓவென அழுதுகொண்டிருக்க வேறு சிலர் அவர்களைச் சமாதானப் படுத்திக் கொண்டிருக்க—

அடுத்து என்ன செய்யலாம். என்பது பற்றிச் சிலர் திட்டம் போட்டுக் கொண்டிருக்க பியசேனாவுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. நின்றிருந்த ஊழியர்களில் நாலைந்து தமிழரைத் தவிர மற்ற எல்லாரும் சிங்களவர்.

மிக அருகே குண்டு வெடித்து, வெடிச் சத்தங்கள் தீவிரமடைந்திருந்த நிலையில் அலுவலகத்தை விட்டு வெளியேறி தப்பிச் செல்வது நிச்சயமாய் ஆபத்தானது என்பதை அவர்கள் உணர்ந்துகொண்டனர்.

வெளியே கேட்டுக் கொண்டிருந்த வெடிச்சத்தங்களும், ஆரவாரங்களும் உடனடியாக வெளியே போவது முடியாத காரியம் என்பதைக் கூறின. பெரிய கட்டடங்கள் சில அல்லது பல நொருங்கி வீழ்ந்திருக்க வேண்டும் என்பது உள்ளே நின்றவர்களின் ஊகத்துக்குப் பிடிபட்ட அதே வேளை.

துப்பாக்கி நபர்கள் ஐவர் பாய்ந்து உள்ளே நுழைந்தனர்.

அறுபது பேருக்கும் இப்போது உயிர் நடுங்கிற்று.

பயத்தில் அசையாமல் நின்றார்கள்.

அவர்களைப் பொறுத்த வரை அறுபது பேரின் கதையும் அங்கை முடியப்போவது தீர்மானமாகிவிட்டது.

இஷ்ட தெய்வங்களிடம் இதயத் தொலைபேசிகள் இறுதி வரம் கேட்டன.

உள்ளே நுழைந்தவர்கள் குண்டு வைத்த பயங்கரவாதிகளின் கூட்டத்தைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும்....

பியசேனா முன் தினம் மாலைப் பொழுதை நினைத்துக் கொண்டான்.

உணவுப் பொட்டலத்தைக் கையிலும், கனிவான சிரிப்பை இதயத்திலும் தந்து வழியனுப்பி வைத்த மனைவி ஓடி வந்து கழுத்தைக் கட்டி, வரும்போது கேக் வாங்கி வரும்படி செல்லக் கட்டளையிட்ட பிஞ்சு மகள், 'அவர்களை இனி நான் பார்க்கமாட்டேனா?"

'சுராங்கனீ... என் செல்ல மகளே. இனி நீ தந்தை இல்லாத குழந்தையா?

நெஞ்சு வெடிக்கும் போலிருந்தது. ஐந்து பேரையும் பார்த்தான்.

'பயங்கரவாதிகள்' எப்படியிருப்பார்கள் என்ற கற்பனைக்கும், எதிர்பார்ப்புக்கும் அவர்களின் தோற்றங்களுக்கும் இடையில் பெரிய இடைவெளி ஒன்று இருந்ததை மனம் கணக்கிட்டது. ஈவிரக்கமற்றவர்கள் கொலை வெறி பிடித்தவர்கள் என்றெல்லாம் கூறப்படுகின்ற 'பயங்கரவாதிகள்' இவர்கள் தான் என்ற முடிவை உள்ளே நின்றவர்கள் எடுப்பதற்கு ஐவரின் தோற்றங்களும் உறுதியாய் மறுதலித்துவிட்டன.

ஐந்து பேரும் இளைஞர்கள்.

நிரம்பக் களைத்திருந்தார்கள்.

அவர்களில் வயது கூடியவன் போலத் தெரிந்த இளைஞனுக்கு இருபத்தைந்து வயது மதிப்பிடலாம். நல்ல உயரம், ஆஜானுபாகு, கண்களில் அசாதாரணமான ஒளி.

ஒருவனுடைய முகத்தில் இன்னமும் குழந்தைத்தனத்தின் ரேகைகள் எழுதப்பட்டிருந்தன.

உயரமானவனுடைய கட்டளைக்கு உடனுக்குடன் கீழ்ப்படியும் தோரணை அவர்களின் நடவடிக்கைகளில் தெரிந்தது.

பீதியில் உறைந்துபோய் நின்ற



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

ஊழியர்களை நோக்கி உயரமான வன் வந்தான்.

பியசேனாவுக்கு அடி வயிறு கலங்கியது.

"சுடப்போகிறான் எல்லோரையும் சுடப்போகிறான் கடவுளே... என்ரை மனைவி என்ரை மகள்..."

'இதே... கிட்ட வந்திட்டான் சுடப்போகிறான்....'

'நிச்சயம் இவன் கொட்டியா தான்...'

'வலது கையை அசைத்து துவக்கு விசையை அழுத்தப் போகி....றா.....!

'ஆ... என்ன இது சைகையால் ஏதோ கேட்கிறான் தண்ணீர்'

"அப்பாடா!"

குழாய் இருக்குமிடம் காட்ட ஐவரும் தாகம் தீரக் குடித்தார்கள்.

அறுபது பேரின் மனதிலும் கொஞ்சம் கொஞ்சமாய் பதட்டம் தெளியத் தொடங்கியது. துப்பாக்கி இளைஞர்களின் முகங்களில் எழுதப் பட்டிருந்த உணர்வுப் பிரதிபலிப்பு ஏறக்குறைய ஊழியர்கள் அத்தனை பேரையும் பய உணர்விலிருந்து ஓரளவு விடுவித்து பிரமிப்புக் கலந்த புதுவகை உணர்வொன்றில் கட்டிப் போட்டுக் கொண்டிருந்தது.

துப்பாக்கிச் சத்தங்கள் மிக அருகில் கேட்டன.

சிறிது நேரத்தில் அலுவலகம் இராணுவத்தினரால் சுற்றி வளைக் கப்பட்டது.

'என்ன நடக்கப்போகிறது'

ஊழியர்கள் முகங்களில் மீண்டும் பீதி முகாமிட்டது.

'பயங்கரவாதிகள்' பற்றிய பயம் இப்போது இரண்டாம் பட்சமாகி விட், ஐந்து பேருக்கும் இராணுவத் துக்குமிடையே மோதல் தொடங்கி னால், (சந்தேகமென்ன... அது தொடங்கத் தான் போகிறது) இடையில் அகப்படவிருக்கும் தங்களின் கதி என்னாகுமோ என்ற கேள்வி அவர்களுக்கு முன்னால் விஸ்வரூபம் கொண்டது.

அறுபது உயிர்களைப் பாதுகாக்கும் பொறுப்பு அப்போதைக்கு இராணுவத்தின் கைகளில் இருந்த தால் உடனடியாக மோதல் வெடிக் கப் போவதில்லை. ஆனால் ஏதோ ஒன்று நடந்தேயாக வேண்டும்.

'அது என்ன? எப்போது நடக்கும்?'

இப்படி யோசித்த போது பிய சேனாவுக்கு உள்ளூர திகில் பர விற்று. அறுபது உயிர்கள் ஐந்து பேரிடம் பணயம் ஆகிவிடுமோ?'

'அப்படி நடந்தால் எப்படி முடியும்?"

இளைஞர் மீது அவன் பார்வை படிந்தது.

ம்...உம்...எதையும் சொல்ல முடிய வில்லை.

முகங்களில் அதே நிதானம்.


ஆனால் தீர்மானம் எடுத்து விட்ட உறுதி அந்தக் கண்களில் பியசேனாவுக்குத் தெரிந்தது.

துப்பாக்கி தாரிகளின் தீர்மானம் என்னவாயிருக்கும்?

ஐந்துக்கும் அறுபதுக்குமிடையில் நிலவிய மௌனத்தின் மீது மீண்டும் ஒரு தரம் கல்லெறியப்பட்டது.

இப்போதும் அவன்தான்.

கிட்ட வந்தான் சைகையால் சொன்னான். 'நீங்கள் எல்லோரும்



ஏதாவது குடியுங்கோ.. சாப்பி டுங்கோ' யாரும் அசையவில்லை. பதட்டத்தில் பசியும் தாகமும் தொலைந்திருந்தன. ஊழியர் ஒருவர் அவனுக்கு முன்னால் போனார்.

"எனக்கு ரெண்டு பிள்ளைகள்... என்னை ஒண்டும் செய்து போடா தேங்கோ!" சைகையும் சிங்களமும் சேர்த்துச் சொன்னார், குரல் மன்றாடியது.

ஆயிரம் அர்த்தம் கொண்ட புன்னகை மின்னலொன்று ஐந்து முகங்களிலும் தெறித்து மறைந்தது.

உயரமானவனுடைய சிறு தலையசைப்பு அவருக்கு அபயமளித்தது. அனைவருக்கும் தான்.

பியசேனாவுக்கு இது ஆச்சரியமாயிருந்தது.

'பயங்கரவாதிகள்' இன்னும் ஏன் எங்களைச் சுடாமல் வைத்திருக்கிறார்கள்...?

'இந்தத் தாமதம் கூட ஒருவித சூழ்ச்சியோ?'

'அறுபது மனிதர்களின் உயிர்கள் உள்ளே என்ற துணிவில்தான் பதட்டமில்லாமல் நிற்கிறார்கள்...'

'பணயம்தான் வைக்கப் போகிறார்கள்...'

'இருக்காது... அந்தக் கண்களில் பகைமை இல்லை... அவற்றில் தெரிவது ஏதோ ஒன்று..."

அது என்னவென்று பியசேனா உணர்ந்தானில்லை. பலவகை எண்ணங்கள் அவன் மனதில் மாறிமாறி வந்தன.

பயங்கரவாதிகளிடம் காணப் பட்ட அந்த உணர்வு என்னவென்று இனங்காணாவிட்டாலும் அது



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்


கொலை வெறியல்ல என்ற முடிவு இப்போது பியசேனாவுக்குள் பிறந்து விட்டது.

நண்பகல் நெருங்கிக் கொண்டிருந்தது.

இன்னும் எதுவும் நடக்கவில்லை.

ஏதோ ஒன்று நடந்தேயாக வேண்டும்.

பதட்டமும் ஏக்கமும் ஏறக்குறைய



அத்தனை ஊழியர்களையும் தாம் மரணத்தின் வாசலில் நிற்பதாய் பயம் கொள்ள வைத்தன.

"நீங்களெல்லாரும் வெளியே போகலாம்" மூன்று மணிக்கு அறுபது உயிர்கள் மீண்டும் வாழ்க்கையின் வாசலுக்கு இடம்மாறின.

நிம்மதி மூச்சுக்கள் நீளமாய்க் கிளம்பின.

ஆனால் திடீரென வெளியே போவதா? சூழ்ந்து நிற்கும் இராணுவம் பயங்கரவாதிகள் என்று நினைத்துச் சுட்டுவிடக்கூடும்.

"ஊழியர்கள் அனைவரும் வெளியே வரப் போகிறோம்" படையினருக்கு கேட்கும்படி ஊழியர்கள் ஒருவர் இரண்டு மூன்று தடவைகள் உரத்துச் சொன்னார்.

சிறிது நேரம் பதிலில்லை.

உயரமானவன். ஏதோ சொல்ல ஐவரும் ஆளுக்கொரு இடத்தில் நிலையெடுத்துக் கொண்டனர்.

தங்களின் வெளியேற்றத்திற்காக காத்திருந்த போர்க்களம் இன்னும் சில நேரத்தில் உள்ளே நுளைந்துவிடும் என்பதைப் பியசேனா கற்பனை செய்தான். இளைஞர்களின் நிதானம் இன்னமும் கலையாமல் இருந்தது திகைப்பாயிருந்தது.

படையினரின் உத்தரவு வந்தது.

கைகளை உயர்த்தியபடி ஒவ்வொருவராய் வெளியேற வேண்டும்.

கடைசியாய் நின்றவன் பியசேனா.

படியில் கால் வைக்குமுன் அவனையறியாமல் பார்வை உள்ளே துழாவுகிறது. ஐந்து ஜோடிக் கண்களையும் ஒரே வீச்சில் சந்தித்த அவனது கண்களில் தெறித்து விழுந்த உணர்வில் நன்றியின் சிறு கீறலும் கலந்திருந்தது.

பியசேனா, வீட்டில் மறுபிறவி எடுத்தபோது மாலை ஐந்து மணி.

மனைவி சந்தோஷமாய்க் கண் கலங்கினாள்.

'கேக்' பொட்டலம் சுராங்கனியிடம் கைமாறியது.

இரவு ஏழு மணிக்கு அந்தச் செய்தியை அறிந்தான்.

கட்டிடத்தினுள் நின்ற துப்பாக்கி இளைஞர்கள் தங்களைத் தாங்களே குண்டுவைத்து தகர்த்துக் கொண்டார்கள்.

அதிர்ந்து போனான் பியசேனா.

'ஏன் செய்தார்கள்? எதைச் சொல்ல இது?'

'அவர்களின் இலக்கு எது'? நிச்சயமாய் நாங்களல்ல'

'என்ன வேண்டும் அவர்களுக்கு'

அவனுக்குள் ஒரு பிரளயம் உருவானது.

மரங்களை மட்டுமே பார்த்த மனம் முதல் முதலாய் வேர்களின் ஆழத்தை ஆராய்ந்தது.

'இப்படித் தீர்மானித்துக் கொண்ட பிறகுமா அப்படி இருந்தார்கள்?

எப்படிச் சாத்தியமாயிற்று?

'உறவு பாசம் இளமை உணர்வு ஏன் துறந்தார்கள்?

யார் அவர்கள்?

அந்த இளைஞர்களின் தேவை என்ன? தேடல் என்ன?

'இங்கே ஏன் வந்தார்கள் எங்கிருந்து வந்தார்கள்?'

இரவுச் சாப்பாட்டுக்கான மனைவியின் அழைப்பு பியசேனாவுக்கு கேட்கவில்லை. இதயம் எழுப்பிய புதுக்கேள்விகள் மட்டுமே கேட்டன.

'உயிரினும் உயர்ந்ததா அவர் தேடுவது?'

அது என்னவாயிருக்கும்.

ஐந்து முகங்களும் நினைவில் வந்து மீட்டன.

எங்களைப் புரிகிறதா?

அந்த முகங்கள் இந்தக் கேள்வியை அவனிடம் கேட்பது போலிருந்தது.

உயிர் சிலிர்த்தது அவனுக்கு.

'அவர்கள் பயங்கரவாதிகளில்லை, அப்படி இருக்க முடியாது'

அந்த நிமிடத்தில் தான் உயிரோடு இருப்பது அதற்கு சாட்சி என்பதைப் பியசேனாவின் மனம் உணரமுற்பட்டது. இதயக் கதவில் யாரோ மெதுவாய்த் தட்டினார்கள்.

செய்தி கேட்க வானொலியைத் திறந்தான்.

'சமாதானத்துக்கான யுத்தம்' எண்பத்தைந்து வீதம் பூர்த்தியாகி விட்டதெனவும் இஒக்ஷவாண்டு இறுதிக்குள் அது முடிவுக்குக் கொண்டு வரப்படும் எனவும் ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார்.

அவன் கை 'சட்' என்று வானொலியை நிறுத்தியது.

அஜந்தி

## அன்னை பூபதி தமிழீழத் தாய்க் குலத்தின் எழுச்சி வடிவம்

எமது புனித விடுதலை போராட்டத்தின் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார். ஒரு பெண்ணாக; ஒரு தாயாக; ஒரு குடும்பத்தின் தலைவியாக வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து; சாதாரண பற்று உறவுகளைத் துறந்து தனது சமூகத்தின் சுபீட்சத்திற்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்திருக்கிறார். தனி மனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழத் தாய்க் குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்துள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

## ஐ.நா.விசேட பிரதிநிதி

# தமிழ்ச் சிறுவர் நிலைகண்டு கவலை

ஆயுதப் போராட்டச் சூழலில் உள்ள சிறுவர் சிறுமியர்களின் நலன்களுக்குப் பொறுப்பான ஐக்கிய நாடுகள் சபையின் விஷேடப் பிரதிநிதி திரு. ஓலாறா ஒட்டுணு அவர்கள் வன்னி மற்றும் யாழ் குடா நாட்டுக்கு விஜயம் செய்து யுத்தத்தால் பாதிப்புற்றுள்ள தமிழ்ச் சிறுவர்களின் நிலைமைகளை நேரில் கண்டறிந்தார். வன்னிக்கு உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்ட அவர் திரு.சு.ப.தமிழ்ச்செல்வன், திரு. அன்ரன் பாலசிங்கம் ஆகியோர் தலைமையிலான தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடன் உத்தியோகபூர்வ பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு திரும்பினார். கொழும்பில் பத்திரிகையாளர் மகாநாட்டில் உரையாற்றிய அவர் தமிழ்ப் பொதுமக்கள் குறிப்பாக தமிழ்ச் சிறுவர்கள் வன்னிப் பகுதியில் உணவின்றி மருந்து இன்றி மற்றும் அடிப்படை வசதிகள் பலவுமின்றி வருந்துவதாகத் தெரிவித்தார். அத்துடன் தமிழீழ விடுதலைப் புலிகள் இளவயதினரைப் படையில் சேர்ப்பதாக சிறீலங்கா வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் சிறீலங்கா பிரச்சார இயந்திரங்களும் செய்துவரும் புகார் குறித்தும் மற்றும் பல விடயங்கள் குறித்தும் தாம் விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும்; அவர்களது பதில்களில் தாம் திருப்தி அடைவதாகவும் தமக்கு விடுதலைப் புலிகள் வாக்குறுதிகள் அளித்துள்ளதாகவும் எடுத்துக் கூறியுள்ளார்.

இதற்கிடையில் புலிகளின் குரல் வானொலி ஐ.நா.வின் விஷேட பிரதிநிதி திரு. ஓலாறா ஒட்டுணுவுடன் விடுதலைப்புலிப் பிரதிநிதிகள் நடாத்திய பேச்சுக்கள் தொடர்பாக வெளியிட்ட செய்தியில் சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தக் கூடிய வகையில் செய்துவரும் குற்றச் சாட்டுக்களை தாம் நிராகரித்து போதிய விளக்கங்கள் அளித்ததாகக் கூறியது. வன்னிப் பெருநிலப்பரப்பில் 30000–க்கு மேற்பட்ட சிங்களப் படையினரை ஒரு வருடத்துக்கு மேலாக வெற்றிகரமாகத் தடுத்து நிறுத்தி வருவதைச் சுட்டிக்காட்டிய விடுதலைப் புலிகள், இதன் மூலம்

**விடுதலைப் புலிகளுடன் வன்னியில் சந்திப்பு**

சிறீலங்காவுக்குப் பலத்த ஆளணி இழப்புக்களும், ஆயுத தளபாட அழிப்புக்களும் ஏற்பட்டுள்ளதையும் குறிப்பிட்டு இத்தகைய ஆற்றல்மிகு செயல்களை விடுதலைப்புலிகள் சிறுவர்களின் படை கொண்டு செய்வதாக கதிர்காமர் உண்மையில் நம்புவாரானால் அது அவரது சிறுபிள்ளைத் தனத்தையும் அர்த்தமற்ற கருத்துக்களை வெளியிடுவதையுமே எடுத்துக்காட்டுகிறது எனக் கூறியுள்ளனர். மேலும் விஷேட பிரதிநிதிக்கு விடுதலைப் புலிப் பிரதிநிதிகள் எவ்வாறு சிங்கள அரசாங்கங்கள் தொடர்ச்சியான முறையில் தமிழ் மக்களை ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கினர் என்பதையும் எடுத்து விளக்கி தமிழ் மக்கள் எவ்வாறு அவர்களது சொந்தத் தாயகத்திலேயே சிறீலங்காவால் தமிழ் மக்கள் மேல் நடாத்தப்பட்டுவரும் யுத்தத்தால் கடுமையான துன்பங்களையும் இழப்புக்களையும் அனுபவிக்கின்றனர் என்பதனையும் விவரித்தனர். இந்த யுத்தம் பாரிய அழிவுகளை பரந்த அளவில் மேற்கொண்டு வருவதினால் தமிழ்ச் சிறுவர்கள் மிகக் கடுமையான பாதிப்புக்கள் அடைந்து வருவதனைச் சுட்டிக்காட்டினர்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் உரிமைகளைச் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்காக சிறீலங்காப் படைகளுடன் போரிட்டு வருவதாகத் தெரிவித்த அவர்கள் சிறீலங்காப் படைகள் பள்ளிக்கூடங்களை இராணுவ இலக்குகளாக்கி அழித்து அங்கே படிக்கும் சிறுவர்களையும் சேர்த்து கொன்று குவிக்கும் கொடுஞ் செயலை எடுத்து விளக்கினர்.

தமிழச் சிறுவர்கள் குண்டு வீச்சுக்களாலும் எறிகணைத் தாக்குதல்களாலும் அடைந்துவரும் அளப்பரிய பாதிப்புக்களை எடுத்துக்கூறி சிறுவர்கள் அகதி முகாம்களிலும் சொல்லொணாக் கஷ்டங்களை அனுபவித்து வருவதனை விளக்கினர். அத்துடன் அடிக்கடி இடம் பெயர்வதினால் தமிழ்ச் சிறுவர்கள் எதிர்நோக்கிவரும் இன்னல்களையும் எடுத்து இயம்பினர்.

இவ்வாறு குழந்தைகள் ஈவிரக்கமற்ற வகையில் வாட்டி வதைக்கப் படுவதற்கு சிறீலங்கா அரசாங்கமே முழுப் பொறுப்பாளியாக உள்ளது எனவும் விடுதலைப்புலிப் பிரதிநிதி



www.tamileelamarchive.com

கள் தெட்டத்தெளிவாக எடுத்து விளக்கினர்.

அத்துடன் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட 1500–க்கும் மேற்பட்ட தமிழ்க் குழந்தைகளுக்கு ஆதரவு அளித்து பராமரித்து வருவதினையும் ஐ.நா. விசேட பிரதிநிதி ஒலாறா ஒட்டுணுவுக்கு எடுத்துக்காட்டிய விடுதலைப் புலிகள் தாம் இராணுவ ஆக்கிரமிப்பில் உள்ள தமிழ் மக்கள் படும் துன்பங்கள் குறித்து மிகுந்த அனுதாபமும் அக்கறையும் காட்டி வருவதினையும் விளக்கினர். இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் உள்ள தமிழ் மக்கள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட பிரதேசங்களூடாக எவ்வித தடையுமின்றி பூரண சுதந்திரத்துடன் நடமாடுவதற்கு அனுமதித்துள்ளதை எடுத்துவிளக்கிய விடுதலைப்புலிகள் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசங்களில் முஸ்லீம் மக்கள் மீளக் குடியேறுவதற்கும் தாம் எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லை எனவும் எடுத்துக் கூறியுள்ளனர். மேலும், தாம் பதினெட்டு வயது பூர்த்தியடையாத வீரர்களைப் படையில் சேர்ப்பதில்லை எனவும் விளக்கிக் கூறியுள்ளனர்.

மேலும் விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தைகளின் போது திரு. ஒலாறா ஒட்டுணு அவர்கள் ஐக்கிய நாடுகள் சபை, நடைபெற்று வரும் யுத்தத்தால் தமிழ்ச் சிறுவர்கள் பலவழிகளில் பலத்த பாதிப்புக்களுக்கு உள்ளாகி வருவது குறித்து ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாகக் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் தமிழ்ச் சிறுவர்களுக்கு புனர்வாழ்வு அளித்து அவர்களைப் பாதுகாக்கும் திட்டங்களைத் தொடங்க ஐக்கிய நாடுகள் சபை விருப்புக் கொண்டுள்ளதெனவும் உறுதிமொழி பகன்றார் என புலிகளின் வானொலி செய்தி தெரிவித்தது.

பி.பி.சி.செய்தி முகவர்களது செய்திகளின்படி ஐக்கிய நாடுகள் சபையின் விஷேட பிரதிநிதி தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சந்திப்பிலும் அவர்களது பதில்களிலும் உறுதி மொழிகளிலும் பூரண திருப்தி தெரிவித்துள்ளதாகத் தெரியவருகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் விஷேட பிரதிநிதி திரு.ஓலாறா ஒட்டுணு அவர்கள் விஜயம் குறித்து மகிழ்ச்சியும் வரேற்பும் தெரிவித்துள்ள புலம்பெயர் தமிழர்கள் தமிழ்ச் சிறுவர்களின் எதிர்காலம் குறித்து ஐக்கிய நாடுகள் சபை உறுதியான தீர்மானங்களை மேற்கொண்டு அதனை அமுல் நடத்துவதிலேயே தமிழ்ச் சிறுவர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது எனக் கருதுகின்றனர். தமிழ்ச் சிறுவர்களின் நிலை குறித்து எடுத்து விளக்குவதற்கான மக்கள் பிரதிநிகள் யாருமே சிறீலங்கா அரசாங்கத்தில் இடம்பெறவில்லை என்பதை ஐக்கிய நாடுகள் சபை கவனத்தில் கொண்டு தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழ் மக்களின் உண்மைப் பிரதிநிதிகள் என்பதனை ஏற்று தமிழீழ விடுதலைப் புலிகளுடனான நேரடிச் செயற்பாடுகளை விரைவுபடுத்தி சிறுவர் பிரச்சினைக்கு விடிவுகாணவேண்டுமென்பதே புலம்பெயர்ந்த தமிழ் மக்களின் கருத்தாக உள்ளது.

மேலும், தமிழ் மக்களது உடனடித் தேவை என்ன என்பதை

**சிறீலங்காப் படைகள் விலக்கப்பட்டாலே சிறுவர் வாழ்வு பெறுவர்**

"சமகால ஆயுதப் போராட்டங்களில் மனிதாபிமானத் தலையீடு" (Humanitarian Interference in contemperory conflict) என்னும் நூலை எழுதிய ராம்ஸ் பொதமும் (Rams Boltam) டொம் வுட் ஹவுஸ் (Tom Wood House) ம் பின்வருமாறு கூறியுள்ளனர்.

"அடிப்படைத் தேவை பாதுகாப்பு (Security), அங்கீகாரம் (Recognition) அத்துடன் அரசியல் நிறுவனங்கள், பொருளாதாரப் பங்களிப்பு ஆகியவற்றுக்கான நீதியான அனுமதிகள் (Access to political Institutions and Economic Participations), ஆம், இவைகள் தமிழ் மக்களுக்கு மறுக்கப்பட்டதினாலேயே தமிழ்ச் சிறுவர்கள் இன்று கொன்றொழிக்கப்பட்டு பகிரங்க இனக் கொலைக்கு உள்ளாகியும் அதனை உலகு கண்டும் காணாததுமான நிலை தொடர்கிறது. இதனை மாற்றியமைத்து தமிழ் மக்களுக்கு பாதுகாப்பை, அங்கீகாரத்தை, அரசியல் உரிமை, பொருளாதார உரிமை உட்பட அனைத்து உரிமைகளையும் பெற போராட வேண்டியவர்களாகத் தமிழீழ விடுதலைப் புலிகள் உள்ளனர். இந்த நியாயமான சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான போராட்டத்தை பயங்கரவாதம் எனச் சிறீலங்கா கொச்சைப் படுத்துகிறது. பயங்கரவாத கல்வி தொடர்பாக உலகப் பிரசித்தி பெற்ற பேராசிரியரான அட்ரியன் குலகே (Professor Adrian Guelke), தனது இவ்வாண்டில் வெளியான பயங்கரவாத யுகமும் சர்வதேச அரசியல் முறைமையும் என்னும் நூலில் விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமென அழைப்பது குறித்து பலத்த சந்தேகம் தெரிவித்துள்ளார். அமைதியான சூழ்நிலையில் பயங்கரவாதம் என்பதும் அரசியல் வன்முறைகள் தலைதூக்கியுள்ள நேரத்தில் பயங்கரவாதம் என்பதும் இருவேறான அர்த்தங்கள் உள்ளவை என்பது அவர் வாதம். ஒரு தொகுதி மக்கள் அரசியல் வன்முறைகளால் இன அழிப்புகளால் அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் சூழலில் அத்தொகுதி மக்கள் தம்மைத் தாமே பாதுகாத்து உயிர்வாழ்வதற்காக எடுக்கும் முயற்சிகளைப் பயங்கரவாதம் என அர்த்தப்படுத்தலாமா என்ற கேள்வி பேராசிரியர் அட்ரியன் குலகேயினால் முன்வைக்கப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசு பயங்கரவாதத்தின் விலையாக தமிழ்க் குழந்தைகள், சிறுவர்கள் அனுபவிக்கும் இன அழிப்புக்கள் இனவதைகள் தற்பொழுது ஐக்கிய நாடுகள் சபை பிரதிநிதியால் உலகுக்குத் தெளிவாக வெளிவரச் சந்தர்ப்பம் கிட்டியுள்ள இச்சூழலில் ஐக்கிய நாடுகள் சபை தனது கடமையினைச் சரிவரச் செய்து சிறீலங்காவின் அரச பயங்கரவாதத்தில் இருந்து தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும்.

முன்னர் இது போன்று ஆடி 83 இன அழிப்பினால் தமிழ் மக்களுடைய துயர வாழ்வு ஐக்கிய நாடுகள் சபை வரை சென்ற நேரத்தில் ஐக்கிய



www.tamileelamarchive.com

நாடுகள் சபை உரிய நடவடிக் கையை எடுக்கத் தவறிவிட்டது. இதனை ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைச் செயற்பாட்டாள ராக உலகப் புகழ்பெற்ற திரு. லியோ கூப்பர் (Mr. Leo Kuper) அவர்கள் தனது "இன அழிப்பிலிருந்து பாது காப்பு" (The prevention of Genocide) எனும் நூலில் 222-ம் பக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார். "துரதிஷ்ட வசமாக இக்கட்டத்தில் ஐக்கியநாடு கள் சபை உறுதியான நடவடிக்கைக ளை எடுக்கத் தவறிவிட்டது. இத னால் சிங்கள இராணுவம் தமிழர் கள் மீதான பெரிய அளவிலான இன அழிப்புகளில் இறங்கி இன்று யுத்தம் கட்டுப்பாட்டுக்கு அப்பாற் பட்ட ஒன்றாக விரிவடைந்துவிட் டது".

ஆகவே இம்முறையும் ஐக்கிய நாடுகள் சபையின் விஷேட பிரதிநிதி தமிழ்ச் சிறுவர்களின் துயர்நிலை குறித்து உலகின் கவனத்தை ஈர்க்காத வாறு சந்திரிகா அரசாங்கம் தாங்கள் உரிய கண்காணிப்புப் பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுப்பதாகக் கூறி திசைதிருப்பக்கூடும். ஆதலால் ஐக் கிய நாடுகள் சபை நேற்று விட்ட பிழையை இன்றும் தொடராது தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து மிக அவதானமாக செயற் பட்டாலே தமிழ்ச் சிறுவர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வை ஏற்ப டுத்த முடியும்.

ஆம்! தமிழ்ச் சிறுவர்கள் சிங்க ளப் பெரும்பான்மை அரசாங்கங்க ளால் ஆரம்பத்தில் அரசியல் இலக் குகளாகவும் பின்னர் இன அழிப் புக்கான இலக்குகளாகவும் கருதப் பட்டு செயற்திட்டங்கள் நடை முறைப்படுத்தப்பட்டு வந்தமை இலங்கைத் தீவின் நவீன வரலாறாக உள்ளது.

தமிழ்ச் சிறுவர்களின் தாய்மொழிக் கல்வி ஆரம்ப இலக்காக விளங்கி யது. ஐக்கிய நாடுகள் சபையின் சாசனங்கள் ஒவ்வொரு குழந்தையும் எந்த மொழியில் கல்வி பெறுதல் வேண்டும் என்பதை தேர்ந்தெடுக் கும் உரிமை அக்குழந்தையின் தாய் தந்தையர்களுடையது எனத் தெளி வாகக் கூறுகின்றன. இருந்த போதி லும் இலங்கைத் தீவில் சிங்களம் மூலம் பிள்ளைகள் கல்வி பயில வேண்டிய நெருக்கடிகள் சிங்கள பெரும்பான்மை அரசுகளால் ஏற்ப டுத்தப்பட்டன. இதனால் வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு வெளியே தமிழர்கள் தங்கள் பிள்ளைகளை சிங்கள மொழியில் கல்வி கற்பிக்க வேண்டிய கட்டாய நிலைகள் தோற்றம் பெற்றன.

இதனை அடுத்து வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் சிங்கள ஆசிரிய நியமனங்கள் மூலம் சிங்களத்தை போதனா மொழியாக்குவதற்கான பல முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. ஆயினும் இது தமிழர் களின் தேசியவாதத்தின் விழிப்புணர் வால் நடைமுறைச் சாத்தியமற்றதாக் கப்பட்டது. ஆயினும், இலங்கைத் தீவு காலனித்துவத்திலிருந்து விலகிய காலம் முதல் தமிழ்ப் பள்ளிக்

> **தமிழர் பிரச்சினையின் ஒரு அங்கமாகவே சிறுவர் பிரச்சினை நோக்கப்பட வேண்டும்**

கூடங்கள் புறக்கணிக்கப்பட்டு சிங்க ளப் பள்ளிக்கூடங்கள் வளர்க்கப் பட்டு வந்தமை இலங்கைத் தீவின் கல்வியியல் வரலாறாக உள்ளது. எனவே, தமிழ்ச் சிறுவர்களை அரசி யல் இலக்காக்கும் தன்மை சிங்களப் பௌத்த பேரினவாத செயற்திட்டத் தின் ஒரு கூறாக வளர்த்தெடுக் கப்பட்டது.

மேலும், தமிழ்ச் சிறுவர்களின் கல்வியில் மேனிலையாக்கம் பெற முடியாதவாறு உயர்கல்வி மறுப் புக்கள், தொழில்வாய்ப்பு மறுப்புக் கள் என்பன சிங்கள பௌத்தப் பேரினவாதத்தின் ஒரு செயற்திட் டமாகத் திகழ்ந்தன. இவ்வாறு தமிழச் சிறுவர்களை அரசியல் இலக்காக்கி வந்த சிங்கள பெரும் பான்மை அரசாங்கம், தான் தமிழர் கள் மேல் யுத்தத்தைப் பிரகடனப் படுத்தியதன் பின்னர் தமிழ்ச் சிறு வர்களை இராணுவ இலக்குகளாக மாற்றிக்கொண்டனர். இதனால் தமிழ்ச் சிறுவர்களுடைய உயிர்கள் நூற்றுக்கணக்கில் இழக்கப்பட்டதும் அல்லாமல் அவர்களுடைய எதிர் காலம் இருள் சூழ்ந்ததாக மாற்றப் பட்டுள்ளது. உணவுத்தடை, மருந் துத்தடை, மருத்துவ வசதிகள் தடை போன்ற பலதடைகளாலும் இரா ணுவ முற்றுகைகளாலும் தமிழ்ச் சிறுவர்கள் ஊட்டச்சத்தற்றவர்க ளாய், நோய்கள் மிகுந்த சமுதாய மாய், கல்வி வசதிகள் அற்றவர்க ளாய், உடல் ரீதியாகவும் உளரீதியா கவும் பலத்த பாதிப்புக்களை அடைந்து வருகின்றனர். இந்த உடல் உளத்தாக்கல்கள் அவர்களது பெற் றோர், சகோதரர்கள் இராணுத்தின ரால் அழிக்கப்படும் பொழுது, காயப்படுத்தப்படும் பொழுது அவ மானப்படுத்தப்படும் பொழுது, மானபங்கப்படுத்தப்படும் பொழுது, அவர்களை ஆதரவற்றவர்களாக மட்டுமல்லாது தாம் வாழ்வதற்கு போராடியே வாழவேண்டும் என்னும் விளைவையுடையவர்களாகவும் இயற்கையாகவே மாறுகிறது.

இவ்வாறு வாழ்வு என்பது போராட்டமே என்ற நிலைக்கு அவர்களை சிறீலங்கா ஆக்கிரமிப்பு அரசாங்கம் மிக இளவயதிலேயே தள்ளுவதினால் அவர்கள் தாமும் தாயக உரிமைக்காக மட்டுமல்ல வாழும் உரிமைக்காகவும் போராடுப வர்களாக மாற விருப்பம் கொள்வது இயல்பானதே. ஆனாலும் அவர்க ளது நல்வாழ்வுக்காக அவர்களுக் காக அவர்களது பூரண விடுத லைக்காக தங்களையே உடல், உயிர் ரீதியாகவும் அர்ப்பணிக்க ஆயத்த மாக உள்ள தமிழீழ மக்களின் பேரியக்கமான தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ்ச் சிறுவர்கள் விடயத் தில் மிக மிக கவனமாக அணுகு முறைகளுடனான செயற்திட்டங்க ளையே முன்வைத்து வருகின்றனர்.

எந்தச் சூழலிலும் தமிழ்ச் சிறுவர் கள் தங்கள் கல்விக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்பது தமிழீ ழத் தேசியத் தலைவர் பிரபாகரனின் முழு விருப்பாக உள்ளது. அந்த நிலையிலும் தமிழ்ச் சிறுவர்கள் ஆதரவற்றவர்களாக நிலைகுலையக் கூடாது என்பதில் மிகுந்த அக்கறை கொண்ட தேசியத் தலைவர் அவர் களுக்கு அன்பும் ஆதரவும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவென செஞ் சோலை, காந்தரூபன் அறிவுச்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

சோலை போன்ற அமைப்புக்களைத் தோற்றுவித்து அதன் மூலம் தமிழ்ச் சிறுவர்கள் ஆதரவற்றவர்கள் அல்ல அவர்கள் தேசத்தின் செல்வங்கள், தமிழீழ மக்கள் அனைவராலும் அன்பாகப் பண்பாக அரவணைத்துப் போற்றப்பட வேண்டியவர்கள் என்ற உணர்வினைத் தமிழீழத் தேசத்தில் நிலைபெறச்செய்துள்ளார். இதனால், இந்தச் சிறுவர் ஆதரவு நிலையங்களில் பராமரிக்கப்படும் சிறுவர்கள் பூரண ஆளுமையுள்ள அறிவுள்ள ஆற்றலுள்ள தேசச் செல்வங்களாக உயர்வடைந்து வருவதை அந்நிலையங்களுக்குச் சென்று பார்த்தவர்களின் வாய்மொழிச் சான்றுகள் எடுத்துக்காட்டுகின்றன.

PANOS சர்வதேச அமைப்பு உலகளாவிய நிலையில் "சண்டைக்கும் ஆயுதம் பாதுகாப்புக்கும் ஆயுதம்" என்ற சர்வதேசச் செயற்திட்டத்தை நடாத்தியது. இந்தச் செயற்திட்டத்தின்படி ஆயுத முரண்பாடுகள் உள்ள நாடுகளுக்கு சர்வதேசச் செய்தியாளர்கள் நேரில் சென்று மக்களைப் பேட்டி கண்டு அப்பேட்டிகளை ஒரு நூலாகத் தொகுத்து வெளியிட்டுள்ளனர். இந்த சர்வதேசக் குழு தமிழீழத்திற்குச் சென்று அங்குள்ள மக்களைச் சுதந்திரமான முறையில் பேட்டி கண்டபொழுது மக்கள் அளித்த செவ்விகளில் சில பகுதிகளை இங்கு தர விரும்புகிறேன்.

ரதி எனும் 42 வயது தமிழ்ப் பெண் அளித்த தகவல் இது. "இந்திய அமைதிப்படையினரின் கொமாண்டர் இரவுபகல் என்று பாராது எந்த நேரத்திலும் எனது வீட்டுக்குள் புகுந்து இங்கே வந்துவிட்டுப் போன புலிகள் எங்கே எங்கே என என்னை எனது குழந்தைகளின் முன்னால் அடித்துத் துன்புறுத்துவார்கள். இதனைக் கண்டு எனது பத்து வயது இளையமகன் துடிதுடிப்பான், பதைபதைப்பான், "அம்மா, நாம் வாழ்வதானால் நாம் தாயகத்திற்காக பாடுபடவேண்டும். இப்படி வாழ்வதில் எந்தப் பலனும் இல்லை" என அந்த பத்து வயது நிரம்பிய பாலகன் தத்துவம் பேசும் பொழுதுதான்நான் நாவடைத்து நிற்க வேண்டிய சூழல் இராணுவத்தினால் தோற்றுவிக்கப் பட்டிருந்தது. அவன் ஆக்கிரமிப்புப் படைகளின் மேல் கொண்ட வெறுப்பு தானும் விடுதலைப்புலியில் சேரப்போவதாகப் புறப்பட்ட பொழுது எனக்கு அவனைத் தடுக்க மனம்வரவில்லை. விடுதலைப்புலிகள் அவரை நல்ல ஒரு நிலைக்கு வளர்த்து எடுப்பார்கள் என்பது என் மனவுறுதி. நான் ஒருபொழுதும் எனது பிள்ளைகள் போகக்கூடாது மற்றவர்களுடைய பிள்ளைகள் எமக்குச் சுதந்திர தனி நாட்டைப் பெற்றுத் தரட்டும் எனக்கூற மாட்டேன். அத்தகைய சிந்தனை முற்றிலும் தவறானது. நான் எனது குழந்தைகளையும் விடுதலைப்புலிகளையும் எனது சொந்தச் செல்வங்களாகவே கருதுகிறேன். அதனால், அவர்கள் உணவின்றி இருந்த பொழுது நான் அவர்களுக்கு உணவளித்தேன். நாம் சோறும் கறியும் உண்டு பசியாறும் பொழுது மற்றவர்கள் பட்டினியால் பதைபதைப்பதை எப்படிப் பார்த்திருக்க முடியும், இவ்வாறு எனது சொந்தச் செல்வங்களுக்கு நான் உணவளித்ததுதான் நான் செய்த குற்றமாக இராணுவம் என் வீட்டைத் துளைத்தது. என்னை வாட்டி வதைத்தது. இதனைக் கண்டுதான் என் இளவயது மகன் விடுதலைப் புலிகள் இயக்கத்தில் சேர்ந்தான். அவர்கள் அவனை போர்முனைக்கு அனுப்பவில்லை. அவுன் திறமையான முறையில் படித்துக் கொண்டிருக்கிறான். அவனுக்கு உரிய வயது வருமட்டும் அவனை அவர்கள் போர்முனைக்கு அனுப்பமாட்டார்கள் என்பது நான் நன்கறிந்த ஒன்று"

**ஐ.நா. நேற்றுவிட்ட பிழையை இன்றுவிடக்கூடாது.**

இவ்வாறு அந்தத் தமிழ்த்தாய் உலகச் செய்தியாளருக்குத் தனது செவ்வியில் உறுதியுடன் கூறியுள்ளார்.

கோகிலா என்னும் 43 வயது பள்ளித் தலைமை ஆசிரியை தனது பேட்டியில் "கொழும்புக்கும் பிற நாடுகளுக்கும் ஓடிச் சென்று நல் வாழ்வைத் தேடி வாழ்பவர்களை விட தமிழீழத்தை வாழ்விடமாகக் கொண்டு வாழும் நாம் விடுதலைப் போராட்டத்தில் பங்கேற்று வாழ்கின்றோம். எங்கள் பெண்கள் ஆக்கிரமிப்பாளர்களால் பாலியல் வன்முறைகளுக்கு உள்ளாகி ஓலமிட்டு கொலையாவதைவிட ஆயுதமேந்தி ஆக்கிரமிப்பு இராணுவத்துடன் மோதி நிற்பதில் மனவிடுதலையடைகிறோம். எங்கள் பெண்கள் இந்த மண்ணைமட்டுமல்ல முழுத் தமிழீழப் பெண்களையுமே பாதுகாத்து நிற்கின்றனர். விடுதலைப் போராட்டம் ஒரு பொழுதும் தோல்விகாணாது. எங்களுக்கு ஒளிமயமான எதிர்காலம் உண்டு. அது எப்பொழுது என்பதுதான் இன்றுள்ள கேள்வி" எனக்கூறி தமிழ் மக்கள் தங்கள் தலைமை மீதும் தங்கள் தேசத்தின் முழுமையான விடுதலை மீதும் கொண்டுள்ள சத்திய வேட்கையை சுதந்திர தாகத்தை உறுதியை வெளிப்படுத்தினார்.

வினோதினி எனும் முன்னாள் ஆயுள்வேத டாக்டர் அளித்த பேட்டியில் "நாம் ஏன் இந்தப் போராட்டத்தில் ஈடுபடக்கூடாது; நான் பிறந்த தேசத்தை என்னத் தவிர வேறு யார் அன்பு செய்யமுடியும்; மக்கள் பொருளாதார ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் துன்பமடையும் இந்நேரத்தில் அதற்கான தேவை என்னை அழைக்கிறது. அதனால், இந்த மண்ணில் பிறந்த ஒவ்வொருவரும் இந்த மண்ணினதும் மக்களதும் விடுதலைக்காக பாடுபடக் கடமைப்பட்டுள்ளோம். நான் காயமடைந்த போராளிகளைப் பராமரிப்பது உண்டு. பாலர் பாடசாலை ஆசிரியையாக இளவயது செல்வங்களுக்குக் கல்வியூட்டுவதுண்டு. இயக்கத்துடனான எனது ஈடுபாடு எனக்கு தன்னம்பிக்கையை வளர்த்து மக்களுடன் உறவாடி அவர்களுக்கு சமூகசேவை செய்ய என்னைத் தூண்டி நிற்கிறது. யுத்தத்தினால் விதவைகளாகவும் திருமணமாகாதவர்களாகவும் பெண்கள் அதிக அளவில் வாழும் சூழ்நிலை தோன்றியுள்ளது. இதனால், பெண்கள் தங்கள் சொந்தக்கால்களில் நிற்கும் தன்மை வளர்க்கப்பட்டு வருகிறது மக்கள் யுத்தத்தால் பெருந் துன்பங்களை அடைந்தபோதும் எங்



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்

கள் மக்களை எதிரியிடம் இருந்து பாதுகாப்பதைப் பெரிதாகக் கருதி எங்கள் வாழ்வையே இதற்காக இழக்கத் தயாராக நிற்கிறோம். எங்களுக்கு இந்த மண்ணில் வாழ பூரண உரிமையுண்டு. அதனை யாருமே மறுக்க முடியாது" என்றார்.

அனு எனும் யாழ். பல்கலைக் கழக பட்டதாரி மாணவி அளித்த பேட்டியில், "நான் டாக்டராக வேண்டுமென்ற ஆர்வத்துடன் படித்தவள். ஆனாலும், சிங்கள அரசாங்கத்தின் இன ஒதுக்கீடு காரணமாக அந்த ஆசையை மறக்க வேண்டியவளாகினேன். இனப்பாகுபாடே தமிழ் இளம் சந்ததி அரசாங்கத்திற்கு எதிராக ஆயுதம் ஏந்தியதன் காரணி. அரசியல்வாதிகளுக்கு பிரச்சினையைத் தீர்க்கும்படி நீண்ட காலங்களைக்கொடுத்தார்கள். அவர்கள் அப்படி செய்யத்தவறினர். யுத்தத்தையே பிரச்சினைக்குத் தீர்வாக அவர்கள் முன் வைத்துள்ளனர். நான் போராட்டத்துடன் வளர்ந்தவள், எனக்குச் சிங்கள அரசியல் தலைமைகள் தமிழ் மக்களை வெறுத்து ஒதுக்கியதையும் கூலிகள் கொண்டு 1958, 1983 வரை தமிழ் மக்களை பாலியல் வன்முறைகள், கொள்ளையடிப்புகள், இனக்கொலைகள் கொண்டு அச்சுறுத்தியதையும் நான் நன்கறிவேன். இதன் விளைவே யுத்தம் தோற்றுவிக்கப்பட்டது. பெண்களே இதனால் மிக அதிகமாகப் பாதிப்புற்றனர். நான் நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்டவள். எங்கள் ஊரை சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்ததும் நாங்கள் இளம் பெண்களே முதலில் ஓடத்தொடங்கினோம். உங்களுக்குத் தெரியும்தானே சிறீலங்காப் படையினர் தமிழ்ப் பெண்களுடன் எவ்விதம் நடந்து கொள்கிறார்கள் என்று. இதனாலேயே ஓடத்தொடங்கினோம். நாங்கள் ஓடும் பொழுது விமானங்கள் வீசிய குண்டில் என் கண் எதிரிலேயே சில சிறுவர்கள், சிறுமியர்கள் குண்டு அடிபட்டு வீழ்ந்தனர். அவர்கள் உதவிக்கு ஓலமிட்ட போதிலும் நாம் உதவும் திராணியற்றவர்களாக உயிரைப் பாதுகாக்கவேண்டி ஓடினோம். இது இன்னும் என் மனதைப் பதைபதைக்க வைக்கிறது. நாங்கள் அழிவுகளையும் மனித இறப்புக்களையுமே எங்கள் வாழ்வில் கண்டு நிற்கிறோம். நாங்கள் இவற்றுக்கு இன்று பழகிவிட்டோம். இவற்றைக் கண்டு நாம் இன்று பயப்படுவதில்லை. இவற்றிலிருந்து விடுபடுவதற்காகவே இளம் பெண்கள் ஆயுதம் ஏந்திய இயக்கப் போராளிகளாகின்றனர்" எனக் கூறினார்.

இந்தப் பேட்டிகள் அனைத்துமே தமிழ் மக்களின் பிரச்சினையை சிறீலங்கா இராணுவத்தினால் தமிழ் மக்கள் மீதான இன அழிப்பினூடாகத் தீர்க்கலாம் எனச் செயற்படுவதை எடுத்துக்காட்டுகிறது. இதுவே, தமிழ்ச் சிறுவர்களுக்கும் ஆபத்தாக அமைகிறது. தமிழ்ச் சிறுவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சி ஏற்படுவதாயின் சிறீலங்காப் படைகள் விலக்கப்படல் வேண்டும்.

> 30,000 படையினரை வன்னியில் சிறுவர் படைகொண்டு விடுதலைப் புலிகள் எதிர்ப்பது என்பது படுமுட்டாளின் கதை.

ஆனால், அதனை சிறீலங்காவின் இன்றைய அரசாங்கம் செயற்படுத்தப்போவதில்லை. 1994–ம் ஆண்டின் சர்வதேச தந்திரோபாயப் புள்ளி விபரத்திரட்டில் 201–ம் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள பின்வரும் பகுதி மிக முக்கியமான ஒன்று.

"தமிழ்ப் பகுதிகளில் உண்மையான இறைமையைக் கொண்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் மிக மிகச் சிறியனவற்றையே தீர்வாக முன்வைக்க முயலும். விடுதலைப் புலிகளோ (ஒரு தேசத்துக்குரிய பண்புகளான) வரி அறவிடுதல், உள்ளூராட்சி நிர்வாகத்தை நடாத்துதல், சீருடை தரித்த பொலிஸ் படையினரையும் இராணுவத்தையும் வைத்திருத்தல் ஆகியவற்றைச் செய்து வருகின்றனர். அவர்களுக்கு இல்லாதது ஒன்றே ஒன்று மட்டுமே. அது சர்வதேச அங்கீகாரம். கொழும்பு இதனைக் கொடுக்க மாட்டாது. கொழும்பு முயற்சித்தாலும் ஒரு கூட்டாட்சிக்கே முயற்சிக்கக் கூடும். ஆனால், விடுதலைப் புலிகளோ தாங்கள் கொண்டிருக்கும் அரசு நோக்கிய அரசு நிலையைவிட அதிகமான ஒன்றின் மூலமே தீர்வு பெற விளைவர். சட்டபூர்வமான தன்னாட்சி நிலையினை ஏற்பதன் மூலம் பாதுகாப்புச் சுமையைக் குறைக்க முயல்வது ஏற்புடையதாக அமையலாம்".

ஆம். சிறீலங்கா அரசாங்கம் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கவில்லை. சர்வதேச தந்திரோபாய அறிக்கை குறிப்பிட்டுள்ள தமிழ்ப் பகுதிகள் மீதான தமிழீழ விடுதலைப்புலிகளின் உண்மை இறைமையைத் தன் செயற்திட்டமாக அரசியல் இலக்காக மட்டுமல்ல தேசிய இலக்காகவும் கொண்டு செயற்படுகிறது.

இந்நிலையில் தமிழ்ச் சிறுவர்களுக்காகத் தலையீடு செய்ய விரும்பும் ஐக்கிய நாடுகள் சபை, சிறீலங்கா தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் எவ்வித அக்கறையும் அற்ற அரசாங்கம் என்பதனைத் தெளிவாகப் புரிந்து செயற்படல் வேண்டும். இவ்வாண்டில் வெளிவந்த Samuel Huntrington எழுதிய The clash of civilisation and the remaking of world order எனும் நூல்கூட சிறீலங்காவின் சிங்கள அரசின் நெகிழ்ச்சியற்ற தன்மை அனர்த்தங்களுக்கு எல்லாம் அடிப்படையாக அமைவதை விளக்கிச் சொல்கிறது. இந்நிலையில் ஐக்கிய நாடுகள்சபை சிறீலங்கா எனும் அமைப்புக்கூடாக தமிழ்ச் சிறுவர்களுக்கு உதவுவதைவிட தமிழ் மக்களின் அமைப்பான தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினூடான அதனுடைய தொடர்புகளை நெருக்கமாக்குவதின் மூலம் இலங்கைத் தீவின் அரசியல் யதார்த்தத்தை உணர்ந்து செயற்படுவது பலனுடையதாக அமையும். இதற்கான தகவல்களையும் ஆதரவையும் வழங்கும் பணியில் உலகப் புலம்பெயர் தமிழர்களாகிய நாம் ஈடுபடுவது நம் இன்றைய தலையாய கடமை.

**பற்றிமாகரன்**



www.tamileelamarchive.com

தமிழீழ ஆவணக் காப்பகம்



# களத்திலிருந்து ஒரு குரல்

நேசத்திற்குரிய எனது மக்களுக்கு!

நேற்றுவரை என் நினைவுச் சரங்களில் சேர்த்து வைத்தவைகளை கோர்வையாக்கித் தர விரும்புகின்றேன் உணர்வுகள் அனைத்தையும் ஒருசேரச் சொரிவதென்றால் காகிதம் போதாது. ஆகவே சிறிது சிறிதாக தொகுத்துத் தருகிறேன்.

மன்னகுளத்தில் எம் மண்ணின் புதல்வர்கள் புரிந்த மறச்சமர்பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். நமது போரியல் வரலாற்றில் புதியதோர் தத்துவத்தை அது எமக்குப் புரிய வைத்தது. ஜெயசிக்குறுவிற்கு எதிரான எமது முறியடிப்பு வன்மையில்கூட இது ஒரு திருப்புமுனை தான். ஒன்றுகுவிக்கப்பட்ட ஒட்டுமொத்த வலுவுக்கெதிராய் எம்மவர் காட்டிய தீரம் இருக்கிறதே, அற்புதம். அதை விபரிப்பதற்கு எனக்குத் தெரிந்த வகையில் முயற்சிக்கிறேன்.

அதிகாலை நேரத்திலேயே சாலையோர முன்னணி நிலைகள் மீது எதிரி தாக்க ஆரம்பித்தான். சமாந்தரமான ஆட்டிலறி மற்றும் பெரிய, சிறிய மோட்டார்களுடன் தடல்புடலான படையெடுப்பு ஆதரவுக்கு ராங்குகளும் சீறத்தொடங்க சம்பிரதாய பூர்வமாக தடைத்தகர்க்க முன்னே பாய்ந்தது சிங்களப் படை. வேகவேகமாக மோட்டார்களைத் திருப்பி – தொடர்புகளைச் சீர்படுத்தி முன்னரே ஆயத்தமாக வைத்திருந்த உதவித் துருப்புகளையும் ஒருங்கிணைத்து, வந்தவனை அடியடியென்று அடித்து, ராங்குகளைச் சேதப்படுத்தி ஆயுதங்களையும் விட்டோடவைத்த திருப்தியில் அப்பாடா என்று போராளிகள் நிமிர்ந்தபோது அந்தப் பகுதியில் ஏற்கனவே மெல்லப் பதுங்கி– ஊடுருவியிருந்த சிறப்பு கொமாண்டோக்கள் மாலதி படையணியின் நிலைகள் மீது தாக்கத் தொடங்க, அந்தச் சமர் உண்மையாகவும் உக்கிரமாகவும் ஆரம்பித்தது.

முகப்பில் நடந்த சண்டையில் பெறுபேறுகளைக் கூட சரிவரத் தெரிந்துகொள்ளாத நிலையில் பக்கவாட்டில் தீவிர தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டதும் இடைப்பாடுகள் எதிர்கொள்ளப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனாலும் மோட்டார்களை வேகமாக நெறிப்படுத்தி, தொடர்புகளைச் சீர்ப்படுத்தி பதில் தாக்குதல் தொடங்கியதும் எல்லாம் சமநிலைக்கு வந்தது. ஆனாலும் சண்டையின் தீவிரம் அதிகரித்துக் கொண்டே சென்றது.

**மனித வாழ்வின் ஆதாரசுருதியே போராட்டம்தான் என நான் நினைக்கிறேன். சுவாசத்திற்கும் பாலுக்குமான சிசுவின் கதறலில் இருந்தல்லவா அது ஆரம்பிக்கிறது. முயற்சித்துப் பெறாதஎதிலுமே சுவைஇருப்பதில்லை, சுகமிருப்பதில்லை. சுதந்திரமும் அப்படித்தான்.**

சண்டையென்றால் சாதாரண சண்டையல்ல. சாவிற்கும் வாழ்விற்கும் இடையேயான சண்டை! வெற்றிக்கும் தோல்விக்கும் இடையேயான சண்டை! மானத்திற்கும் அவமானத்திற்கும் இடையேயான சண்டை! உரிமைக்கும் உன்மத்தவெறிக்குமிடையேயான சண்டை! ஆனால், களத்தில் நின்ற ஒவ்வொருவருமே தோல்வியை வெறுத்தோம். விலை என்னவானாலும் வெற்றி ஒன்றே எல்லோரது குறிக்கோளாக இருந்தது. கட்டளை மையத்திலிருந்தும் இதே கருத்து வலியுறுத்தப்பட்டதும் சண்டை தீவிரமடையத் தொடங்கியது.

அங்குலத்திற்கு அங்குலம் எறிகணைகள் வீழ்ந்து வெடித்து எட்டுத் திக்கும் தரையை உழுதுகொண்டு செல்ல, துப்பாக்கிகளில் இருந்து ஆக்கிரோசமாகப் பாய்ந்த குண்டுகள் வேறுபட்ட சுருதிகளுடன் காற்றைக் கிழித்துச் செல்ல, மரங்களில் இலை என்றும் கிளை என்றும் இல்லாது எல்லாமே புழுதிக்காற்றுடன் கதம்பமாகக் கலந்து எங்கும் சிதற– கந்தக நெடி கலந்த காற்று மண்டலத்தின் மேலே சூரியன் மேற்கு நோக்கி வேகமாக சரியத்தொடங்கினான்.

வெடிமருந்தின் ஆவேசத்திற்கு ஈடுகொடுக்க முடிந்தாலும் பொழுது கழிந்துகொண்டிருப்பது எமக்கு சாதகமானது அல்ல. மாலை மங்கிவிட்டால் மறு ஒழுங்கு செய்ய நேரலாம். எதிரிக்கும் நல்லதொரு அவகாசம் கிடைக்கும். சில நிலைகள் அவன் வசம் வீழ்ந்திருந்த நிலையில் எதிரிக்குப்பலம்பெற தருணம் அளிப்பது விவேகமானது அல்ல. அந்த சந்தர்ப்பத்தை அவனுக்கு தரக்கூடாது என்பதில் போராளிகள் உறுதியாய் இருந்தனர். ஆனாலும் எல்லோரும் களைத்திருந்தோம் என்பதையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும். இந்த சூழ்நிலையில்தான் இறுதிநேர முட்டித் தகர்க்கும் முயற்சி ஆரம்பித்தது.

நிலையைவிட்டு முன்னோக்கியோ அல்லது பின் நோக்கியோ நகர விரும்பும் எந்தப்படையும் இரண்டு போட்டியாளர்களைச் சந்திக்க நேரும் என்பது போர்விதி. ஒன்று நிலை எடுத்திருக்கும் எதிரி, மற்றது நேரம். ஆம்! தாமதிக்கும் ஒவ்வொரு வினாடிக்கும் ரத்தத்தை விலையாகச் செலுத்த



www.tamileelamarchive.com

வேண்டிய நிர்ப்பந்த நிலையில் வேகமான சிறு அணிகள் களத்தில் இறக்கப்பட்டன. இவர்களின் அடிப்படைத் தகமைகளாக எதிர்பார்க்கப்பட்டவை இரண்டு. ஒன்று புயலின் வேகம். அடுத்தது சதுரங்கத்தின் சாமர்த்தியம்.

வளவுக்கு வளவு, வீட்டுக்கு வீடு, அறைக்கு அறை, தெருவுக்கு தெரு, மரத்துக்கு மரம் என துல்லியமாக வீசப்பட்ட எறிகணைகள் மடியிலே வெடித்ததுபோல் வீழ்ந்து வெடிக்க ஆடிப்போனான் எதிரி. கணை வீச்சினாலேயே உதவிக்கு வந்தவர்களையும் அணைபோட்டுத் தடுத்தனர் எமது மோட்டார் வீரர்கள். அவ்வளவு தூரம் செறிவானதும் வழுவற்றதுமான கணை வீச்சு; எதிரியை மட்டுமல்ல எங்களையும் பெருமையுடன் வியப்படைய வைத்தது. குழுக்கள் தொடர்பின்றித் துண்டறுபட காயங்களும் சாவுகளும் மன உறுதியை முற்றிலும் உருவியெடுக்க, உருக்குலைந்த உடல்களைப் பார்த்து பீதிவசப்பட்டவர்களாய் எதிரிகள் செயலிழந்தனர். இதற்கிடையில் எமது பாய்ந்து செல்லும் அணியினர், எதிரி வந்த வழியை இடைவெட்டி மறித்து, சகல நிலைகளையும் பழையபடி கைப்பற்றிவிட, உள்ளே மறிக்கப்பட்டவர்களை அம்போ என்று கைவிட்டு விட்டு அவசரமாகப் பின்வாங்கியது சிங்களப் பெரும்படை. நிலைமை பூரண கட்டுப்பாட்டில் வரும்போது முற்றிலும் இருட்டிவிட்டது. ஆனால் எங்கள் முகங்கள் அப்போதுதான் புலர ஆரம்பித்திருந்தன. பெருந்தொகை இராணுவ உடலங்கள் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் அனுப்பப்பட்டதையும், கைப்பற்றிய ஆயுதங்களின் விபரப் பட்டியலையும் நீங்கள் படித்திருப்பீர்கள் அந்தச் சண்டையின் முடிவில் மடிந்துபோன எம் வீரர்களின் உடல்களைச் சுமந்த போது உள்ளத்தில் ஏற்பட்டது பூரிப்பா, புளகாங்கிதமா, துக்கமா, சந்தோஷமா? சரியாக எனக்குத் தெரியவில்லை. ஆனால் கண்கள் கசிந்திருந்தது என்பது மட்டும் உண்மை.

ஆரம்பத்தில் எதிரியிடம் இழந்துவிட்ட ஓரிரு நிலைகள் போக எஞ்சிய அத்தனை நிலைகளிலும் அசையாது நின்று– அந்த நாளில்முடிவை வெற்றியை நோக்கித் திருப்பிய மாலதி படையணியைச் சேர்ந்த சகோதரிகளின் வீர உணர்வு மெய் சிலிர்க்க வைத்தது. இராணுவத்தால் சூழப்பட்ட ஒருநிலையிலே, சக தோழிகள் விழுப்புண் அடைந்தும், வீரச்சாவடைந்தும் செயலிழந்து விட்ட கட்டத்தில் தனியொருவளாக நின்று கைவசமிருந்த அனைத்து ரவைகளையும் அடித்துத் தீர்த்து – மீண்டும் அந் நிலைகள் எம் வசம் வரும்வரை தாக்குப் பிடித்த நீலாம்



பரியின் மனவலியே உங்கள் தினப் பதிவில் குறித்து வையுங்கள் வீரத்தின் இலக்கணத்தை புறநானூற்றில் மட்டும் தேடிக்கொண்டிருப்பவர்களிடம் அதனைக் காட்டுங்கள். உச்சி குளிர்ந்து போகட்டும்.

பலம் பார்த்து, தாக்குவதற்கு வாகான வளம் பார்த்து, இடம் பார்த்து, இருட்டான காலம் பார்த்து, கொல்லைப்புறத்தில் கோள் போடும் திருடனைப் போல் மெல்லப்புகுந்து மெல்லியலார் என்று முற்காலத்தில் சொல்லப்பட்ட பெண் புலிச்சகோதரிகளிடம் செம்மையாகி வாங்கி ஓடிய சிப்பாய்கள், பெண்களிடம் தோற்றோமே என்று அவமானமாகக் கருதக் கூடும். ஆனால் என்னிடம் இன்னுமோர் கருத்தும் உண்டு. வார்த்தைகளால் மட்டும் வனிதையர்தம் சமத்துவத்தை வலியுறுத்தும் மானுடர்க்கு இது ஒரு நல்ல முன்னோட்டம். முடியுமானால் பின்பற்றிப் பார்க்கட்டும். அடியெடுத்துக் கொடுத்திருக்கும் அண்ணனின் சாதனையில் ஓர் பிடி எடுத்துப் பார்க்கட்டும் திராணி இருந்தால்.

முன்பெல்லாம் என் ஆன்மாவிற்கு வலியெடுக்கும் போது நான் சலித்து விட்டேனோ என்றும் எண்ணுவதுண்டு. ஆனால் உங்களுக்கு எழுத ஆரம்பித்த பின்புதான் புரிந்தது: இது பிரசவ வேதனை என்று. இதுபோன்ற வலியெடுத்த இதயங்கள் இங்கே எத்தனையோ இருக்கின்றன. அவர்களுக்கெல்லாம் எழுத முடியுமானால் இதுவரை எத்தனையோ வீரகாவியங்கள் எம் மத்தியில் மலர்ந்திருக்கும். ஆனாலும் அவைகளை வெளிக்கொணர ஏதாவது செய்யவேண்டுமென விரும்புகிறேன்.

மனித வாழ்வின் ஆதார சுருதியே போராட்டம்தான் என நான் நினைக்கிறேன். சுவாசத்திற்கும் பாலுக்குமான சிசுவின் கதறலில் இருந்தல்லவா அது ஆரம்பிக்கிறது. முயற்சித்துப் பெறாத எதிலுமே சுவை இருப்பதில்லை, சுகமிருப்பதில்லை. சுதந்திரமும் அப்படித்தான். இதை உணர்ந்து கொள்ளும் யாவர்க்கும் சிறிய பங்களிப்பையாவது செய்யவேண்டும் என்ற எண்ணம் எழுவது இயல்பே. அவ்வாறான உணர்வூட்டம் உள்ளவர்கள் இடத்தில் ஒன்று சொல்வேன்; இதைவிட தருணம் வேறில்லை!

நிற்க, சமரிலே தோல்வி கண்டது எதிரியின் முன்னணிச் சிறப்புப் படைகள் மட்டுமல்ல, முயற்சியின் விளிம்பில் நின்று முழுமூச்சாய்த் தயாரித்த திட்டமும்தான் என்பதை எதிரி உணர்ந்து கொண்டதால் சில காலம் வாலைச் சுருட்டிக் கொண்டிருந்ததை அறிவீர்கள். ஆனாலும் அரசியல் ஆதாயங்கள் வேண்டுமல்லவா? அதற்காக அவன் மீண்டும் வந்தான். அந்தச் சமரையும், புகழ் பூத்த வடமராட்சி கடற் சமரையும் கிளிநொச்சியில் நாம் கொடுத்த அடியையும் பற்றி அடுத்தமுறை விரித்துரைக்கிறேன். இப்போதைக்கு முடித்து வைக்கிறேன்.

— நிலைகளுக்குப் பின்னிருந்து ஒரு நேசநெஞ்சம்.



www.tamileelamarchive.com

தமிழ்ம ஆவணக் காப்பகம்




அச்சுப்பதிப்பு வாசன் அச்சகம் லண்டன் 0181 646 2885

www.tamileelamarchive.com